நெல்லை வேந்தர்

எம். எஸ். சுப்பிரமணிய ஐயர்

ஆசிரியர் நூற்பதிப்புக் கழகம்
53-56, பவழக்காரத் தெரு : : சென்னை 1

பதிப்புரிமை] 1955 [விலை

முதல் பதிப்பு—பிப்ரவரி 1955.

Progressive Printers, Madras-1.

முன்னுரை

பெருமக்களின் பிறப்பிடம் நமது பாரத பூமி. அதன் ஒரு பாகமான தமிழகம் அத்துறையில் தலை சிறந்ததாம். அரசியல் அறிஞருக்குத் தமிழகமே தாயகம் என்னலாம்.

இன்றும் மத்திய அரசாங்கத்திலே அரசியல் துறையில் தமிழர் மேம்பட்டு விளங்குகின்றனர். தமிழகத்திலே முந்நூறு வருஷகாலம் நாயக்க மன்னர் ஆட்சி செலுத்தினர்.

ஆயினும் ஆட்சியின் பொறுப்பை ஏற்று அதனைப் பண்புடன் நடத்தி வந்தோர் நம்மவரான தமிழரே. அந்நாயகரின் காலத்திலே திருநெல்வேலிச்சீமையின் அதிபராக ஆண்மை செலுத்தினோர் பலராம்.

அப்பலரில், தளபதி வடமலையப்ப பிள்ளையன், மாதை மன்னன் வேங்கடேசன் ஆகிய இருவரின் அரிய சாதனைகளை இந்நூலில் சுருங்கக் காணலாம். தனிப் பெருமை வாய்ந்த அவ்விருவரின் வரலாறு நம்மவருக்கு ஓர் இன்பமும் சுவையும் அளிக்குமென நம்பும்

ஆசிரியர்
M. S. சுப்பிரமணிய ஐயர்.

பொருளடக்கம்

			பக்கம்
1.	தோற்றுவாய்	....	1
2.	தென் பாண்டி	....	5
3.	வளரும் பயிர்	....	12
4.	அரசு முறை	....	17
5.	குதிரை ஏற்றம்	....	23
6.	தமிழன்பு	....	28
7.	பக்தரின் புலம்பல்	....	33
8.	ஐயன் கருணை	....	40
9.	அழகர் பணி	....	45
10.	முருகதாஸன்	....	51
11.	வடமலேந்திரன்	....	56
12.	மாத்தூர் மகிமை	....	60
13.	உயர் குடும்பம்	....	64
14.	மதி அமைச்சன்	....	68
15.	மனநலம்	....	72
16.	இரவில் பவனி	....	76
17.	அணி வகுப்பு	....	80
18.	ஞான தீபம்	....	84
19.	இலக்கண விளக்கம்	....	88
20.	புகழ் மாலை	....	92
21.	முடிவுரை	....	96

நெல்லை வேந்தர்

—— :o: ——

1. தோற்றுவாய்

"செந்தமிழ் நாடு" என்னும் சீரிய தலைப்பில், பத்துப் பாடல்கள் பாடியுள்ளார் பாரதியார். அவற்றில் ஒரு பாட்டிலே, "எங்கள் தந்தையர் நாடு என்ற பேச்சினிலே, ஒரு சக்தி பிறக்குது மூச்சினிலே" என்று அவர் குறிக்கிறார். நமது மூதாதையர் சாதித்த அனைத்தையும் எண்ணிப் பார்த்தால், நமக்கெல்லாம் ஒப்பற்ற சக்தி யொன்று உதிக்கும் என்பதே அவர் விழுமிய கருத்தாம்.

நமது பண்டைப் பார்த்திபரை நினைக்க நினைக்க, நமக்கு ஓர் அரிய உணர்ச்சி உண்டாகும். எத்தகைய உணர்ச்சி அது? "இத்துணை அறிவாற்றல்களா அவருக்கு? நாம் அன்னவரின் வழியில் வந்தவர்கள் அன்றோ? அவ்வாறே அறிவாற்றல் காட்டி, நாமும் மேம்பட வேண்டும்," என்பதேயாம்.

இமயமலையோ விண்ணை இடிக்கும் உயர்வும் வலிவும் வாய்ந்த சிகரம் உடையது. அத்தகைய மலையையும் அடிக்கும் திறன் உடையார் நமது அரசர் என்று அவர் சுட்டிக் காட்டுகிறார். மேலும் சிங்களம், சாவகம் முதலிய தீவுகள் பலவற்றினுக்கும் நமது முன்னோர் சென்று, அங்கே கொடி தூக்கினர் என்றும் அவர் அறிவுறுத்துகிறார்.

அங்கெல்லாம் கொடி தூக்கியதின் கருத்து யாது? அங்கே வாழும் மக்களை அடக்கி யொடுக்கி, அவர்களின் மீது ஆட்சி செலுத்துவதற்கன்று. ஆனல், அவர்களுக்கு அறிவும் ஞானமும் ஊட்டி, உயர்வு அளிக்கவுமே கொடி போட்டனர். வேற்றிடங்களில் எய்திய விழுப்பம் அது! நமது நாட்டிலே எப்படி?

நம் தமிழகத்திலே மதுரை மாநகரில் நாயக்க மன்னவர் என்போரை நிலைநாட்டி, அன்னவருக்கு உற்ற துணையாக நின்று, மதுரை, திருநெல்வேலிச் சீமைகளைப் பல வழிகளிலும் பண்புறச் செய்தவர் அரியநாத முதலியார் என்பவர். அவர் ஆயிரங் கால் மண்டபங்கள் அமைத்ததுடன் ஆலயத் திருப்பணிகளும் அளவற்றன செய்தார்.

மதுரை மீனட்சி அம்மனின் ஆலயத்திலே அருஞ்சிலை வடிவில் அசுவாரூடராய் அவர் காட்சி அளிப்பதை எல்லாரும் இன்றும் பார்க்கலாம், பரவசம் எய்தலாம். துருக்கப்படை வெள்ளத்தின் முன்னே படாதபாடு பட்டுழன்ற தமிழகம் அப்பால் தலைதூக்கியதற்கு அவரது பெரு முயற்சியும் பேரறிவுமே காரணமாம் என்பது வெள்ளிடைமலை.

பின்னளிலே ஜமீன்தார்கள் என வழங்கிய பாளையக்காரர் என்போரை ஏற்படுத்தி, அவர்களின் நிலைமை, தன்மை இவற்றை வகுத்தும் தொகுத்தும் வைத்த பெருமை அவரையே சாரும். அவர் நிறுவிச் சென்ற நாயக்க அரசு இருநூறு வருட காலம் வரைத் தமிழகத்திலே சாலச் சிறந்து விளங்கிற்று.

கி. பி. 1539-ஆம் ஆண்டு முதல் கி. பி. 1736-ஆம் ஆண்டு வரையில் ஒருவர் பின் ஒருவரா

கப் பதின்மூவர் தமிழகத்தில் பரிபாலனம் பண்ணி வந்தனர். அன்னவர் அனைவரும் வடுக மரபினர். நாட்டின் நலத்தையும் ஆட்சியின் திறத்தையும் கருதி இத் தமிழகத்தைப் பற்பல சீமைகளாக அவர்கள் வகுத்திருந்தார்கள்.

அச் சீமைகளில் திரிசிராப்பள்ளி, திருநெல்வேலி, சத்திய மங்கலம் இவை மூன்றும் முக்கியத்துவம் பெற்றனவாகும். ஒவ்வொரு சீமைக்கும் ஒரொருவர் அதிபராக அமைந்தனர். அமைந்த அனைவரும் தமிழரே. சீமையின் ஆட்சியிலே அந்த அதிபர்களுக்கு எல்லா அதிகாரங்களும் உண்டு. அவர்களைத் தனிவேந்தர் என்று சொல்லலாம்.

ஆங்காங்கே ஏற்பட்டிருந்த பாளையக்காரர் அனைவரும் அந்த அதிபர்களுக்கு உட்பட்டே நடத்தல் வேண்டும். அந்த அதிபர்களில் மிக்க மேம்பாடு உடையோர் திருநெல்வேலிச் சீமையின் அதிபர்களாவர்.

பாளையக்காரரிட மிருந்தும் பிறரிடமிருந்தும் இறைப் பணம் வசூல் செய்தல் அந்த அதிபர்களின் பொறுப்பு ஆகும். வசூலித்த அப் பணத்தில் சீமைச் செலவுக்கு வேண்டியதை அவர்கள் எடுத்துக் கொண்டு, எஞ்சியதைக் கணக்கு வழக்குடன் மதுரைக்கு அனுப்பிவைத்தல் வேண்டும். மற்றப் படி அவர்கள் தனியரசர்களே.

சீமை மக்களின் நல பலங்களை வளர்த்தலும், அன்னவரின் சுக வாழ்வைப் பெருக்குதலும் அவர்களின் கடமையாம். மக்களிடம் தாய் போல் அன்பு காட்டித் தந்தைபோல் அன்னாரைப் பாதுகாத்துத் துலாக்கோல்போல் நடு நிலைமை தவறாது நீதி செலுத்தி, அந்த அதிபர்கள் செங்கோல் ஓச்சி வந்தனர்.

எங்கும் குற்றம் கெடுத்தும், கொற்றம் எடுப்பித்தும், தம் குறை நீக்கியும், பிறர் குறை தீர்த்தும் முறை புரிவதில் அவர்கள் இம்மியளவும் தவறவில்லை. அன்றியும் அவர்கள் நமது தமிழ் மொழியையும் தமிழ் வாணரையும் தலைமீது தாங்கிப் பேணி வந்தார்கள்.

மேலும் அத் திருநெல்வேலிச் சீமை அதிபர்களோ புவிவேந்தராக விளங்கியதுடன், கவிக்கு அரசராகவும் துலங்கா நின்ற தனிப் பெருமை வாய்ந்தவர்களாயிருந்தனர். சுருங்கச் சொன்னால், அவர்கள் புலவர் சிகாமணிகளாகவே பொலிந்திருந்தனர். புலவரே பாவலராய்த் திகழ்ந்த உண்மையினை உணர நம்மவர் ஆவலே கொள்வர் என்பது உறுதி.

அன்னவரில் இருவரைக் குறித்து இந்நூலில் விவரிப்போம். ஒருவர் தளபதி வடமலையப்ப பிள்ளையன் என்பவர். மற்றவரோ மாதை மன்னன் வேங்கடேசன் எனப்படுவார். இருவரும் மகா தெய்வ பக்தர். போர் நூலிலும் மிகுந்த பயிற்சி பெற்றவர்களாவர்.

இருவரிலே முன்னவர் இரண்டு புராணங்கள் பாடியவர். பின்னவரோ "பிரபோத சந்திரோதயம்" அல்லது "மெய்ஞ்ஞான விளக்கம்" என்னும் அரிய ஞானச் செய்யுள் நூல் யாத்தவர். தவிர, "இலக்கண விளக்கம்" என்னும் நூல் செய்வித்தவருமாம். இருவரும் புலவர்பால் பாமாலை பெற்றவர்.

முன்னவரைக் குறித்து "வடமலை வெண்பா" என்னும் பிரபந்தம் பெருமையுற எழுந்துளது.

பின்னவரைப் பற்றியோ "பண விடு தூது" என்னும் பிரபந்தம் சிறப்பாகப் பேசும்.

சிறிது காலத்துக்கு முன்னர் சீரிய கொற்றவராக அமர்ந்து, நேர்மையுடன் அரசு புரிந்து ஆண்மையும் திண்மையும் அன்பும் தயையும் பரப்பி வாழ்ந்த இருவரின் வரலாற்றை ஒரளவேனும் நம்மவர் உணர்ந்து கொள்ளுதல் அவசியம் அன்றோ ?

குற்றம் இலனாய்க் குடி செய்து வாழ்வானைச்
சுற்றமாச் சுற்றும் உலகு !

2. தென் பாண்டி

தமிழகம் சேர, சோழ, பாண்டி என்னும் மூந் நாடுகள் கொண்டதாம். மதுரை, இராமநாத புரம், திருநெல்வேலி ஆகிய மூன்று ஜில்லாக்கள் அடங்கிய நாடே பாண்டி நாடு எனப்படும். சேர சோழ நாடுகளுக்கு இடையே உள்ள நில மண்டலம் அது. சரித்திர குல வேந்தரான பாண்டியர் என் போர் அதனை வழிவழியாக ஆண்டு வந்தனர்.

அதனால், வழுதி நாடு எனவும் அது வழங்கப் படும். பாரத பூமியின் தென்பால் இருத்தலால், அது தென்னாடு எனவும் பெயர் பெறும். எந்த நாடும் வியந்து போற்றும் பெருமை வாய்ந்தது அவ் வழுதி நாடு. தென் மதுரை நாடு எனவும் அதற்கு ஒரு பெயர் உண்டு.

"திருவிளையாடல்" புராணம் என்பது மதுரை ஆலவாய்க் கடவுளின் பெருமையை எடுத்துரைக் கும். அதில் கூறிய வண்ணம், சிவபெருமான், குமாரக் கடவுள், உமாதேவியார் என்னும் இம் மூவரும் முறையே சோமசுந்தர பாண்டியன்,

உக்கிர குமார பாண்டியன், தடாதகைப் பிராட்டியார் என்று பெயர் தாங்கி அந்நாட்டினை முன்னம் ஆண்டு வந்தனர் என்பர்.

எல்லாம் வல்ல இறைவன் அந்நாட்டினை உடைமையாகக் கொண்டு, முறை புரிந்து வந்தமையால், "தென்னாடுடைய சிவனே போற்றி" என்று பக்தர் பேசுவர். அவ்வாறு மணிவாசகமாகிய தம் திருவாசகத்தில் போற்றிய மாணிக்க வாசகப் பெருமான் அந் நாட்டிலே திருப்பெருந் துறை (ஆவுடையார் கோவில்) என்னும் தலத்தில் தோன்றியவர்.

தெற்கே கன்னியா குமரியையும், வடக்கே வெள்ளாற்றையும், கிழக்கே கடலையும், மேற்கே பெருவழியையும் எல்லையாகக் கொண்டது அப் பாண்டி நாடு என்று கவிச் சக்கரவர்த்தியான கம்பர் கூறுவார். சிறந்த வீரர் பலர் திசை எங்கும் இசை பரப்பி, அந் நாட்டில் வாழ்ந்து வந்தனர். செந்தமிழ் மொழி பிறந்து வளர்ந்த நிலையமும் முதல் இடை கடைச் சங்கங்களான முச் சங்கங்களும் தோன்றியதும் அங்கேதான்.

தொன்று தொட்டே, விழுமிய வளங்கள் பலவும் வாய்ந்தது அந்நாடு. வைகை, தாமிரபரணி என்னும் வியன் நதிகள் அந்நாட்டினை வளம் படுத்தும். தமிழ் மொழிக்கு ஆதி தந்தையான அகத்திய முனிவர் வாழும் பொதியமலை என்பதும் அந் நாட்டில் உள்ளது.

அப் பொதிய மலையிலே கந்தம் கமழும் சந்தன மரங்கள் விளையும். அந் நாட்டை அடுத்த கடலிலே முத்தும் பவழமும் கிடைக்கும். நாட்டு மக்களிடத்தே தருமம் செழிக்கும். அவர்களது மதியிலே வேத

பக்தி துலங்கும். முன்னம் அங்கே முதல், இடை, கடை என்னும் மூன்று தமிழ்ச் சங்கங்கள் இருந்து வந்தன. எண்ணற்ற புலவர் ஆங்கிருந்து தமிழை வளர்த்து வந்தனர்.

பாண்டிய மன்னர் கொடை, வீரம், நீதி இவற்றில் மேம்பட்டு நின்றனர். ஆதலின், குடி மக்கள் எல்லா நலன்களையும் எய்தி, இன்புற்று இருந்தார்கள். வளமெலாம் நிறைந்து நின்றமையால், பிணி, பகை, பசி முதலிய தீமைகள் அங்கே அணுகாதிருந்தன.

தமிழின் ஐம்பெருங் காப்பியங்களில் ஒன்றான சிலப்பதிகாரம் செப்பும் வண்ணம், பிறப்பிலேயே பகை உணர்ச்சியுள்ள பாம்பும் தேரையும், புலியும் பசுவும், தம்முள் விரோதம் என்பது இல்லாமல், ஒன்றுக்கொன்று பாசம் கொண்டு, அங்கு ஒருங்கு வாழ்ந்து வந்தன. இதற்கு அரசனது செங்கோல் முறைமையே காரணம்.

அந் நாட்டின் ஒரு பாகமான திருநெல்வேலிச் சீமையே தென் பாண்டி நாடு எனப்படும். இது சுமார் ஏழாயிரம் சதுரமைல் பரப்புள்ளது. தென் வடல் நீளம் நூற்று இருபது மைல். கீழ்மேல் அகலம் சுமார் அறுபது மைல். இது ஏறக்குறைய முக்கோண வடிவம் வாய்ந்தது.

இதன் மேல எல்லை மேற்குத் தொடர்ச்சிமலை. கிழக்கு எல்லை கடலாம். அகத்திய மலை என்பது இங்கே மிக உயர்ந்த குன்று. அம்மலை ஆறாயிரம் அடிக்குமேல் உயரம் உள்ளது. அம் மலையில் முன்னர் வான சாஸ்திர ஆராய்ச்சி நிலையம் ஒன்று இருந்தது.

மகேந்திரகிரி என்பது மற்றொரு குன்று. இது ஐயாயிரம் அடி உயரம் கொண்டது. இராம தூதனை ஆஞ்சனேயன் தென்கடலைத் தாண்ட, அம் மகேந்திரகிரியிலிருந்தே தாவிக் கிளம்பினான் என்று இதிகாசங்கள் உரைக்கும்.

குற்றால நீர் வீழ்ச்சி தென்பாண்டி நாட்டில் உள்ளதாம். அந் நீர்வீழ்ச்சியும் சாரலும் மாந்தருக்கு ஆரோக்கியம் ஊட்டும். ஆதி பாண்டியர் தலை சாய்ந்த பின்னர், தென்காசி நகரமே கடை நாள் பாண்டியரின் இராஜதானியாக விளங்கியது. அப்போது கொற்கை என்னும் துறைமுகமும் தலை நகராக இருந்தது என்பர்.

தென்பாண்டி நாட்டின் முக்கிய நதிகள் தாமிரபரணியும், வைப்பாறுமாம். தாமிரபரணியின் முகத்துவாரத்தில் தான் கொற்கை நகரம் துலங்கியது. அதன் அருகே காயல்பட்டினம் என்பது இருந்தது. அப் பட்டினம் ஒரு சமயம் மிகவும் பிரபலமாயிருந்த ஒரு துறைமுகமாம்.

அரேபியா நாட்டிலிருந்து முன்னம் எண்ணிறந்த அரபிக் குதிரைகள் அக் காயல் பட்டினத்தில் வந்திறங்கும். "செத்தும் கொடுத்தான் சீதக்காதி" என்னும் பழமொழிக்கு இலக்கான சீமான், அப்பட்டினத்தில் வாழ்ந்து வந்தனன். முகம்மதியரிலே மரக்காயர் என்னும் வகுப்பினர் அப் பட்டினத்தில் மிகுதி. அவர்களில் சில புலவர்களும் இருந்தனர்.

கடைநாள் பாண்டியரில் அதிவீர ராம பாண்டியன் என்பார் தலை சிறந்தவர். இவர் தமிழிலே பெரும் புலவர். குழந்தைகள் நலம்பெற 'நறுந்தொகை' என்னும் சிறு நூல் செய்தனர்.

புலவருக்கு அமுதான 'நைடதம்' என்பதும் இவர் பாடியதேயாம். தென்காசி நகரையே இவர் தமது இராஜதானியாகக் கொண்டிருந்தார்.

பாண்டிய மன்னர் தலைசாய்ந்த பின்னர், விஜயநகர சாம்ராஜ்யத்தின் ஆளுகைக்கு நமது தமிழகம் உட்படலாயிற்று. உட்படவே அந்த சாம்ராஜ்யத்தின் பிரதிநிதிகள் தஞ்சையிலிருந்தும் மதுரையிலிருந்தும் அரசு செலுத்தி வந்தனர்.

அப் பிரதிநிதிகள் 'நாயக்க மன்னர்' எனப்படுவர். மதுரை நாயக்க மன்னர்களுக்குத் திரிசிராப்பள்ளியும் சிறிது காலம் தலைநகராக இருந்து வந்தது. அந்நாயக்கரே பாண்டி நாடு முழுவதையும் ஆண்டு வந்தனர். அம் மன்னவரை நிலை நாட்டியவர் தளவாய் அரியநாத முதலியார் என்பவர்.

அரசியலின் நலத்தைக் கருதி, இத் தமிழகத்திலே எழுபத்திரண்டு பாளையக்காரரை அம் முதலியார் அமர்த்தி வைத்தார். அப் பாளையக்காரர் குட்டி அரசரே போல் குலவி நின்றனர். இவர்களுக்குச் சேனை, கோட்டை முதலியன உண்டு. தங்கள் பாளையங்களில் சர்வாதிகாரமும் இருந்தது.

தென் பாண்டி நாடான திருநெல்வேலிச் சீமையில் முப்பத்திரண்டு பாளையக்காரர் இருந்தனர். அவர்களில் பாஞ்சாலங் குறிச்சியைச் சேர்ந்த கட்டபொம்மு என்பானும், நெல்கட்டும் செவ்வல் என்னும் பாளையத்தின் அதிபனான புலித்தேவன் என்பானும் தலைசிறந்தவர்கள்.

மதுரை நாயக்க மன்னவர் தெலுங்கர். எனவே தமிழ் நாட்டினுக்கு அன்னார் அன்னியர். வழி வழியாகப் பற்பல துறைகளிலும் பெருமிதம்

படைத்துள்ள தமிழர் அந்த அன்னிய ஆட்சியைக் கண்டு வெறுக்கா வண்ணம், தமிழரின் நடை, உடை, நாகரிகம் இவற்றை நன்குணர்ந்த தமிழ் பெருமக்களைக் கொண்டே ஆட்சியை நடத்தி வருதல் வேண்டும் என்று அம் மன்னருக்குத் தோன்றியது.

ஆனது பற்றி, நம் தமிழகத்தை அவர்கள் ஐந்து மாகாணங்களாகப் பிரித்தனர்; ஒவ்வொன்றினுக்கும் ஒரொரு தமிழ்ப் பெருமகனையே அதிபனாக அமர்த்தினர். அப் பெருமகனே தளபதியாகவும் மாகாண கவர்னராகவும் விளங்கி வந்தான்.

அம் மாகாணங்களில் ஒன்று தென் பாண்டி நாடான திருநெல்வேலிச் சீமை. இச் சீமையின் அதிபனே மற்ற மாகாணங்களின் அதிபரைவிட மேன்மை வாய்ந்தவன். மதுரை அரசாட்சியிலே செல்வாக்கும் மிகுந்தவன்.

திருநெல்வேலிச் சீமையின் தலைநகரம் திருநெல்வேலி எனப்படும். அச் சீமையில் பிரசித்தி பெற்ற ஆலயங்கள் பல உள்ளன. திருச்செந்தூர், ஆழ்வார் திருநகரி, ஸ்ரீவைகுண்டம், திருநெல்வேலி, நாங்குனேரி, ஸ்ரீ வில்லிபுத்தூர், தென்காசி, பாபநாசம், கழுகுமலை, திருக்குற்றாலம் இவை மிகச் சிறந்தவை.

திருநெல்வேலி நகரிலே நெல்லையப்பர் கோவில் மிகவும் பெரி போனது. ஈசனது திருநாமம் நெல்லையப்பர்; அம்மை காந்திமதி என்று அழைக்கப் பெறுவாள். மதுரை நாயக்க வேந்தரில் முதல்வனான விசுவநாத நாயக்கன் என்பான் அந்த நகரைப் புதுப்பித்தான். அதன் பின்

ஆலயமும் நன்கு அமைக்கப் பெற்றது. நகரைச் சுற்றி நெல்வயல்கள் நிரம்பி இருக்கும். அதுபற்றி நெல்வேலி என்று பெயர் கொண்டது போலும்.

பதினெட்டாம் நூற்றாண்டின் முன்பாதி வரையில் மதுரை நாயக்க மன்னரின் ஆட்சியே தென் பாண்டியில் ஓங்கி நின்றது. அப்பால் மூகம்மதியரின் ஆதிக்கத்துக்குள் அது அடங்கலாயிற்று. ஆற்காட்டு நவாப் என்பவர் அரசுரிமை பூண்டார். அப்போது பாளையக்காரர் தனியரசாகத் தருக்கி எழுந்தனர்.

அவர்களை அடக்கியாள ஆற்காட்டு நவாபினல் ஆகவில்லை. ஆங்கில வர்த்தகக் கும்பினியார் அச்சமயம் ஆதிக்கம் வகிக்கத் தொடங்கினர். அது கண்டு பாளையக்காரர்கள் பதைத்து எழுந்தார்கள். அவர்களுடன் கும்பினியார் ஓர் ஐம்பது வருஷ காலம் போராடி நிற்க நேர்ந்தது.

அக்காலத்தில் பாளையக்காரரின் சேனை கலைக்கப்பட்டது. கோட்டைகள் இடிக்கப் பெற்றன. ஆயுதங்கள் பறிமுதலாயின. பாஞ்சாலங்குறிச்சி வேந்தன் கட்டபொம்மு தூக்குமேடையில் கண் மூட நேர்ந்தது. பின்னரேதான் கும்பினியாரின் வசப் பட்டது அத் தென் பாண்டி நாடு.

தென் பாண்டி நாட்டை ஆண்டு வந்த பஞ்ச பாண்டியர் என்போர் மதுரையிலேயே நாயக்கவரசு முளைப்பதை முடிவு வரையில் எதிர்த்துப் பார்த்ததை இங்கே குறிப்பிடுதல் வேண்டும்.

I. வடமலையப்ப பிள்ளையன்

3. வளரும் பயிர்

காவிரி நதியின் கரையில் திருமால் கோயில் கொண்டிருக்கும் அரங்க ஸ்தலங்கள் மூன்றும். அவை ஆதி, மத்திய, அந்த அரங்கங்கள் எனப் படும். அவற்றுள் திரிசிராப்பள்ளிக்கு அடுத்த ஸ்ரீரங்கம் என்பது கடை அரங்கமாம். அந்த அரங்கத்தினுக்கு அருகே திருவளர் சோலை என்று ஒரு கிராமம் உண்டு. முன்னம் திருமகள் அக்கிரா மத்திலே நடனம் செய்து நின்றாள் என்பர் பெரியோர்.

திருவளர் சோலை என்னும் அக் கிராமமே தளபதி வடமலையப்ப பிள்ளையனது தாய் மாமனது வாசஸ்தலமாம். மாமனது மாளிகையிலேயே அப் பெருமகன் பிறந்தவன் என்று சொல்லவேண்டும். சிசுப்பருவம் நீங்கியதும், அப்பெருமானைக் காவ னூருக்கு எடுத்துச் சென்றனர். அக் காவனூரே நம் பிள்ளையனது தந்தை வாழ்ந்து வந்த இடமாம்.

தந்தை மட்டுமா? பல்லாண்டு பல்லாண்டாக அவனது மூதாதையரும் அங்கே வசித்து வந்தனர். அஃது மதுரை மாநகரை அடுத்த திருப்பரங்குன்றம் என்னும் தலத்தைச் சார்ந்ததாம். காவை என்று அதனை இப்போது வழங்குவர். தமிழ்ப் பிரபந்தங் களிலும் காவை எனும் பெயரையே காணலாம். அந்த ஐயன் கார்காத்த வேளாண் மரபில் வந்தவர்.

அவ் வடமலையின் மூதாதையரில் ஒருவர் காவை அம்பலவாணத் தம்பிரான் எனப்படுவார். அவர் பதினைந்தாம் நூற்றாண்டின் கடைசியில்

வாழ்ந்திருந்தவர். அந் நாள் வேளாண் மரபினரில் பலரும் பெரு வள்ளல்களாக விளங்கி வந்தனர். அம்பல வாணரோ நனி சிறந்த வள்ளலாம். அத்துடன் பாவலர்க்கு நேசர்; நாவலர்க்கு நண்பர். எல்லாவற்றிற்கும் மேலாகப் பேருபகாரி.

கற்றோரைக் கற்றோரே காமுறுவர் அன்றோ! அம்பல வாணரும் அதி சிறந்த பாவாணராம்; அன்றியும் சமய அறிவிலும் ஞானத்திலும் மிகச் சிறந்தவர்; பற்பல சைவ நூல்கள் செய்த பெருமை வாய்ந்த ஆசிரியர்; யோக மார்க்கங்களை நன்கு அறிந்தவர்; 'பிராசாத அகவல்' என்னும் நூல் இயற்றியவர்.

வேதாந்தச் சித்தாந்தச் சாத்திரங்கள் அவருக்குக் கரதல பாடம். அவற்றில் ஐயம், திரிபு கொள்வோர் அனைவரும் அவரை விரும்பி அடுத்து, அறிவு விளக்கம் பெற்று ஆனந்தம் அடைதல் வழக்கம். அந்த அகவலைத் தவிர வேறு சில சித்தாந்த நூல்களும், அவர் இயற்றியுள்ளார்.

கடை நாளில் அவர் துறவு பூண்டு விட்டார். அத் துறவு நிலையில் அவரிடம் வேதாந்த, சித்தாந்த பாடம் கேட்டோர் பற்பலராவர். துறவுக் கோலத்துடன் தூயத்துறவு உள்ளமும் அவரைப் போல் படைத்தாரைக் காண்டல் அரிதாம். அவரது வழி முறையில் வந்தவர் நமது வடமலை.

சத்து அமைந்துள்ள நிலத்தில் வித்திட்டால் முளைகள் செழித்து விளங்கும். அது கொண்டு, நிலத்தின் நலத்தை நாம் கண்டு கொள்ளலாம். வழி வழியாக நற்குணம் அமைந்துள்ள குடியில் வந்தோர் பிள்ளைப் பருவத்திலேயே வாய்மையும், இனிமையும் தோன்றத் திகழ்வர். அவரது சொல்

லால் குலத்தின் நலத்தை எல்லாரும் அறிந்து கொள்ளலாம். திருவள்ளுவ நாயனார்,

"நிலத்திற் கிடந்தமை கால் காட்டும்; காட்டும்
குலத்திற் பிறந்தார் வாய்ச் சொல்".

என்று கூறியுள்ளார்.

ஐந்தாண்டும் நிரம்பப் பெறாத, பிராயத்திலே வடமலையப்பன் தமது தாய்தந்த தின்பண்டங்களைச் சுவைத்துக் கொண்டு, வீட்டு வாசலிலே நின்று, தின்று கொண்டிருந்தார். அப்போது குழந்தை யொன்று வாய்விட்டு அலறிய வண்ணம், வீதி வழியே சென்று கொண்டிருந்தது.

உடனே வடமலை விரைந்து சென்று, அக் குழந்தையின் கையில் தின்பண்டத்தைக் கனி வுடன் கொடுத்து, 'அழாதே! கண்ணே!' என்று தேற்றினர். தெரு வழியே சென்றோர் அது பார்த்து, 'இப்பாலன் பிறரது பரிபவத்தைத் துடைக்கப் பிறந்தவன்' என்று பாராட்டிச் சென்றனர்.

மற்றொரு நாள் மாலையிலே உடை கோவண மும் இல்லாமல், குளிர் வாடைக் காற்றிலே ஒரு குழந்தை உடல் நடுங்கிச் சென்றது. அது கண்ட தும், வடமலைக் குழந்தை தனது வீட்டினுள்ளே கடு கிச் சென்று, சிறிய ஆடையொன்று கொணர்ந்து, அதனைக் குளிரால் நடுங்கிய அக்குழந்தைக்குக் கொடுத்துக் களித்தது. அயலார் அது பார்த்து அதிசயித்துப் பேசினர்.

வேறொரு நாள் வித்துவானொருவன் அப் பிள்ளையின் வீட்டுக்கு வந்தனன்; திண்ணையிலே பையனைக் கண்டதும், கைகளை நீட்டி அழைத்துத்

தூக்கி எடுக்க நினைத்தான். பையன் அது கண்டு, தன்னை அம் மனிதன் யாசிப்பதாக எண்ணித் தனது கழுத்தில் அணிந்திருந்த தங்கச் சங்கிலியை எடுத்து, இனிமையுடன் நீட்டினன்.

அச்சமயம் பையனது தந்தையின் தோழரொருவர் அங்கே வந்தார்; இதற்குள் பையனது பிதாவும் வந்து சேர்ந்தார். குழந்தையின் செயல் அம் மூவருக்கும் ஓர் உற்சாகமும் உணர்ச்சியும் ஊட்டியது. வித்துவான் அக்குழந்தையை வாழ்த்திய பின், தந்தையிடம் தக்க பரிசில் பெற்றுச் சென்றான்.

ஆறுவது வயதில் பிள்ளையனைப் படிக்க வைத்தனர். ஆசிரியர் ஒரு முறை சொல்லுமளவில், பையன் மனத்தில் எல்லாம் பதிந்து விடும். சதகச் செய்யுட்களையும் நீதிப் பாடல்களையும் ஒரு தரம் வாசித்தவுடன், அப்படியே அக் குழந்தை ஒப்புவிக்கும். அது கண்டு, ஆசிரியர் விட்ட குறை, தொட்ட குறை என்று மெச்சுவார்.

பத்தாம் ஆண்டில் பண்டிதர் ஒருவரிடம் தமிழை வரன் முறையாகக் கற்கத் தொடங்கினர் வடமலை. முன்னம் படித்துப் பழகியவரே போல் பாடல்களை அவர் பண்ணுடன் பிழையின்றி வாசித்தமை கேட்டு, அத் தமிழாசிரியர் வியப்பு மிகுந்து, பெரும் பரிவுடன் பாடஞ் சொல்லி வந்தார். பதினாறு ஆண்டினுக்குள் பற்பல நூல்களையும் ஓதியுணர்ந்தார் உயரிய மாணவ வடமலை.

அவ் வயதிலேயே அவர் மதுரை நாயக்க வேந்தரின் சபை சென்று, அரசியலைக் கூர்ந்து நோக்கி வந்தார். அங்கே போர் வீரரின் கோலத்தைக் கண்டதும், ஆயுதப் பயிற்சி பெற அவருக்கு ஆசை

பிறந்தது. உடனே போர் நூலையும், அவ்வாலிபர் விரும்பிக் கற்றார். அப் பயிற்சியிலேயே ஒரு சமயம் அரங்கேற்றம் நடைபெற்றது. மதுரைத் தளவாய் அது கண்டு, "இவன் சிறந்த தளபதி ஆவான்" என்று போற்றிப் புகழ்ந்தனன். பிறரும் புகழுரை பகர்ந்தனர்.

ஆண்டு பதினாறு நிரம்புவதற்குள், இலக்கிய அறிவும், போர் நூலின் நுணுக்கமும் வடமலையிடம் ஓங்கி விளங்கின. பின்பு மதுரை அரசின் சேனையில் படைத்தலைவனாக அமர்ந்தார் வடமலை. அப்போது நிகழ்ந்த போர்களிலெல்லாம் அவரது வீரத்தைக் கண்டு, தளவாய் களித்தான். மன்னவன் மகிழ்ந்தான். பகைவரும் பரவசம் எய்தினர்.

வடமலையின் மலர்ந்த முகம், கனிந்த உள்ளம், இனிய உரை, நேரிய நடை, அரிய செயல் இவை கண்டு, அம் மதுரைமா நகரில் மயங்கி மகிழாதார் கிடையாது. தளவாயுடன் திருமலை நாயக்க மன்னவனது சபா மண்டபத்திறுக்கு அவர் அடிக்கடி போய் வருதல் உண்டு. அப்போதெல்லாம் அவரது முக விலாசத்தைக் கூர்ந்து கவனித்து வந்தான் அக் கொற்றவன்.

கொற்றவன் அறிதல் உற்றிடத்து உதவி என்பர். உயரிய பதவிக்கும் அது மார்க்கம் ஆகும் அன்றோ! அடிக்கடி அவ் வேந்தன் நமது வடமலையின் அறிவையும், தகவையும் தளவாயின் மூலமும் உணர்ந்து வந்தனன். நாள் சில சென்றதும், திருநெல்வேலிச் சீமையின் ஆட்சிக்கு உரிய ஒருவனை அவ்வரசன் நாடிநின்றனன்.

அன்பு, அறிவு, தோற்றம், அவா இன்மை ஆக இந் நான்கும் வாய்ந்த வடமலையப்பனே

ஏற்ற புருஷன் என்றான் தளவாய். மன்னவனும் சிரக்கம்பஞ் செய்தான். சுருங்கச் சொல்லி, எதனையும் அறிந்து ஆற்றிச் செய்யவல்ல வடமலையப்பன் திருநெல்வேலிச் சீமையின் கவர்னராக அதாவது அதிபனாக அமர்த்தப் பெற்றார்.

கி. பி. 1630-ஆம் ஆண்டிலே திருநெல்வேலிச் சீமையின் அரசுரிமை அவருக்குக் கிட்டியதென அறியக் கிடக்கின்றது.

4. அரசு முறை

சீமை வேந்தனாக வடமலையப்பன் வருவதை அறிந்ததும், பாளையக்காரரும் பெரு மக்களும் பிறரும் திரண்டு வந்து, பதினெண் வாத்தியங்களும் முழங்க வரவேற்றனர். அப்பெருமான் பரிமீது அமர்ந்து; பாங்காக ஊர்வலம் வந்து, அரங்க விலாசம் என்னும் மாளிகையின் மண்டபத்திலே கொலு விருந்தார். அதிகாரிகளும் தண்டல்காரரும் நாட்டாண்மைக்காரரும் வந்து முறைப்படி வணக்கம் செலுத்தினர்.

வடமலையின் முக ஒளியும், கருணை நோக்கும், கனிந்த உரையுங்கண்டு அனைவரும் தம் மனத்துள்ளே மகிழ்பூத்தனர். சரீர அமைப்பும் தோற்றமும் பலரையும் வசீகரஞ் செய்தன. கொலுக் கலைந்ததும், அதிகாரிகளையும் பெரிய தனக்காரரையும் தனித்தனியே அழைத்து உசாவி, நாட்டு நடப்பை ஒருவாறு ஊகித்து உணர்ந்து கொண்டார் வடமலையப்பர்.

அரசுரிமையை ஏற்றுக் கொண்டவுடனே, நாடனைத்தையும் சுற்றிப் பார்க்க வேண்டுமென்

அவருக்கு ஆவல் உதித்தது. உதிக்கவே, பிறருக்கு அறிவிக்காமல், தன்னந் தனியராய் அவர் பற்பல இடங்களையும் சென்று பார்வையிட்டார். கன வேகமாக அசுவத்தின் மீது ஒரு கிராமச்சாலையிலே அவர் செல்லுகையில், அங்கே விளையாடிக்கொண்டிருந்த பிள்ளைகள், யாரோ எவரோ என்று அவரைக் கண்டு ஓட்டம் எடுத்தார்கள்.

அப் பிள்ளைகளில் ஒருவன் பயத்தால் நடு நடுங்கிக் கீழே விழுந்து விட்டான். இதற்குள் குதிரை அப் பையனருகே சேர்ந்தது. குதிரையின் கால்களுக்கு இடையே பையன் சிக்கிக் கொள்வான் என்பதை அவர் அறியலானார். உடனே அதன் அடிவயிற்றில் மெதுவாக ஓர் உதை கொடுக்கவே பையனுக்கு ஊறு எதுவும் நேராமல் குதிரை தாவிப் பாய்ந்தது.

கீழே விழுந்த அதிர்ச்சியினால் அப் பையன் தனது இரு கால்களையும் உதைத்துக் கொண்டு தரையில் கிடந்தான். அதனைக் கண்டதும், அவர் தமது குதிரையை நிறுத்தி, அவனருகே சென்று, அவனை வாரியெடுத்து மார்போடணைத்துத் தேற்றினார்; பின்பு கனியும் கிழங்கும் வாங்கிக் கொடுத்தார். அப்போதும் அவனது அழுகை ஓய்ந்த பாடில்லை.

தமது தலைப்பாகையின் மீது சுட்டிபோல் செருகியிருந்த தங்க அணியொன்றை எடுத்து அவர் நீட்டினார். அஃதன் ஒளிகண்டு உள்ளம் கிளர்ந்து வாங்கிக்கொண்டான் அப்பையன். பிறகு அவனைப் பரிமீது அவர் அமர்த்தி, அவனது வீடு கொண்டு சேர்க்கவே, அவனுக்கு ஆனந்தம் மேலிட்டது. தாயும் தந்தையும் அதுகண்டு, யார்

இவர் என்று வியந்து நின்றனர். ஊராரும் கும்பு கூடி விட்டனர்.

"மதுரை வேந்தனது படை வீரரில் ஒருவன் யான்," என்று அவர் புகன்று, தமது குதிரையைத் தட்டி விட்டார். குதிரையும் காற்ருய்ப் பறந்தது. சென்ற இடமெல்லாம் வழிப்போக்கரின் மூலம் ஊர் நடப்பையும் வளத்தையும் கேட்டறிய அவர் தவறவில்லை. கண்கொண்டு காண்பன அனைத்தையும் நுனித்தறியவும் அவர் மறக்கவில்லை. யாவரிடமும் நகைமுகங் காட்டியே உரையாடி வந்தார் அவர்.

அவ்வாறு சீமையை நேரில் பார்த்தறிந்த பின்பு தலைநகரஞ் சேர்ந்தார். சேர்ந்ததும், நாட்டாண்மைக்காரர் அனைவரையும் ஒருசேரக் கூட்டி வைத்துக் கடமைகளை நன்கு ஆற்றும் வண்ணம் அவர்களுக்குப் போதம் புகட்டினர்; அதன் பின், அதிகாரிகளை ஒருமிக்கக் கூட்டி, மகாஜனங்களின் ஊழியர் போல் உவப்புடன் நடக்குமாறு வற்புறுத்தினர். காட்சிக்கு எளியராய், இனிய சொல்லே உடையவராய்த் திகழவே, அவர் மீது மக்களுக்கு அன்பும் பிரியமும் ஓங்கின.

சீமையைச் சுற்றி வந்த காலத்தே பாட்டைகள் பலவற்றில் மரங்களே இல்லாமையை அவர் கண்டார். அதுபற்றி, எங்கும் முக்கிய சாலையோரங்களிலே மரங்களைப் பயிர் பண்ணுமாறு ஆணையிட்டார். ஆங்காங்குள்ள கிராமத்தாரே அத்துறையில் ஈடுபட வேண்டும் என்று அவர் வேண்டுகோள் விடுத்தார். மரம் வைத்து வளர்க்கும் புண்ணிய வேலையில் மக்கள் பலரும் மிக்கக் கவனம் செலுத்தலாயினர்.

பாளையக்காரரிலே பலரும் பதட்டம் மேலிட்டுக் குடிமக்களைக் கடுமையாக நடத்தி வந்தனர். அத்தகைய பாளையக்காரரை அவர் வரவழைத்து, நல் உபதேசம் புரிந்தார். மக்களுக்கும் நல்லுரை பகர்ந்தார். அதனுல் குடிமக்களுக்கு நிம்மதி பிறந்தது. அவர்களின் தொல்லைகள் அகன்றன. சாமோபாயத்தையே அவர் பெரிதும் கையாண்டு வந்தார்; அன்பு மொழிகளையே ஆதாரமாகக் கொண்டு அரிய பலன் அடைந்தார்.

வாசவ நல்லூர் என்னும் கிராமத்திலே அண்ணன் தம்பியர் இருவர் இருந்தனர். இருவரும் பெரிய பணக்காரர். ஊரின் ஓரத்தே ஓர் ஐந்து காணி நிலம் உண்டு. அதன் உரிமை பற்றி இருவருக்கும் பூசல் நிகழ்ந்தது. அப்போது கிராமத்தார் இரு பிரிவாகி, ஒரு பிரிவார் அண்ணனையும் மற்றொரு பிரிவார் தம்பியையும் சார்ந்து நிற்கலாயினர். கிராமத்திலே கட்சிப் பிரதிக்கட்சி வலுத்து விட்டது. சில சமயங்களில் கொலைகளும் நேர்ந்தன.

தல அதிகாரிகள் அக்கட்சி பேதங்கண்டு பெரிதும் கலங்கினர். அவர்களால் சமரஸம் உண்டு பண்ண முடியவில்லை. முடிவிலே அப் பெருவழக்கு வடமலையப்பனது விசாரணைக்கு வந்தது. பரதன் பொருட்டு இராகவன் முடி துறந்ததை அவர் எடுத்துச் சொல்லி இருவருக்கும் இடையே சாந்தி நிலவுமாறு முயன்றார். சோதரர் அதற்குச் செவி சாய்க்கவில்லை. நெடுநேரம் அவர் சிந்தனை செய்து பார்த்தார். முடிவிலே, இருவருக்கும் அப் பூமி கிடைக்காது. அந்த இடத்திலே இருவரின் செலவால் நந்தவனமும் கிணறும் தர்ம நிமித்தம் ஏற்

படவேண்டும், என்று அவர் தீர்ப்பளித்தார். கிராமத்தார் அது அறிந்து பிரமித்தனர்.

நந்தவனமும் கிணறும் ஊர்ச்சொத்து ஆயின. ஊராரும் அயலகத்தாரும் வந்து, இரண்டையும் இனிது அனுபவிக்கத் தொடங்கினர். இருவரின் பெயராலும் அத்தர்ம சொத்து விளங்க வேண்டும் என்பது வடமலையப்பன் கருத்து. அதுகண்டு, சோதரரின் சச்சரவு தொலைந்தது. இரண்டுபட்டு நின்ற கிராமமும் ஒருமை கொண்டது. அத் தீர்ப்பின் பலனைக் கேட்டுச் சீமை முழுவதுமே மகிழ்வு எய்தியது.

இனி, சங்கரநயினர் கோயில் என அச் சீமையில் அரிய சிவத்தலம் ஒன்றுண்டு. அந்த ஆலயத்தினுக்கு முன்னம் திரண்ட நிலபுலன்கள் இருந்தன. தர்மகர்த்தாவாக இருந்தவன்—அவனை ஆண்டான் பிள்ளை என்பர்—அச்சொத்தின் வருமானத்தைச் சிறிது சிறிதாகத் திருடிச் சென்றான். அது அவனது காதல் கிழத்திக்குச் சேர்ந்து வந்தது. அவன் மிக்க செல்வாக்கும் படைத்தவன், ஆதலின் அவனைத் தட்டிப் பேசப் பலரும் அஞ்சிக் கிடந்தனர்.

அச்செய்தி நாளடைவில் பிள்ளையன் காதுக்கு எட்டிற்று. தர்மகர்த்தா பெரிய சுகவாசி. இடுப்பிலே ஆடை கட்டிவிடவும் அவனுக்கு ஒரு பணியாளன் தேவையாக இருக்கும். காதல் கிழத்தியும் வெய்யில் என்றால், விரல் நீட்டிப் பார்ப்பாள். இருவரையும் சிறையில் போட்டுத் தண்டிப்பான் அவ்வேந்தன் என்று எல்லாரும் எண்ணினர். அவர் அவ்விதம் செய்தாரில்லை. மற்று யாது செய்தார்?

VOORHEES COLLEGE VELLORE HIGH SCHOOL

இருவரின் சொத்தையும் வடமலையப்பன் பறி முதல் செய்தார். அவற்றை ஆண்டவன் மீது எழுதி வைத்தார். தர்மகர்த்தாவும் காதல் கிழத்தியும் தினமும் அந்த ஆலயத்திலே வேலை செய்ய வேண்டும் என்று பணித்தார். வேலை செய்தால் வேலைக்குச் சிறிதளவு சாதம் கிடைக்கும். இவ்விதம் அவர் அளித்த தீர்ப்பு அனைவருக்கும் ஓர் அதிசயம் ஊட்டியது. தெய்வமே என்று இருவரும் ஆலய பரிசாரகராக ஆயுள் அளவும் பணியாற்றி வந்தனர்.

வடமலையப்பன் கருணை நிரம்பியவர் என்றாலும், குற்றத்துக்கு ஏற்ற தண்டனை விதிப்பதில் இம்மியும் பிசகியது கிடையாது. பற்பல சமயங்களிலும் பழங்கால அரசரைப் போல் அவர் இரவிலே மாறு வேடத்தில் நகர் சோதனைக்குச் செல்வார். காலையில் எழுந்து கடவுளைத் தொழுது, நீராடி, நித்தியக் கடன்களை முடித்து, அரசியலைக் கவனித்து, ஆண்டவனது தரிசனம் செய்த பின்பே, அன்னம் கொள்ள ஒருப்படுவார்.

ஆலய வழிபாட்டில் அவருக்கு ஆர்வம் அதிகம். தலைநகரில் இருக்குங்கால், தினம் நெல்லையப்பரின் கோயிலுக்குப் போவார். தேர்த் திருநாட்களில் தாமே முன் நின்று, அனைத்தையும் கவனிப்பார். அரசன் எவ்வழி, அவ்வழி குடிகள் அல்லவா? மக்களும் ஆஸ்திக புத்தியால் சிறந்து நிற்கலானார்கள். சீமையிலுள்ள ஆலயங்கள் அனைத்தும் நன்கு பரிபாலிக்கப் பெற்று வந்தன.

5. குதிரை ஏற்றம்

பாண்டிய வேந்தரின் காலத்தேபோல், வடமலையப்பன் காலத்திலும், தொண்டி, கொற்கை, காயல் இத்துறைமுகங்களில் அரபிக் குதிரை வர்த்தகம் மிகுதியாக நடந்து வந்தது. மரக்காயர் என்னும் வகுப்பினர் அவ்வியாபாரத்தில் சிறந்து நின்றனர். மதுரை வேந்தனது விருப்பத்தை மதித்து, நல்ல ஜாதிக்குதிரைகளை வாங்க விரும்பினுன் வடமலையப்பன்.

காயல்பட்டினத்தில் ஒருசமயம் குதிரைகள் வந்திறங்கியமை கேட்டதும், வடமலையப்பன் அவ்விடம் விரைந்து சென்ருர். சீமை வேந்தனது வரவு அறிந்ததும், மரக்காயன் மகிழ்ந்து உபசரித்தனன். அதன்மேல் அவர் அசுவங்களை யெல்லாம் பார்வையிட்டு, குதிரைகளின் சுழி சுத்தங்களைக் கூர்ந்து கவனிக்கையில், மரக்காயன் மிக வியப்பும் அதிசயமும் அடைந்தான்.

வடமலையப்பன் அக்குதிரைகளை எல்லாம் விலை பேசினுர். மரக்காயனே ஆசை மிகுந்து, யானை விலை சொல்லினன். வடமலை அதுகேட்டு இது அடாது என்றதும், மரக்காயனுக்கு மனம் பொங்கியது. அம்மன்னவனை மடக்கவேண்டும் என்னும் ஆணவமும் தலையெடுத்தது.

அங்கிருந்த அரபிக் குதிரைகளில் ஒன்று காகஸஸ் மலைப் பிரதேசத்தில் பிறந்தது; மகா முரட்டுக்குணம் வாய்ந்தது; யாருக்கும் அடங்காதது; தீனி வைக்க அருகே செல்லுவோரையும் அது கடிக்கக் கருதும்; அல்லது காலினுல் உதைக்க முயலும்; பக்கவாட்டில் சென்ருல், மேலே சாய்ந்து விழ விரும்பும்; பிரமாதமாகக் கனைக்கும்.

அக்குதிரையை அடக்கிவிட்டால், அசுவங்கள் அனைத்தையும் காசின்றிக் கொடுத்து விடுவதாக மரக்காயன் கூறினன். அந்த அறைகூவலை யறிந்ததும், வடமலைக்கு ஆண்மை துள்ளியது. அவ்வளவில், சேணம் என்பது இல்லாமலும், கடிவாளமும் கொள்ளாமலும், அம் முரட்டுக் குதிரை மீது தாவி ஏறினர் அத் தார்வேந்தர்.

குதிரையின் நீண்ட பிடரிமயிரே வடமலைக்குக் கடிவாளம் ஆயிற்று. கடலோரத்து மணலிலே அதனை அவர் தட்டி விட்டார். கடிவாளமும் இல்லாமல் ஏறியமர்ந்த இம்மனிதன் எம்மாத்திரம் என்று அப்புரவி செருக்குக் கொண்டது. அவ்வளவுதான் தாமதம்.

அசுவமோ தனது பின்னங்கால் இரண்டையும் பூமியிலே ஊன்றி, முன்னங்கால் இரண்டையும் உயரத்தூக்கி, அவ்வீரனைக் கீழே தள்ள எண்ணிக் கிளம்பியது. பின்பு கடல் மணலிலே காற்றினுங் கடுகிப் பாய்ந்து, வளைந்து வளைந்து ஓடியது; வலதுபுறமும் இடதுபுறமும் சாய்ந்து சாய்ந்து, அப்புருஷனுக்குப் பயம் ஊட்டியது. சிறிது நேரம் எழும்பி எழும்பிக் குதித்துக் கர்ஜனை புரிந்தது.

"வடமலையப்பனை அக்குதிரை தூக்கிப் போட்டுக் குளமும் பறித்து விடும். அவ்வேந்தர் இனி மீள்வது ஏது?" என்று பலரும் உதைப்பு மிகுந்து கிடந்தனர். குதிரை குறும்பு செய்யும்போதெல்லாம், அதன் பிடரி மயிரை இறுகப் பிடித்துக் குலுக்குவார் அவர்; அதன் அடி வயிற்றில் தனது குதிகால் கொண்டு இடிப்பார். அது உலக்கை இடிபோலிருக்கும்.

பிடரி மயிரை இறுகப் பிடித்துக் குலுக்கும் போது, பரிமாவின் அங்கமெலாம் குலையும்; உடம் பெல்லாம் வியர்வை எடுக்கும். வாயிலோ நுரை தள்ளும், முதுகு முறிந்து விடும்போல் தாழ்ந்து தாழ்ந்து வளையும். ஒரு முகூர்த்த நேரம் பாய்மா வுக்கும் வடமலைக்கும் அவ்விதம் போராட்டம் நடக்க லாயிற்று. பிடரிப் பிடிப்பையும், குதிகால் உதைப் பையும், முதுகு நெரிப்பையும் அவ் வேந்தர் சிறிதும் தளர்த்தவில்லை.

அதுகண்டு அசுவம் அறிவு கொண்டு, தனது முரட்டுக் குணத்தைக் கைவிட்டு, முடிவில் அடங்கி ஒடுங்கி நின்றது. ஆங்கே கூடியிருந்த மக்கள் அனைவரும் மகிழ் கூர்ந்து, "குதிரையின் குறும்பு அடக்கிய கோமான் இவன்," என்று கூறிப் போற்றினர். மரக்காயனோ பந்தயம் பேசிய வண்ணம், குதிரையனைத்தையும் காசின்றிக் கொடுக்க நேருமே என்னும் கவலையுடன் குலைய லானான்.

வடமலையப்பன் அஃதுணர்ந்து, "வர்த்தக! வீணே கவலை ஏன்? ஆசை கொண்டு மோசம் செய்யேன் நான். உரிய விலை கொடுத்தே புரவிகளை வாங்கிக் கொள்வேன்," என்றார். அவ்வாறே மத்தி யஸ்த விலை கொடுத்து, நூறு பரிகளை எடுத்துக் கொண்டார். குறும்படங்கிய கறுப்புக் குதிரை அவருக்குப் பரிசாகக் கிட்டியது.

அப்பால் வடமலையப்பன் அக்கறுப்புக் குதிரையையே தனது பட்டத்துக் குதிரையாகக் கொண்டார். குதிரை வந்த பாக்கியம், அவர் பெயரும் புகழும் மேன்மேலும் சிறக்கலாயின. சுழி சுத்தம் வாய்ந்த நூறு குதிரைகளையும் மதுரை

வேந்தன் பார்த்து மனமுவந்து, வடமலைக்கு வரிசை பல செய்தனன்.

இனி அந்நாளில் தஞ்சையை ஆண்டு வந்த நாயக்க வேந்தரும், மதுரை நாயக்க மன்னவரும் விஜய நகர ஸாம்ராஜ்யத்தின் பிரதிநிதிகளே ஆவர். தஞ்சை நாயக்கர் தமது தாயரசைத் தாங்கி நின்றனர். மதுரை நாயக்க மன்னவனும் திருமலை நாயக்கனே தாயரசுக்கு எதிராகச் சதி செய்தனன். அதுபற்றியே தஞ்சைக்கும் மதுரைக்கும் அடிக்கடி சிறு சிறு சண்டைகள் மூண்டு வந்தன.

அச் சண்டைகளின்போது, பாளையக்காரர் தமது படையுடன் சென்று, மதுரைக்கு உதவுதல் கடமையாம். திருநெல்வேலிச் சீமையின் அதிபரான வடமலையப்பன் தமது சீமையைச் சேர்ந்த பாளையக்காரருக்குத் தலைமை பூண்டு, தஞ்சைக்கு எதிராகப் போர் புரிய நேர்ந்தது.

அப்போது அவ் வடமலையப்பன் தமது பட்டத்துக் குதிரைமீது ஏறிச் சென்றார். போர் நூலில் அவர் மிகவும் பயின்றவர். தளபதி என்னும் பட்டமும் பெற்றவர். ஆதலின், அப்போரிலே அவர் பேராண்மை காட்டினர். அவரது அசுவமோ உயிர்த் தோழனே போல் உதவா நின்றது.

உதாரணமாக அச் சமர் முகத்தே குத்தீட்டி கடுகிவந்தால், அக் குதிரை ஒதுங்கிக் கொடுக்கும்; வாள் வீச்சு விரைந்து வந்தால், கண்ணிமைப் பொழுதினுக்குள் அது விலகிக்கொள்ளும். துப்பாக்கி ரவை கிட்டவந்தால், அந்தரத்தே கிளம்பி யெழுந்து வடமலையைக் காக்கும். பகைவரை அணுக விடாமல், கடித்தும் உதைத்தும், தனது காவலனுக்கு உதவி புரியும்.

குதிரை ஏற்றத்தில் பஞ்ச பாண்டவரில் ஒருவனான நகுலன் என்பான் வெகு சமர்த்தன் என்று நூல்கள் நுவலும். நகுலனது சாயலாகவே வடமலை துலங்கி வந்தான். போரென்று அறிந்து, புரவி மீது அமர்ந்து, சமரபூமியில் புகுந்து விட்டால், வெற்றிமாலையைத் தவிர வேறெதுவும் வடமலையப்பன் விரும்பான்.

படை முகத்தில் ஒப்பாரி என்பது ஏது? இதற்கு அவ் வடமலையே இலக்கண புருஷர். இன்னான், இனியான் என்று பாராமல், எவரையும் புறங்கண்டே திரும்புவார். வேளாண்மைக்கும் பிறந்தவரே யானாலும், வாளாண்மை விளைப்பதில் தவறியதே கிடையாது. தஞ்சைப்போரில் அவர் அடைந்த வெற்றியே "ஐயன்" என்னும் பிருதைத் தேடித் தந்தது.

மதுரையரசின் ஏனைய மாகாண கவர்னர்கள் குதிரை ஏற்றத்தில் தேர்ச்சி கொள்ள வடமலையப்பனது ஆதரவை நாடி நிற்பர். அவர்களது தளபதிகளும் அப்படியே. நற்சுழி வாய்ந்த குதிரைகளை வாங்க விரும்பும் மாகாண அதிபர்கள் அவ் வடமலையன் கூட்டுறவைக் கோருவர். அது பற்றி 'அசுவ சாஸ்திரி' என்னும் பெயர் கிட்டியது.

"குதிரை இருப்பு அறியும், கொண்டவன் குணம் அறிவான்," என்று ஒரு பழமொழி உண்டு. அவரைக் கண்ட அளவில், குதிரைகளோ அவரது திறத்தை உணர்ந்து, பசுபோல் அடங்கி நிற்கும். அவர் பரிமீது அமர்ந்து செல்லும் பான்மை கண்ட ஒரு புலவரோ பரிமேலழகர் என்று அவரைப் புகழ்ந்ததாக அறியக் கிடக்கின்றது.

6. தமிழன்பு

வடமலையப்ப பிள்ளையன் அருங்கலை விநோதர். கலைவல்லாருடன் கூடிக் களிப்பதையே பெரும் பாக்கியமாகக் கருதுபவர். கற்றோர் கனம் அறிவார் கற்றோரே. அவர் சிறந்த கல்விமான். தமிழிலே மிக்கப் புலமை உடையவர். ஆதலின் புலவர்கள் இயற்றும் செய்யுட்களின் அருமை அறிந்து, அவர்களை அன்புடன் பாதுகாத்து வந்தார்.

புலவர் வறுமை என்பதை வெருட்டியோட்டவே அவர் விரும்பி நின்றார். அவர்கள் எங்கே இருந்தாலும் சரி, அவர்களின் வீடுதேடி அன்றாடம் உலுப்பை போய்ச்சேரும். அன்ன வஸ்திரத்திற்குக் குறைவில்லாமல் அவர்களைப் பேணிவந்த பெருமான் அவர். தமது அதிகாரிகளுக்கும் அவ்விதமே அவர் ஆணையிட்டிருந்தார்.

புலவர்களின் இல்லங்களில் பிரசவம் நிகழ்ந்தாலும் சரி, விவாகம் நடந்தாலும் சரி, வேறொன்று சம்பவித்தாலும் சரி, ஆங்காங்குள்ள அதிகாரிகள் வலுவில் சென்று, வேண்டியன தேடிவைத்தல் முதற்கடமையாம். தமிழ் வாணரின் வீட்டிலிருந்து மணஓலை வந்தால், அம்மண மண்டபத்தில் முதற் புருஷராக வீற்றிருப்பார் வடமலையப்ப பிள்ளையன்.

கவிராய ரொருவர் தமது மகளை மருமகன் வீட்டினுக்கு மறு நாள் அனுப்புதல் வேண்டும். "மகளுக்குக் கொடுத்தனுப்ப வரிசைப் பொருள்கள் போதாவே," என்று அவர் மனைவி மனம் புழுங்கினாள். "வடமலையப்பன் இருக்கையில், வரிசைப் பொருள்களுக்கு ஒரு பஞ்சமா?" என்று அக்கவிராயர் தமது மனைவியைத் தேற்றினார்.

"அவ்வேந்தர் அறிந்தாலல்லவோ?" என்ருள் மனைவி. நகர் சோதனைக்குப் போகும் காலத்திலே புலவர்களின் வீட்டுத் திண்ணையில் சற்றே தாமதித்தல் பிள்ளையனது வழக்கம். அன்றிரவு அக்கவிராயரின் வீட்டுத் திண்ணையில் ஐயன் குந்தியிருந்தார். மற்றை நாள் பொழுது புலர்ந்ததுதான் தாமதம். கவிராயரின் இல்லக்கிழத்தி களிக்கும் வண்ணம், வரிசைப் பொருள்கள் வந்து குவிந்தன.

தமிழ்வாண னொருவன் தனது மனைவியுடன் ஒரு சமயம் வேற்றூர் செல்ல நேர்ந்தது. அந்தி மாலை புகும்வேளை, இருவரும் வழியிலே ஒரு சாவடியில் தங்கினர். இருள் வந்து சூழ்ந்ததுதான் தாமதம். கள்வர் தோன்றி அப்புலவனது மனைவியாள் அணிந்திருந்த பூச்சிக்கூடு, தங்கக் கம்மல் இவற்றைப் பறித்துச் சென்றனர். தாலி மட்டும் தப்பியது.

அடுத்தநாள் காலை, தமிழ்வாணன் சென்று வடமலையப்பனிடம் குறைகூறி, முறைவேண்டினன். அயலே யிருந்த தானதிபதியை அப்பிள்ளையன் நோக்கினர். சுருங்கச் சொன்னல், களவுபோன கம்மலும் பூச்சிக்கூடும் மூன்று நாளைக்குள் ஐயன் சமுகம் வந்துசேர்ந்தன. கள்ளனும் வந்து வணங்கி நின்ருன் கூப்பிய கையினனாய். புலவன் அது பார்த்துப் பெருங்களிப்பு எய்தினன். அவ்வாணன் மனைவியோ ஆடையும் அணியும் ஐயன்பால் பெற்று, அகமிக மகிழ்ந்தனள்.

அவர் இயற்றியுள்ள தருமங்களையும் தேவாலயத் திருப்பணிகளையும் பிற அருஞ்செயல்களையும் பலபல புலவர் பாமாலையாகத் தொடுத்து அவர் புகழை வெளியிட்டுள்ளனர். அவரது சீமை

அதிகாரிகளிற் பலரும் சிறந்த கல்விமான்களாக விளங்கினர்கள். தமிழறிஞர் என்றால், அத்துடன் தகவும் திறமையும் கூடிக்கொண்டால், ஐயனது அரசிலே தட்டாது அதிகாரப் பதவி கிட்டும்.

நீடூர்த்தல புராணம், மச்ச புராணம் என்னும் சில நூல்கள் அப்பிள்ளையன் இயற்றியிருக்கிறார். நீடூர் என்பது சோழவள நாட்டிலே பாடல்பெற்ற சிவஸ்தலங்களுள் ஒன்றாம். ஊழிக் காலத்திலும் உலவாது நீடித்திருக்கும் தலமாதலின், அதற்கு நீடூர் என்னும் திருநாமம் ஏற்பட்டதென்பர் பெரியோர்.

"பிரளய காலம் வரினும் சிதையாதாலே, ஒப்பரிய நீடூர் என்றொரு திருப்பேர் எப்பொழுதும் உரைப்பர் மாதோ!" என்று புராண ஆசிரியரும் உரைத்துள்ளார். 'நெல்லால் விளை கழனி நீடூரானை' 'என்றும், நிறைபுனல் கழனிச் செல்வ நீடூர்' என்றும், 'செல்வ நீடூர்', 'திருநீடூர்' என்றும், தேவாரமும் பெரியபுராணமும் அந்த ஊரைப் போற்றும். அத்தகைய ஊரின் புராணம் பாடுதல் விசேஷம் அன்றோ?

நீடூர்ப் பெருமானது பெருமையைச் சுந்திரமூர்த்திசுவாமிகள் "கோடி தேவர்கள் கும்பிடும் நீடூர்க் கூத்தனைப் பணியா விடலாமே," என்று உரைத்துள்ளார். அத்தலத்தை வகுளாரணியம், மகிழாரணியம், மகிழவனம் என்றும் அழைப்பர். அறுபத்து மூன்று நாயன்மார்களில் ஒருவரான முனையடுவார் நாயனர் என்பார் அந்த காலத்தில் தோன்றியவர்.

வடமலையப்பனது வாக்கு செம்பாகமா யிருக்கும். உதாரணமாக, அத்தல புராணத்திலிருந்து ஒரு செய்யுள் தருவோம்.

இத்திறம் இயம்பிப் பின்னும் இரவிக்கு அன்று ஈசன் வில்வ
பத்திர மகிமை தன்னைப் பரிவினால் உரைத்தவாறு
வித்தக முனிவர் கேண்மின், விரித்து நாம் உரைப்பம் என்னாச்
சுத்த சித்தாந்தம் வல்லசூத மா முனிவன் சொல்வான்

ஆதித்தன் பூசைச் சருக்கம்—௩௬

திருமாலின் பத்து அவதாரங்களுள் ஒன்று மச்சாவதாரம். அந்த அவதாரத்தைக் குறித்து உரைப்பதே மச்ச புராணம் எனப்படும். வட மொழியிலே அது பதினாறாயிரம் பாடல்கள் கொண்டது. அதனை ஆதாரமாகக் கொண்டே வடமலையப்பர் ஐயாயிரம் செய்யுட்களில் மச்ச புராணம் பாடலானார். இதுவும் எளிய இனிய நடை வாய்ந்தது.

மச்சாவதாரத் தோற்றம், பிரளய காலத்தில் மனுவைக் காத்தமை, பிரம்மசிருஷ்டி, திரிபுரவத னம், தாரகாசுர யுத்தம், பார்வதி திருமணம், கந்தர் தோற்றம் முதலியவற்றை அப்புராணம் உணர்த்தும்.

தேவார ஏடுகளை அநபாயச் சோழன் கண் டெடுத்த நாள் தொட்டு அப்பாடல்களை ஆலயங் களில் பாடும் வழக்கம் ஏற்பட்டது. மேலும் இசை யுடன் தேவாரத்தைப் போதிக்கும் பாடசாலை களும் உதித்தன.

திருநெல்வேலிச் சீமையிலுள்ள சிவாலயங் களில் எல்லாம் தேவாரம் ஓதும் வழக்கத்தை வட மலையப்பர் புதுப்பித்தார். அதனை ஓதுவாருக் கெல்லாம் உதவி புரியவும் வகைசெய்தார்.

விஷ்ணு ஆலயங்களிலும் திவ்யப்பிரபந்தத்தை இசையுடன் படிக்கும் வண்ணம் ஏற்பாடு செய்ய

அவர் தவறவில்லை. தேவாரமும், திருவாய்மொழியும் ஓதப்பெருங்காலத்தில், அவர் உள்ளம் உருகிக் கேட்பார்; உவகையும் எய்துவார்.

தெருவெல்லாம் தமிழோசை முழங்குதல் வேண்டும் என்று பாரதியார் வலியுறுத்தினர். வடமலையப்பனது காலத்திலே திருநெல்வேலிச் சீமை எங்கும் கிராமங்களிலே தமிழோசையும் மணமும் தலைசிறந்து நின்றன.

வடமலையின் குண விசேஷங்களையும், வள்ளன்மையையும் பலவாகப் பாராட்டவே, சங்கரநயினர் உலா, திருக்கோளூர் வைத்தமாநிதி திருப்பணிமாலை, குழைக்காதர் திருப்பணிமாலை முதலிய நூல்கள் எழுந்தன. சைவ, வைணவ ஆலயங்களுக்கு அவர் செய்த திருப்பணிகளையும் விவரத்தையும் அந்நூல்கள் தெரிவிக்கும்.

அவர் காலத்தே திருநெல்வேலிப் பிரதேசத்தில் அவர்மீது பிரபந்தம் இயற்றிப் பாடாத புலவரே கிடையாது. நறுங்கனியை அருந்துவோர் அதன் சுவையை வாயார விளம்புதல் இயற்கை அல்லவா ?

"தோன்றிற் புகழொடு தோன்றுக," என்றார் திருவள்ளுவர். தமிழன்பு மிகுந்து, தமிழறிஞரை ஆதரித்துத் தமிழை வளர்த்துத் தமிழ் மணமாக நின்றவர் வடமலையப்ப பிள்ளையன்.

வடமலையப்பனது புதல்வர் காவை, திருமலைக் கொழுந்து என்பவர். கி. பி. 1663-ம் ஆண்டில் பிள்ளையன் காலஞ்சென்ற பின்பு அத்திருமலைக் கொழுந்து 1683-ம் ஆண்டு வரையில் நெல்வேலியை மிக நன்றாக ஆண்டு வந்தார். திருமலைக்கொழுந்தும்

தந்தையைப் போலவே புலவரை ஆதரித்து வந்த புண்ணியவான் ஆவர்.

திருமலைவெண்பா என்னும் பிரபந்தம் திருமலையின் பெருமையை விளக்க எழுந்ததாம். வடமலையின் மரபார் வழிவழியாகத் தமிழன்பு உடையோர் ஆதலினாலும், முக்கூடல் நகரைப் பல வகையிலும் மேம்படுத்தியதனாலும், புலவர் ஒருவர் பரவசம் கொண்டார்.

அப்புலவரின் பெயர் இன்னதென விளங்கவில்லை. ஆயினும் அப்பரவசம் காரணமாக, முக்கூடல்பள்ளு என்னும் பிரபந்தத்தை இயற்றிச் சென்றார். அப்பிரபந்தத்தில் முதன் முதலாக வடமலையப்பனே போற்றப் பெறுகிறார். பின்பே வடமலையின் சந்ததியார் புகழப்படுகிறார்கள்.

பள்ளு என்னும் பிரபந்தம் முதன் முதலாகத் தோன்ற, அதில் முதன்மை பெறுகிறார் வடமலையப்ப பிள்ளையன். பள்ளுப் பிரபந்தம் தோன்றுவதற்கு வடமலையின் மொய் புகழே முதற்காரணம் எனல் மிகையாகாது.

7. பக்தரின் புலம்பல்

திருமால் சிலை வடிவில் சேவை சாதிக்கும் தலங்களைத் திருப்பதிகள் என்பர். நமது பாரத பூமியில் நூற்றெட்டுத் திருப்பதிகள் உண்டு. பாண்டிய நாட்டிலே அப்பதிகள் பதினெட்டாம். அவற்றுள் ஒன்று தென் திருப்பேரை என்று சொல்லப் பெறும்.

அத்திருப்பேரை தென் பாண்டி நாட்டில் உள்ளது. அஃது ஸ்ரீவைகுண்டத்துக்குக் கிழக்கே

ஒன்பது மைல் தூரத்தில் உள்ளதாம். ஆழ்வார் திருநகரிக்கும் அதற்கும் ஆறு மைல் தூரம் உண்டு. அந்நூற்றெட்டுத் திருப்பதிகளுள் அதி சிறந்தன ஒன்பது. அவை நவதிருப்பதிகள் எனப்படும்.

திருக்குருகூர், திருக்குளந்தை, திருக்கோளூர், தொலைவில்லிமங்கலம், திருப்புளிங்குடி, திருப் பேரை, வரகுணமங்கை, ஸ்ரீவைகுந்தம் இவையே நவதிருப்பதிகளாம். தொலை வில்லிமங்கலத்தில் இரண்டு கோயில்கள் உள்ளன. ஆதலின் அதனை இரட்டைத் திருப்பதி என்பர். திருப்பேரை, பேரெயில் எனவும் வழங்கும்.

பாண்டிய மன்னர் அனைவரும் சிவபக்தரே. ஆயினும் அவர்களிடம் சைவ, வைணவ வேற்றுமை கிடையாது. சமரஸமே அன்னவரிடம் ததும்பி நின்றது. அப்பாண்டிய வேந்தரில் ஒருவன் சுந்தர பாண்டியன் என்பவன். ஸ்ரீ வைஷ்ணவர்களிடம் அவனுக்கு ஈடுபாடு அதிகம்.

சாம வேத கானம் அவன் கருத்தை ஈர்த்தது. அந்நாளில் தலவகார சாமவேதிகளாகிய ஸ்ரீவைஷ் ணவர் சாமகானத்தில் தலைசிறந்து விளங்கினர். ஆதலின் பற்பல ஊர்களில் வசித்து வந்த அவ் வைணவ குடும்பத்தினரில் நூற்றெட்டுக் குடும்பத் தாரை அவன் விரும்பி அழைத்தான்; தென் திருப் பேரையில் வசிக்குமாறு அவர்களை அமர்த்தினன்.

அக்குடும்பத்தார் அனைவருக்கும் வீடு வாசல் கள் அவன் கட்டிக் கொடுத்தான்; செழுமை மிக்க நன்செய் நிலங்களும் அவர்களுக்கு வழங்கினன். அவை சர்வமானியம் ஆயின. அந்தணர்க்கு உரிய கடன்களை ஆற்றி, மூன்று வேளையும், முன்னவன் முன்னே சாமகானம் செய்தல் அவர்களின்

கடமையாம். செவிக்கு அமுதென அதனைப் பருகு தல் அவன் வழக்கம். கைலைமலையைப் புரட்டி, மலைமகளை மருளச் செய்த இராவணன் மீது சிவ பெருமான் சினம் பூத்து நின்ற காலையில், சாம கானத்தினல் அப்பெருமானை அவன் மகிழ்வித்து வெற்றிவாள் பெற்றுத் திரும்பினன் என்று இராமாயணம் கூறும். எனவே, சாமகானத்தின் உயர்வை நாம் விரித்துரைக்க வேண்டுமோ?

இனிய தமிழ்மொழி பிறந்து வளர்ந்த நாடாத லின் அந்த சாமவேதிகள் தமிழ் அணங்கையும் வழிபட்டு விழுப்பம் எய்தலாயினர். அன்று அங்கே அமர்ந்த நூற்றெட்டுக் குடும்பத்தின் வழி வந்தவர்கள் இன்றைக்கும் அந்த ஊரில் வாழ்ந்து வருகின்றனர். வடமொழி, தென்மொழி ஆகிய இரண்டும், அவ்வைணவரின் அணிகளாக விளங்கா நின்றன.

ஏறக்குறைய இருநூறு ஆண்டுகளுக்கு முன் னம் அத் திருப்பேரையில் நாராயண தீட்சிதர் என்பவர் வதிந்து வந்தார். அவர் அவ் வைணவ பரம்பரையில் வந்தவரே. தமிழணங்கு அவரது நாவில் துலங்கி நின்றனள். அங்கே எழுந்தருளி யுள்ள மகர நெடுங் குழைக்காதர் என்னும் திருமா லின் மீது அவருக்குப் பக்தி அதிகம். பரவசமும் மிகுதியாம்.

பாமாலை தொடுத்து அப் பரமனை வணங்கித் துதிப்பதையே அவர் பொழுது போக்காகக் கொண்டவர். அவருக்கு வீடு, வாசல், நிலம், புலம் எல்லாம் உண்டு. ஆதியில் அவை சர்வமானியமாக இருந்தும் என்ன? அரசின் மாறுதலால், அவர் தமது நிலங்களுக்கு ஓரளவு வரி கட்டிவர நேர்ந்தது.

ஓராண்டு பருவ மழை தவறியது. அதனால் விளைவு குன்றியது. அத்துடன் குடும்பச் செலவும் அதிகரித்தது. ஆனது பற்றி அவரும் அவரது இனத்தினராகிய சிலரும் குறித்த காலத்தே வரி கொடுக்க இயலவில்லை. அதன் காரணங்களை எடுத்துக்கூறி, இயன்ற காலத்தில் வரியைச் செலுத்தி விடுவதாக அவர்கள் நயந்து கேட்டுக் கொண்டார்கள்.

தண்டல்காரனோ மனம் இளகவில்லை; ஒரே பிடிவாதமாக இருந்தான்; ஆதலின் அவர்கள் அனைவரையும் திருநெல்வேலிக்கு இட்டுச்சென்று, அங்கே சிறையில் இட்டுக் காவல் வைத்து விட்டான். அச் சிறைக் கூடம் இருந்த தெருவை இப்போதும் காவல்புரைத் தெரு என்று முதியோர் மொழிவார்.

சிறைப்பட்ட நாராயண தீட்சிதர் என்ன செய்வார்! எல்லாம் முன்னை வினையின் பயன் என்று எண்ணி ஏங்கினார்; சுதந்திரமான வாழ்க்கை போயிற்றே என்று வருந்தினார்; தினம் செய்து வந்த குழைக்காதர் தரிசனமும் இல்லாது போயிற்றே என்று உள்ளம் நைந்தார்.

முடிவிலே, "எவ்வளவோ நயந்து வேண்டிக் கொண்டோம். கல்லும் கரையும் வண்ணம் பணிவுடன் கூறினோம், அத் தண்டல்காரன் இரங்கவில்லை. இனி நமக்கு அக் குழைக்காதரே கதி. அவரிடம் முறையிட்டுக் கொள்வோம்," என்று அவர் தெளிந்தார். அதன் பின்பு ஓரளவு ஆறுதலும் அடைந்தார்.

அது முதல் நாள் தோறும் குழைக்காதர் விஷயமாக அவர் மனமுருகிச் செய்யுட்கள் இயற்ற

லானர்; அப்பாக்களைத் திருப்பி திருப்பித் வாயாரச் சொல்லி, அவ்வள்ளலை வாழ்த்தினர். உடன் இருந்தவர்களும், அவரைப்போல் சில செய்யுட்களை இயற்றி, அப்பெருமானைத் துதிக்கத் தொடங்கினர்.

நாராயண தீட்சிதரோ "குழைக்காதர் பாமாலை" என்று பெயரிட்டு, ஒவ்வொரு நாளும் செய்யுள்கள் இயற்றி, முறையாக அமைத்து வந்தார். குழைக்காதரைப் பிரிந்திருக்கும் கொடிய காலமும் வந்ததே என்று அவர் எண்ணி எண்ணி மனம் புண்ணுனர்.

அப்பாமாலையில் காணப்படும் முதல் செய்யுள் பின் வருவதாகும் :—

கன்றுக்கு இரங்கிய
    கற்றுவைப் போலக் கருணையுடன்
என்றைக்கு இரங்குவாரோ ?
    அறியேன், எழுபாரும் உய்யக்
குன்றைக் கவிகையெனத்
    தரித்தோர் குழைக் காதரையான்
சென்று எப்பொழுது
    தொழுவதும் பாவங்கள் தீர்வதுமே ?

இப்பாடலின் பொருள் இது :—"தாய்ப் பசு தனது கன்றினுக்கு இரங்குவது போல் அக் குழைக்காதர் கருணை பூத்து என் மீது என்றைக்கு இரக்கம் வைப்பாரோ தெரியவில்லை. உலகை அழிக்க எண்ணி ஏழு மேகங்களையும் இந்திரன் ஏவ, அப்போது ஏழு உலகமும் பிழைக்குமாறு கோவர்த்தனகிரி என்னும் மலையை எடுத்துக் குடையாகப் பிடித்த குழைக்காதரை நான் எப்போது சென்று தொழுவது ? எப்பொழுது என் பாவங்கள் தீர்வது ?

அவ்விதம் அவர் தமது உள்ளம் துடித்து நாள் தோறும் பாடி வந்தார். சிறை வாழ்க்கையில் ஒரு மாதம் கழிந்தது. மீட்சிக்கு யாதொரு வழியும் தோன்றவில்லை. தோன்ருது போகவே, குழைக் காதரை நினைந்து மீண்டும் இவ்வாறு இரங்கினர். அப்பாடல் இது :—

திங்கள் ஒன்ருகச் சிறை
இருந்தோம், இந்தச் சிறை அகற்றி
எங்கள் தம்பால் இரங்காதது என்னே?
இசை நான் மறையின்
சங்கமும் கீதத் தமிழ்ப் பாடலும்
சத்த சாகரம் போல்
பொங்கு தென் பேரைப் புனிதா!
கருணைப் புராதனனே!

குழைக்காதரான பெருமாளின் சந்நிதியில் தினம் தினம் நான்கு வேதங்களும் முழங்கும். திவ்யப் பிரபந்த கீதமும் கடல் முழக்கம் போல் எழும்பும். அவற்றைக் கேட்டு அவன் பால் ஈடு படாமல் இங்கே அழுது கொண்டு கிடக்கின்றேனே என்று அவர் புலம்பினர்.

குழைக்காதர் இன்று அருள் செய்வார், நாளை அருள் செய்வார், இன்றைக்கு ஏதேனும் நன்மை கிட்டும் என்று எண்ணி நின்று, அவர் ஏமாந்தார். பிறகு மறுபடியும் அப் பெருமானை நினைந்து குழைந்தார், இவ்வாறு :—

இன்று ஆகும், நாளைக்குள் நன்று ஆகும்,
என்று இங்கு இருப்பதலால்
ஒன்ருகிலும் வழி காண்கிலமே,
உன் உதவி உண்டேல்,

பொன்றுமல் நாங்கள் பிழைப்போம்,
கருணை புரிந்து அளிப்பாய்,
அன்று ஆரணம் தொழ நின்றய் !
தென்பேரைக்கு அதிபதியே.

இப்பாடலின் கருத்து ஈதாகும் :—“இன்றோ நாளையோ நன்மை கிட்டும் என்று நம்பிக் கிடப்பதைத் தவிர விடுதலைக்கு உரிய வழி ஒன்றும் தென்படவில்லை. தென் பேரைப் பெருமானே! அன்று கஜேந்திரன் கூவி அழைக்க, அஞ்சேல் என முன் நின்றவனே ! உனது உதவி இருந்தால் நாங்கள் சாகாமல் பிழைப்போம். கருணை புரிவாயாக !”

அந்நிலையில், “வடமலையப்பன் நல்ல நீதிமான்; தமிழ்மொழியினிடம் அன்பு மிகுந்தவன். எனவே தமிழறிஞரிடம் அவனுக்கு ஆர்வம் அதிகம் உண்டு. தமிழறிஞராகிய நாங்கள் சிறையில் கிடப்பதை அவர் அறியவில்லை. அறிந்தால் நமக்கு நன்மை கிட்டும்” என்று நாராயண தீட்சிதருக்கு நினைவு உண்டாயிற்று.

உண்டாகவே, மீண்டும் குழைக்காதரே தஞ்சமென்று கருதிப் பாடுவதைத் தவிர, அவருக்கு வேறு உபாயம் தோன்றவில்லை. வடமலையையும் பாட்டிலே அமைத்துப் பாட அவர் மனம் ஒருப்பட்டது.

8. ஐயன் கருணை

அந் நினைவு உதித்ததுதான் தாமதம். "எங்களது நிலையை அவருக்கு அறிவிப்பார் ஒருவரும் இல்லையே", என்று தீட்சிதர் கருதினர். அக்கருத்து ஒரு செய்யுளின் வடிவு கொண்டது. அச்செய்யுள் யாதெனில் :—

வள்வார் முரசு அதிர் கோமான்
வடமலை அப்பன் முன்னே
விள்வாரும் இல்லை, இனி எங்கள்
காரியம் வெண் தயிர் பால்
கள்வா ! அருள் கடைக்கண் பார் !
கருணைக் களிறு அழைத்த
புள் வாகனா ! அன்பர் வாழ்வே !
தென் பேரைப் புராதனனே !

"நீண்ட தோலுமுடைய முரச வாத்தியம் சப்திக்கும் வாசலை உடைய அரசனும் வடமலை அப்பன் முன்னே சென்று, எங்களது நிலையை உரைப்பாரும் இல்லை. வெண்மையான தயிரையும், பாலையும் கவர்ந்து உண்ட கண்ணா! கருணை நிரம்பிய கருடாழ்வானை வாகனமாகக் கொண்டவனே! கஜேந்திரன் அழைத்தபோது அக் கருடாழ்வான் மீது அமர்ந்து விரைந்து வந்து காத்தவனே! தென்பேரை என்னும் ஊரில் எழுந்தருளி இருப்பவனே! எங்கள் மீது கடைக்கண் செலுத்துவாயாக," என்பதே அப் பாடலின் பொருளாம்.

அவ்விதமெலாம் அவர் கவிகட்டுவார்; அதனை மனங் கரைந்து பாடுவார்; பழைய பாடல்களை மீண்டும் மீண்டும் பாடிப் புலம்புவார்; இதுவே அவரது வழக்கமாயிற்று. சிறைக் கூடத்தின் அதிகாரி அத் தீட்சிதரின் நிலையை நாள் தோறும்

நோக்கி உணர்வான்; பாடலின் சுவை கண்டு சிந்தை மகிழ்வான்.

அவனுக்கும் தமிழறிவு அதிகம். தமிழின்பம் கொள்வதிலும் அவனுக்கு ஆர்வம் மிகுதி. ஆதலின், தமிழ்ப் புலவர் இங்ஙனம் காவலில் கிடந்து கலங்குவதோ என்று அவன் வருந்துவான். நமது மன்னருக்கு இச்செய்தி தெரியாதிருத்தல் எங்ஙனம் என்று சிந்தா குலம் அடைவான்.

அந்நிலையில், 'வள்வார் முரசதிர் கோமான் வடமலையப்பன்' என்று தொடங்கும் செய்யுள் அவன் காதில் விழுந்தது. அவ்வேந்தனிடம் யார் சென்றுரைப்பர், என்பதையும் உணர்ந்தவுடனே அவனுக்குப் பதைப்பும் மிகுந்தது. தமிழ்ப் புலவருக்கு அபராதம் நேர்தல் அடாது, நம் ஐயன் ஆட்சியிலே என்றும் அவன் தீர்மானித்தான்.

அவ்வளவில் அவன் விரைந்து சென்று, வடமலையப்ப பிள்ளையனை அடைந்து, தமிழ்ப் பாவலர் ஒருவர் சிறையில் கிடந்து புலம்புவதையும், பிள்ளையின் பெயரைப் பாட்டில் அமைத்துக் கூறியதையும், நாத்தழுதழுக்க நவின்றனன்.

அப்போது வடமலை உண்டி கொள்ளப் போகும் தறுவாய்; தமிழ்வாணரின் துயரைத் துடைத்த பின்பே, உண்டி கொள்வேன் என்று கூறித் தமது கறுப்புக் குதிரைமீது அவர் தாவி ஏறினர். பரியும் பார்த்திபனது மனக்கோளை மதித்ததே போல் நாலு கால் பாய்ச்சலில் பறந்தது. கணப்போதில் காவல்புரைத்தெரு சேர்ந்தது.

சேர்ந்ததும் தொப்பென்று கீழே குதித்து அச்சிறைவாயிலை நண்ணினர் வடமலை. சிறையின்

கதவு உடனே திறவுண்டது. உள்ளே சென்று நோக்கினார் ஐயன் அத்தீட்சிதரை. அப்போதும், அவரோ குழைக்காதரைத் துதித்துப் பாடிய வண்ணமே கண்ணும் கண்ணீருமாகக் காட்சி அளித்தார்.

அந்நிலை கண்டதும், அவ்வேந்தரது உள்ளம் விண்டது; உரை குழறியது; கண்களோ நீரைப் பெருக்கின. "என்ன பாவம் செய்தோம்! குழைக் காதரை நினைந்து மனம் கசியும் புலவர் சிகாமணி யைப்பற்றி இன்றளவும் அறிந்து கொள்ளாது போனேனே என்று கலங்கினார்; தமிழன்னைக்குத் தொண்டு புரியும் நான் தீங்கன்றோ இழைத்தேன்?" என்று தேம்பினார்.

பின்பு அப்பெரியாரைப் பரிவுடன் நோக்கி, அவரது வரலாற்றை யெல்லாம் விசாரித்தறிந்து கொண்டார் அவ்வடமலையப்பன்; உடனே தன்னை மன்னிக்குமாறு அவரை வேண்டிக்கொண்டார். இதற்குள் சிறைவாயிலருகே பல்லக்கு ஒன்று வந்து சேர்ந்தது. அதில் ஏறி அமருமாறு அவரை வேண்டி நின்றார் வடமலையப்பன்.

அதற்கு, "ஐயனே! நான் மட்டும் விடுதலை கொண்டு என்ன பயன்? வரி கொடாமைக்காக என்போல் சிறையில் கிடப்பார் பலர் உளரே. அன்னவருக்கும் கதிமோட்சம் வேண்டாமோ?" என்று தீட்சிதர் சொல்லலானார். அவ்வளவில் இன்னும் பல பல்லக்குகள் அங்கே வந்தன.

சுருங்கச் சொன்னால், சிறையில் கிடந்த அனை வருக்கும் அக்கணமே விடுதலை கிட்டியது. தீட்சித ரின் ஊர்வாசிகளான பலரும் விடுதலை பெற்று

மகிழ்ந்து, அப்பல்லக்குகளில் அமர்ந்து கொண்டனர். அவரையும் பிறரையும் பிள்ளையன் தமது மாளிகைக்கு இட்டுச்சென்றார். அங்கே அனைவருக்கும் நல்விருந்து நடைபெற்றது.

விருந்தின் முடிவிலே, "திருப்பேரை நிலங்களெல்லாம் பாண்டியன் காலத்தே இருந்தமைபோல் சர்வமானியமாகவே இனி இருந்து வரும். இதுவரை நிலுவையான வரியும் இனிமேல் வசூலிக்கப்படமாட்டாது," என்று அவ்வேந்தர் மனக்களிப்புடன் மொழிந்தார்.

அப்பால் அதுவரை தீட்சிதர் பாடிய பாமாலையை வடமலை விரும்பிக் கேட்டார்; அதன் சுவையும் அமைப்பும் கண்டு களிப்பே மிகுந்தார். அத்துடன் குழைக்காதரை நினைந்து, நினைந்து அவர் உருகியதை அறிந்தறிந்து மனம் கரைந்தார்; மீண்டும் மன்னிப்பும் வேண்டினர்.

அதுவரையில் பாமாலையிலே அறுபத்தைந்து பாடல்களே இயற்றப் பெற்றிருந்தன. ஆதலின், "இந்நூலை முற்றும் பாடி முடித்தல்வேண்டும்", என்று அவர் விரும்பி நின்றார். புலவர் மேலும் முப்பத்தைந்து செய்யுள்கள் இயற்றி, சதகமாகப் பூர்த்தி செய்தார்.

பக்தரைக் காக்கும் பரம புண்ணியன் அல்லவா திருமால்? அன்றியும் அவர் காத்தல் கடவுள் அன்றோ? தாம் சிறையில் கிடந்து முறையிட, அம்முறையீடு கேட்ட கருணைக் கடவுளினாலேயே, தமக்கு விடுதலை கிட்டியதாக அப்புலவர் நம்பலானார். விடுதலை பெற்ற நிலையில் அவர் பாடிய பாடல் இதுவாம்:—

ஆடகச் சேவடியால் எமது
ஆவி அளித்தனை, கார்க்
கோடகப் பாவிகள் வாராமல்
காத்தனை, கோசல நல்
நாடகத்து ஓர்சிலை தாங்கி
வெங்கூற்றை நகைக்கும் அந்தத்
தாடகைக்கு ஓர் கணை
தொட்டாய்! தென் பேரைத் தயாநிதியே!

'தென்பேரையில் எழுந்தருளியுள்ள தயாநிதியே! அன்று கோசல நாட்டிலே கோதண்டம் என்னும் சிலையைத் தாங்கி நின்று, யமனையும் சிரித்து நின்ற தாடகை மாளும்படி ஒரு கணைவிடுத்தாய்! இன்றோ பொன்மயமான சேவடி தாங்கி எங்களது உயிரைக் காப்பாற்றினாய். தண்டல்காரரான கார்க்கோடகப் பாவிகள் மீண்டும் வராமல் எங்களைக் காத்தருளினாய்' என்பதே அப்பாடலின் கருத்தாம்.

குழைக்காதர்மீது உருகிப் பாடினார், அதனால் அம்மாயன் மனம் உவந்து விடுதலை தேடித் தந்தார். அத்தகைய சிறப்புடையது இந்நூல். ஆதலின், மனக்குறையோ துயரமோ தீரவேண்டின், இப்பாமாலையைப் பாடித் துதிப்போமாக என்று அப்பக்கத்திலுள்ளார் பயபக்தி விசுவாசத்துடன் பாமாலையைத் தினம் பாராயணம் செய்து வருவதை இன்றும் காணலாம்.

அவ்விதம் பாராயணம் செய்து பலன் அடைந்தோர் பலராவர். முன்னம் திண்ணைப் பள்ளிக்கூடங்களிலே அப்பாமாலை வரன் முறையாக ஓதப்பட்டு வந்தது. பாடசாலைகளிலும் பாடமாக இருந்தது. நம்பினோர் கெடுவதில்லை, இது நான்கு மறைத் தீர்ப்பு அல்லவா?

வடமலையப்பன் அப்பாமாலையைத் தமது சபையில் அரங்கேற்றுவித்தார். புலவர் பலர் வீற்றிருந்து, செய்யுட்கள் ஒவ்வொன்றையும் கேட்டுச் சிரக்கம்பம் செய்தனர். பின்பு, தக்க பரிசில்கள் வழங்கி, நாராயண தீட்சிதரை வழியனுப்பினர் அவ் வடமலையப்பன்.

தென் திருப்பேரை இன்னும் தமிழ் மணம் கமழும் ஊராக விளங்குகின்றது. தமிழ் வல்லார் பலர் அங்கே வாழ்ந்து வருகின்றனர். அவர்களிடம் வரன் முறையாகப் பாடம் கேட்டுவரும் சீடர்களையும் இன்றுகூடப் பார்க்கலாம்.

குழைக்காதரின் பாமாலையோ தொட்டாலும் கை மணக்கும், சொன்னாலும் வாய் மணக்கும். இனி, வரிகொடாமைக்காகச் சிறையில் போடுதல்கூடா தென வடமலையப்பன் ஆணையிட்டதை இங்கே குறிப்பிடவேண்டும்.

9. அழகர் பணி

திருநெல்வேலி ஜில்லாவில் முக்கூடல் என்னும் சிறு கிராமம் ஒன்று உள்ளது. அது தாமிரபருணி நதியின் வடகரையில் விளங்கும். இருநூறு ஆண்டுகளுக்கு முன்னம், அது ஒரு பெரு நகராக இருந்தது. அப்போது அங்கே மாடங்களும், கூடங்களும், மண்டபங்களும், மன்றங்களும் நிரம்பி இருந்தன.

முன்காலத்தில் சித்திரா நதியும் கோதண்டராம நதியும் அந்த ஊரிலே தாமிரபருணி நதியில் கலந்தன. மூன்று ஆறுகள் கூடிய இடத்தில்

இருப்பதால், முக்கூடல் என்று அது பெயர்பெற்றது. சித்திரா நதியைச் சிற்ரூறு என்பர்.

அச்சிற்ரூறு திருக்குற்ருலத்துக்கு மேற்கே உற்பத்தியாகும். இதன் நீர்விழ்ச்சிகளுள் தேன் அருவி என்பது மிகவும் சிறப்புடையது. கோதண்டராம நதி கழுகுமலையின் அருகே உற்பத்தியாகும். இதன் நீர் சிறிது உவர்ப்பாய் யிருக்கும். அதனுல் உப்போடை எனப்படும்.

கோதண்டராம நதியைக் குறித்து ஒரு கதை உண்டு. மாரீசமானைத் தேடிவந்த இராமபிரான் தாக மிகுதியினுல், ஆனைமலையிலிருந்து ஆனை நதியை வருமாறு பணித்தார். அந்த ஆனைநதி கறு நதி, கயத்தாறு என்றும் சொல்லப்படும்.

அந்த நதியில் வந்த நீர் உவர்ப்பாயிருந்தது. ஆதலின், தமது கோதண்டத்தைக் கீழே ஊன்றி அங்கிருந்து கங்கையை அவர் வரவழைத்தார். கங்கை தோன்றிய இடமே இப்போது கயத்தாறு என்னும் ஊரில் உள்ள கோதண்டராம ஆலயத்தில் காணப்படும் தீர்த்தமாம். கறு நதியே கோதண்டராம நதியாகி உப்போடை என வழங்குகின்றது.

முக்கூடலில் பழமையான விஷ்ணு ஆலயம் ஒன்று உள்ளது. அங்கே சிலைவடிவில் அருள் புரியும் திருமாலின் திரு நாமம் அழகர் என்பதாம். அவரை அலங்காரர் என்றும், செண்டலங்காரர் என்றும் கூறுவர். கைதனில் செண்டு என்னும் ஆயுதம் இருந்ததால், செண்டலங்காரர் என்னும் பெயர் வந்தது.

பாண்டிய நாட்டிலே திருமாலிருஞ் சோலைமலை என்று ஒரு விஷ்ணு ஸ்தலம் உண்டு. அம்மலையில்

எழுந்தருளியிருக்கும் திருமாலுக்கும் அழகர் என்னும் பெயர் வழங்கும். இரண்டு அழகருக்கும் வேற்றுமை தெரிய வேண்டும் அல்லவா?

முக்கூடலில் காட்சிதரும் அழகரைக் "கூடல் அழகர்" என்று அழைப்பர். சோலைமலை அழகரையோ மால் அலங்காரன் என்று சொல்லுவார்கள். சோலை மலை; அழகர் மலை எனவும் அழகர் கோயில் எனவும் சொல்லப்பெறும். கூடல் அழகரைக் குறித்து ஒரு வரலாறு உண்டு. அது யாதெனில் :—

தேவலோகத்திலே இந்திரன் இல்லாது போக வேண்டும் என்று சுக்கிராசாரியின் தாயார் ஒரு சமயம் தவம் புரிந்துகொண்டிருந்தாள். அதை அறிந்து, இந்திரன் பயந்து, திருமாலை அடைந்து, குறையிரந்தான். திருமால் கருணை பூத்தார்.

அதுபற்றி மஹா விஷ்ணு தமது சக்கரத்தை ஏவினார். அது சென்று அவளைக் கொன்றது. அதனால் பிரமஹத்தி தோஷம் சக்கரத்தாழ்வானுக்கு வந்து சேர்ந்தது. அதனை நீக்கி அருள்புரியவே, முக்கூடலில் திருமால் எழுந்தருளினார் என்பர்.

"முக்கூடல் பள்ளு" என்று ஒரு பிரபந்தம் உண்டு. உழவர் உழத்தியரின் ஏழை வாழ்க்கையில் நிகழும் நிகழ்ச்சிகளை எளிய நடையிலே செய்யுள் வடிவில் அழகாக வர்ணித்தல் 'பள்ளு' என்னும் பிரபந்தத்தின் கருத்தாம். முக்கூடல் பள்ளிலே அந்நகரைக் குறித்து ஒரு செய்யுள் உண்டு. அது என்னவென்றால் :—

கொண்டல் கோபுரம் அண்டையில் கூடும்
கொடிகள் வானம் படிதரமூடும்

கண்ட பேரண்டம் தண்டலை நாடும்
கனகமுன்றில் அனம் விளையாடும்
விண்ட பூமது வண்டலிட்டு ஓடும்
வெயில் வெய்யோன் பொன் எயில் வழிதேடும்
அண்டர் நாயகர் செண்டலங்காரர்
அழகர் முக்கூடல் ஊர் எங்கள் ஊரே.

சீவலப்பேரி என்று அம்முக்கூடலுக்கு ஒரு பெயர் உண்டு. பன்னிரண்டாம் நூற்றூண்டில் அரசு புரிந்த மாறவர்மன் ஸ்ரீவல்லபன் என்பான் அம்முக்கூடலிலே ஓர் ஏரி கட்டி வைத்தான். அது பலருக்கும் மிக்கப் பயன் விளைத்தது. அதனல் அவன் பெயரைக்கொண்டு ஏரியையும் ஊரையும் அழைக்கலாயினர்.

ஸ்ரீ வல்லபன் கட்டிவைத்த ஏரி "ஸ்ரீ வல்லபன் ஏரி" என்று பெயர் கொண்டது. ஊரும் அப் பெயரைத் தாங்கியது. "ஸ்ரீவல்லபன் ஏரி" என்பது நாளடைவில் "சீவலப்பேரி" என்று மருவியது. ஏரிகளுள் அந்த ஏரி மிகவும் சிறந்ததாம்.

அந்த ஏரிக்குச் சித்திரா நதியிலிருந்து தண்ணீர் வந்து பாயும். அதற்காக அந்நதியிலே ஒரு கல்லணை கட்டியிருந்தனர். நூறு ஆண்டுகளுக்கு முன்னம் வெள்ளத்தால் அந்த அணை அழிந்து போயிற்று. அது முதல் அந்த ஏரிப் பரப்போ நன்செய் நிலமாக மாறிவிட்டது; பலவிதப் பயிர்களைப் பயிராக்க உதவுகின்றது.

சீவலப்பேரியில் தாமிரபருணி நதி மிக அகலமாக இருக்கும். வருஷத்தில் பெரும்பாகமும் தண்ணீரானது ஆற்றின் நடுவே மிகவும் குறைவாகச் சிறிய ஓடைபோல ஓடும். நீரோட்டத்திற்கும் கரைக்கும் நெடுந்தூரம் உண்டு. ஆதலின் தண்

ணீர் மொண்டு வருதல் மிகவும் சிரமம். அதனல் சீவலப்பேரியில் பெண் கொடுப்பதைவிடச் செக் கிழுக்கப் போடலாம் என ஒரு வசனம் உண்டு.

வடமலை அப்பன், சிவபக்தர். ஆயினும் அரன் அதிகன், உலகளந்த அரி அதிகன் என்னும் வேற் றுமை அவரிடம் கிடையாது. விஷ்ணு பக்தன் என்றும் அவரைச் சொல்லலாம். முக்கூடலிலே அவர் அழகிய மாளிகையொன்று கட்டி அதில் வசித்து வந்தார். முக்கூடல் பெருமான் மீதுள்ள ஈடுபாடே அதற்கு முக்கிய காரணமாம்.

முக்கூடலில் தங்கியிருக்கும்போது காலையி லும், மாலையிலும் அவ்வடமலை ஆலயம் சென்று செண்டலங்காரரை விதிப்படி வணங்கித் துதிப் பார்; ஆகமவிதிக்கு இணங்க அபிஷேக ஆராதனை கள் செய்விப்பார்; வெண்பொங்கல் படையல் போட்டு வேண்டுமளவு பக்தருக்கு வழங்குவார்.

மாதம் ஒருமுறை அங்கே மாலடியார்க்குத் ததியாராதனம் நடத்திக் களித்தல் அவர் வழக் கம். மாளிகைத் தோட்டத்திலிருந்து மலர்கள் கொய்து, அவைகொண்டு மாலை கட்டித் திருமாலுக் குச் சாத்துவதில் அவருக்கு உவகை அதிகம். திரு மாலை அலங்காரப் பிரியர் என்பர் பெரியோர்.

ஆதலின் அலங்காரரை உண்மையில் அலங் காரராகவே ஆக்கி, அனைவருக்கும் காட்சி அளிக்கு மாறு செய்வதில் அவர் சிரத்தை அளவிட முடி யாது. முத்தும், பவழமும், இரத்தினமும் கொண்டு அலங்காரருக்கு அவர் பூட்டிய அணிகள் பலவாம்.

தேர், திருநாட்கள் நடக்கும் காலத்தில் தாமே முன் நின்று, அவற்றை அதிவிமரிசையர்க நடத்தி

வைப்பதில் அதிக ஆனந்தம் காண்பார் அவர். 'மன்னன் எவ்வழி, அவ்வழி மக்கள்' என்பது போல் அம்மன்னவனது அதிகாரிகளும் சீமை மக்களும் பெருந் தெய்வ பக்தராக விளங்கா நின்றனர். தெய்வம் களிப்பின், தேசம் கொழிக்கும் அல்லவா?

அவ்வதிபனது கட்டளைக்கு இணங்க, ஆலயத்திலே தினந்தோறும் நான்மறைகளின் பேரொலி எழும்பும். பண் அமைதி தவறுமல், திருவாய்மொழி ஓதப்பெறும். ஆஸ்திக அறிவை வளர்ப்பதற்கு ஏற்ற அரிய புராணப் பிரசாரங்களும், சொற்பொழிவுகளும் நடவா நிற்கும்.

அழகரின் ஆலயத்தை அடுத்து, ஐந்து அழகிய தடாகங்கள் வடமலைஅப்பன் அமைத்து வைத்தார். அத்தடாகங்களைச் சுற்றிய சுவர்கள் கருங்கல்லால் ஆனவை. அக்கற்கள் எல்லாம் சதுர வடிவு கொண்டன. அவை ஒவ்வொன்றிலும், திருமாலின் சங்கு, சக்கரம் இவை செதுக்கப் பெற்றன.

வடமலைஅப்பனது தாயார் தனது கடைநாளில் திருமுக்கூடலில் வசித்து வந்தாள். பொருனை எனப்படும் தாமிரபருணியின் தண்ணீர் குடித்தே காலங் கழிக்கவேண்டும் என்று அவளுக்கு விருப்பம் உதித்தது. உடனே, மாளிகை ஓரமாக ஓடி வரும் வண்ணம், அந்நதியிலிருந்து ஒரு கால்வாய் வெட்டி வைத்தார் அப்பக்தர் பெருமான்.

அதுகண்டு அவரது அன்னை அகம் களித்தது ஒருபுறம் இருக்க, நீர்ப்பாசனத்திற்கும் அக்கால்வாய் நெடுநாள் பயன்பட்டு வந்தது. பின்னளில் பராமரிப்புக் குறையவே, அக்கால்வாய் அழிந்து போயிற்று.

திருமுக்கூடலில் உள்ள விருத்தரை அடுத்துக் கேட்டால் வடமலைஅப்பன் பக்திப் பெருக்கையும், திருப்பணி விவரத்தையும் கதைகதையாகக் கூறி, நமக்குப் பரவசம் ஊட்டுவர். கன்ன பரம்பரைச் செய்திகளில் அக்கோமான் இன்னும் திகழ்கின்றார் துல்லியமாக.

அவரது ஆட்சியின் பலனுக உழவரும் உழத்தியரும் தெய்வ பக்தியில் தவருது சிறந்திருந்தனர். அதனுல் மழை தட்டாமல் பெய்து வந்தது. இதற்கு ஆதாரமாக அம்முக்கூடல் பள்ளு என்பதில் ஒரு செய்யுள் இது:—

முத்தி தரவந்த திருமுக்கூடல் மாதவர்தாள்
பத்தி மறவாத பண்ணைப் பட்சேரிப் பள்ளரெல்லாம்
புத்தியுடன் தெய்வநிலை போற்றியபின் வானமுகில்
எத்திசையும் பெய்ய மழையின் குறி உண்டாகியதே.

10. முருகதாஸன்

வாணிபம் கருதி முதன் முதல் இங்கே வந்த மேனுட்டினர் போர்த்துகல் தேச வாசிகள். அவர்களை நாம் போர்த்துகல்காரர், போர்த்துகீசியர் என்போம். நமது தேசத்தின் மேலைக் கடற்கரையிலும், இலங்கைத் தீவின் பக்கத்திலும், மலாய் நாடுகளிலும் அன்னவர் வர்த்தகம் புரிந்து வந்தனர்.

ஒரு நூறு வருஷகாலம் அவர்களே, கடலரசராக விளங்கி வந்தார்கள். வாசனைத் திரவியங்கள், சீட்டித் துணிகள் இவற்றின் வியாபாரம் அவர்களின் ஏக போகமாக இருந்து வந்தது. நம் தேசத்திலே கோவா, தையு, தாமன் என்னும் நகரங்கள் இன்னும் அவர்களுக்குச் சொந்தம்.

வர்த்தகத்துறையில் அவர்கள் பெரும்பொருள் ஈட்டி வந்தார்கள். உலாந்தாக்காரர் அல்லது டச்சுக்காரர் என்போர் அது கண்டு, ஆசை மிகுந்து, நம் தேசத்துக்கு வரலாயினர். அது பற்றி அவ்விருவருக்கும் இங்கே அடிக்கடி பூசல்கள் விளைந்தன.

மதுரை திருமலை நாயக்கன் காலத்திலும் அதற்குப் பின்பும் அச் சண்டைகள் நீடித்திருந்தன. அப்போது தமிழகத்தின் கீழைக் கடற்கரையிலே தென் கோடியிலுள்ள தரங்கம்பாடி, தூத்துக்குடி முதலிய துறை முகங்களை மாறி மாறி அவ் விரு வரும் கைப்பற்றி நின்றனர்.

அக் கரையோரத்தில் நடந்து வந்த முத்துக் குளி, பவழ எடுப்பு இரண்டையும் அவர்கள் ஆண்டு அநுபவிக்க முயன்றனர். அதற்காக அவர்களிட மிருந்து கப்பமாக ஒரு சிறு தொகையை வாங்கிக் கொள்வதோடு மதுரை நாயக்க மன்னர் வாளா விருந்து விட்டனர்.

அவ் விருவரின் பூசல் காரணமாகச் சிற்சில சமயங்களில் திருநெல்வேலிச் சீமையின் கடலோர வாசிகளுக்குக் கஷ்டம் நஷ்டம் நேரும். கி. பி. 1658-ம் ஆண்டிலே தூத்துக்குடியை டச்சுக்காரர் வசம் செய்துகொண்டு, திருச்செந்தூர் நகரிலும் அரண்கள் அமைத்து நின்றனர்.

முருகக்கடவுளின் ஆறு படை வீடுகளுள் ஒன்று அத் திருச்செந்தூர். 'திருச்சீரலைவாய்' என்று தமிழ் நூல்கள் அந் நகரை அழைக்கும். சூரபதுமன் மீது படைகொண்டு பாய முருகக் கடவுள் முனைந்த காலத்திலே, விசுவகர்மா என்னும்

தெய்வத் தச்சன் அந் நகரை நிருமித்துத் தந்தனன் என்று கந்தபுராணம் கூறும்.

மயிலும் சேவலுமாக அச் சூரனை மாற்றி வெற்றி கொண்ட பின்பு, வேல் முருகன், பெருமிதமாக அந் நகரில் வீற்றிருந்து, பக்தருக்குக் காட்சி அளித்தான். அங்கே எழுந்தருளியுள்ள குகப்பெருமானை, ஆண்டவன் என்றே அன்பர் அழைப்பர். கலிகாலத்திலே கண்கண்ட தெய்வம் கானமயில் வீரன்.

வேண்டினர் வேண்டிய வரம் அளிக்கும் வள்ளல் அவன். உதாரணமாக, குமர குருபர சுவாமிகள் என்பார் பிறந்தபோது இரு கண்ணும் தெரியாத குருடராக இருந்தார். பெற்றோர் அக் குழந்தையை எடுத்துச் சென்று, திருச்செந்தில் ஆண்டவன் சந்நிதியில் கிடத்தி வரன் கிடந்தனர்.

வடமலையப்ப பிள்ளையன் அப்பெருமானிடம் பய பக்தி விசுவாசம் கொண்டவர். அந்த ஆண்டவனுக்கு அவர் செய்துள்ள திருப்பணிகள் பலவாம். அங்கே அரண் அமைத்து நின்ற டச்சுக் காரர் ஒரு சமயம் தோல்விகொண்டு, கோபவெறி மிகுந்து ஆண்டவனது சிலையை எடுத்துக் கடலிலே வீசி எறிந்துவிட்டுப் போயினர்.

முருக பக்தருக்கு அது கண்டு பதைப்பு மிகுந்தது; பரிபவம் முதிர்ந்தது. உடனே அப் பக்தர் புசிப்பு என்பது கொள்ளாமல், திருநெல்வேலி வேந்தனும் வடமலையப்பனிடம் சென்று முறையிட்டுக் கொண்டனர். அது கேட்டதும் சிறிது நேரம் தீயில் விழுந்த புழுப்போல் அவ் வேந்தன் துடித்தார், பதைத்தார், துள்ளினர்.

பின்பு தூத்துக்குடிக்கு ஏவலாளர் பறந்து சென்றனர். அங்குத்தான் பரதவகுல வீரர் அதிகம். தொன்று தொட்டு அவர்கள் சாலச் சிறந்த மாலுமிகள். நம் தேசத்தில் கப்பல் தொழில் குன்றிய வுடனே, கட்டு மரங்களில் ஏறியமர்ந்து கடல் மீது சென்று, மீன் பிடித்தல் அன்னவரின் தொழிலாகி விட்டது. கடலிலே எத்துணை ஆழ மாயினும், உள்ளே மூழ்கி, அடித்தரையில் கிடப் பதை அவர்கள் எடுக்க வல்லவராம்.

அத்தகைய பரதவர் திருச்செந்தூர் சேர்ந்து கட்டு மரங்களின் மீதமர்ந்து, கடலுக்குள்ளே குதித்து எங்கும் தேடினர். ஆயினும் வேல் முருக னது விக்கிரகம் தென்படவில்லை. வடமலையப்பன் அது அறிந்து நெஞ்சம் புண்ணுயினர்; மேலும் சிலை கண்டெடுக்கப்படும் வரையில் அன்னபானம் செய்வதில்லை என்றும் அவர் விரதம் பூண்டார்.

ஒன்று, இரண்டு, மூன்று என ஏழு நாட்கள் பறந்து விட்டன. பரதவரும் பக்தரும் கடலினூடே துருவித் துருவித் தேடியும், முருகன் சிலை அகப் பட்ட பாடில்லை. ஒருவார காலமாக அன்னபானம் இல்லாமையால், வடமலையின் உடம்பு துரும்புபோ லாகிவிட்டது. அவரது உயிருக்கும் ஆபத்து நேருமோ என்று உற்றுரும் உறவினரும் சீமை வாசிகளும் உள்ளம் புழுங்கினர்.

திருச்செந்தில் ஆண்டவனது சிலை கிட்டா விடின் ஆருயிரை ஆர்வமுடன் விட்டு விடுவதாக வடமலையப்பன் தீர்மானங் கொண்டு, ஏழாம் நாள் இரவு மஞ்சத்திலே சாய்ந்தார். நடுநிசி வேளை. குகப் பெருமான் அப்பிள்ளையினது கனவிலே தோன்றி, விக்கிரகம் கிடக்குமிடத்தை அறிவித்துச் சென்றான்.

பொழுது ஒரு பக்கம் புலருமுன்னே, கடற் கரை குறுகினர் பக்த வடமலை; அருணோதயம் ஆயிற்று. கடலிலே கட்டு மரத்தின்மீது அவரே புறப்பட்டார். பலரும் வேண்டாமென்று தடுத் தனர். தாமே சிலையை எடுத்து வரவேண்டுமென அவர் பிடிவாதமாக இருந்தார். கடலிலே அவர் புகுந்தது தான் தாமதம். ஆர்கலியில் கொந்தளிப்பு மிகுந்தது. பேரலைகள் கிளம்பிக் கிளம்பிக் கரையை நோக்கி வந்து மோதின. கட்டுமரமோ சிறிது தூரங் கூடக் கடலிலே செல்ல முடியவில்லை; அலை களினல் அலைப்புண்டு கரையோரம் வரலாயிற்று. எல்லாம் தெய்வ சோதனையென அம் முருகதாஸர் மதித்துக் கைதேர்ந்த பரதவரைக் கொண்டு கட்டு மரத்தைச் செலுத்தலானுர்.

கால்மைல் தூரம் சென்றதும், கட்டுமரம் கவிழ்ந்தது. வடமலையப்பனும் பரதவரும் கடலில் வீழ்ந்து தவிக்கலாயினர். அவ்வேளை நீரினுள்ளே அந்நிருபன் மூழ்கி நோக்குகையில், கானமயில் வீரனது சிலை கைக்கு எட்டியது. ஆனந்தம் மேலிட்டு அதனை மார்போடணைத்துக் கொண்டு, நீர் மட்டத்துக்கு வந்தார் அவ்வேந்தர்.

அவ்வளவில் கருங்கடலும் சாந்தி கொண்டது. அலைகள் அவ்வளவாகக் கிளம்பவில்லை. அது கண்டு களித்து, மார்பினல் நீந்திக்கொண்டே, அவர் கரை சேர்ந்தார். சிலையைக் கண்டதும், பக்தர் குழாம் பரவசம் மேலிட்டு, "முருகையா, முருகையா," என்று பெருங்கோஷம் எழுப்பினர். அது வானை முட்டியது.

அப்பால் அச்சிலையை ஆகம விதிப்படி அவ் வடமலை பிரதிஷ்டை செய்தார். வேதகீதம் ஒரு

புறம், திருப்புகழ் கானம் ஒருபுறம், பக்த கோடிகளின் ஆனந்தக் களிப்பு ஒருபுறம், இவற்றினிடையே ஆண்டவனுக்கு அபிஷேக ஆராதனைகள் நடைபெற்றன. சிலை கிடைத்த செய்தியறிந்து, மதுரை மன்னவனும் மகிழ்ந்து வந்து முருகப் பிரானை வாழ்த்தி வணங்கினன்.

சிலையைத் தேடியடைந்த செய்தியை நிலைநாட்ட அங்கே வடமலையப்பன் மண்டபமென ஒரு மண்டபம் எழும்பியது. சுப்பிரமணியக் கடவுளுக்கு விழா நடக்கும் காலத்தில், அம் மண்டபத்திலே ஆண்டவனை எழுந்தருளச் செய்தல் இன்றும் வழக்கம். அக் காட்சியைக் கண்டுகளிக்க அன்பர் பக்தி விசுவாசத்துடன் திரண்டு வருவர்.

காவடி எடுப்போரும், நாவினூடே வேல் ஊசியைச் செருகிக் கொள்வோரும், பிறரும் அம் மண்டபத்திலே பிரார்த்தனை செலுத்துதல் உண்டு. வென்றி மாலைக் கவிராயர் என்பார் அந்த அரிய செயலைக் குறித்து நீண்ட கீர்த்தனமொன்று பாடியுள்ளார்.

11. வடமலேந்திரன்

செல்வ மிகுதிபற்றி இந்திரன் என்றும், சீரிய கருணையைக் கருதிச் சந்திரன் என்றும், அரசரைப் புலவர் புகழ்தல் மரபு. போக போக்கியங்களில் சிறந்தவன் இந்திரனே. குளிர்ந்த கிரணங்களால் உயிர் அனைத்தையும் இன்புறச் செய்பவன் சந்திரனேயாம்.

முக்கூடல் பள்ளு என்னும் பிரபந்தம் பாடிய புலவன் நமது வடமலையைக் குறித்து உரைக்கை

யில், "கோவிற் பெரிய வடமலேந்திரன்" என்று புகழ்கிருர். அரசப் பிரதிநிதியாக இருந்தாலும், அரசனே போல் அவர் ஆட்சி செலுத்தி ஆண்மை காட்டி வந்தார்; இந்திரனைப் போல் கொலு இருந்தார்.

அவர் அமர்ந்து செல்லும் பட்டத்துக் குதிரை கறுப்பு நிறமானது. குதிரை ஏற்றத்தில் அவருக்கு அப் புரவி பரிசாகக் கிடைத்தது. நீருண்ட மேகத்தின் நிறம் போல் கறுத்தது அக்குதிரை என்பார் அப்பள்ளின் ஆசிரியர்.

"கோவிற்பெரிய வடமலேந்திரன்," என்று கூறிய அந்த ஆசிரியர் மற்ருேர் இடத்திலே, "செங்கோல் வடமலேந்திரன்," என்றும் சிறப்பாகப் பேசுகிருர். தமர் என்றும் பிறர் என்றும் வேற்றுமை காட்டாமல், நடுத்திட்டமாகவே நீதி வழங்கி வந்தார் அவர்.

செஞ்சிக்கும், கூடலுக்கும், தஞ்சைக்கும் அவரது ஆணை பரவியிருந்தது. செஞ்சி என்பது தென் ஆர்க்காடு ஜில்லாவிலுள்ள செஞ்சிக் கோட்டையாம். அக் கோட்டையையும் சீமையையும் தனி அரசன் ஒருவன் அந்நாளில் ஆண்டு வந்தாலும், வடமலையின் ஆண்மை கேட்டு அவ் வேந்தன் வியந்தது ஆச்சரியமில்லை.

கூடல் என்பது மதுரைமா நகரைக் குறிக்கும். அம் மதுரை வேந்தனும் திருமலை நாயக்கன் அவ் வடமலேந்திரனது வீரத்தை உணர்ந்தே, தான் புரிந்த போர்களில் வடமலையின் உதவியை நாடி நின்றனன். தஞ்சைப் போரில் அவர் பெருவீரம் விளைத்தார்.

கார்பூத்த வண்ணனார் கண்ணனார் அளகர் படிக்
 கட்டளைகள் உயரவே கூவாய் குயிலே!
பேர்பூத்த முக்கூடல் மிக்க ராமாநுசன்
 பீடம் மிக விளங்கவே கூவாய் குயிலே!
பார்பூத்த கீர்த்தி பெறும் வைணவரும், தானிகரும்
 பரிசனமும் வாழவே கூவாய் குயிலே!
சீர் பூத்த காவை வருவடமலையப்பமுகில்
 செங்கோன்மை ஓங்கவே கூவாய் குயிலே!

இவ்விதம் அம்முக்கூடல் பள்ளின் ஆசிரியர் அவ்வடமலையை வாழ்த்துகிறார்; அவரை மேகத்துக்கும் ஒப்பிடுகிறார். முகிலோ கைம்மாறு கருதாது நீரைப் பொழியும். அவ்வாறே வடமலையும் பிரதிபலனை எதிர்பாராமல் தமது கடமை என்று கருதி அன்பு அருள் கொடை முதலியன பூத்து நின்றார்.

வடமலேந்திரனது அத்தகைய அருங்குணம் கண்டு களித்த ஆசிரியர் பரவசம் எய்தி அம்மன்னவனது உற்றாரும் உறவினரும் தழைத்து வாழ வேண்டுமென்று ஓர் இடத்திலே வாழ்த்துகின்றார்.

வடமலையப்பனது விழுமிய மாளிகை கொண்டது திருமுக்கூடல் என்னும் தலம். அத்தலத்தில் வாழும் உழவரது உயரிய நடையினைக் குறித்து அப் பிரபந்தத்தில் காணப்படும் செய்யுள் இது.

தினச் சத்திரத்துக்கு என்றும், பெரிய நம்பி
 திருமாளிகைக்கு என்றும் சில நெல்லுக் கொடுப்பார்
சனக் கட்டளை எழு திருப்பதிக்கும்
 தலத்தார் படிக்கும் சில சாலி அளப்பார்
மனதுக்கு இனிய காவை வடமலேந்திரன்
 மடத்துக்கு வேண்டும் செந்நெல்வாரிக் குவிப்பார்
கணக்கும் சிறப்பு அமையக் கட்டி அளப்பார்
 கங்காணப்படி பண்ணைக்காரனார் முன்னே.

உழவராவோர் அறுவடை ஆனதும், சத்திரம் சாவடிக்கு முதலில் நெல் கொடுப்பர். அப்பால் வைணவப் பெரியாரின் மடங்களுக்கு நெல் ஈவர். அதன் பின் திருப்பதிகளுக்கும் அப்பதிகளில் தெய்வ ஊழியம் புரியும் தலத்தாருக்குமாகச் சாலி நெல் அளப்பர்.

அங்ஙனம் அளந்த பின்பு தங்களது மனதுக்கு உகந்த வடமலேந்திரனது மடத்துக்கு வேண்டிய செந்நெல்லை வாரிக் குவிப்பர். அதனை அளக்கையில், மரக்காலுக்கு மேலே நெல்லைக் குவித்துக் கைகளை வளைத்துப் பிடித்து அளத்தல் முறைமை. அத்தகைய அளத்தலையே கட்டி அளத்தல் என்பர்.

வடமலேந்திரன் மடத்துக்கும் செந்நெல்லை வாரிக் குவித்தல் என்றால் அரசிறையாகக் கொடுக்க வேண்டிய நெல்லே யாகும். அரசிறையை அப்போது தானியமாகவே அதிகாரிகள்வாங்கி வந்தார்கள். காசாக வாங்கவில்லை என்று புலனாகின்றது.

களத்து மேட்டிலேயே உழவன் தனது கணக்கு வழக்கை வகுத்தும் தொகுத்தும் உரைத்து விடுவதனால், அரசிறை குறித்து அதிகாரிகளுக்கு நிம்மதி பிறக்கும். உழுது உண்போருக்கும், உழுவித்து உண்போருக்கும், கணக்கு வழக்கில் வாது நேராமல் சமரஸம் உதிக்கும். அவ்விதம் நேர்மையாக உழவுத் தொழில் நடந்துவந்தது வடமலேந்திரனது ஆட்சியிலே.

உழவுத் தொழில் தானே உலகினுக்கு அச்சாணி போன்றது!

II. வேங்கடேச மகிபாலன்

12. மாத்தூர் மகிமை

சோழ வளநாடு சோறுடைத்து என்பர் புலவர். காவிரியின் நீர் வளமே அதற்கு முதற் காரணம். பயிர்களுக்கும் உயிர்களுக்கும் ஆதரவாய் நின்று, பல வகையிலும் அந்நதி நலம் புரிந்துவரும்.

ஒரு வள்ளலைப் புகழும் காலையில், "காவிரி என்னத் தப்பாக் கருணையான்" என்று புலவர் புகழ்வர். அந்நீர்வளத்துடன் நிலவளமும் கூடிக் கொள்வதால், செல்வம் நிரம்பிக் கிடக்கும். அது பற்றி அதனைப் பொன்னி நாடு என்று பெருமையாகப் பேசுவர்.

புனல் நாடு என்றும் அதற்கு ஒரு பெயர் உண்டு. மண்ணுவதும் சோழ மண்டலமே என்று ஒளவைப் பிராட்டி கூறுவாள். பல்லாயிரம் ஆண்டுகளாக எல்லா நலங்களும் நிறைந்து, செல்வத்தில் செழித்துச் சிறந்து நிற்கும் நிலமண்டலம் அது.

முன்னம் கனக சூடாமணி, ஆதித்த வர்மன், வீரகேசரி, விக்கிரமன், அரிஞ்சயன், இராஜ ராஜன் முதலிய சோழ மன்னர் பலரிருந்து அரசு புரிந்த நிலையம் ஆனதால், சோழ நாடு என்னும் பெயர் கொண்டது.

வருந்தி வந்தவர்க்கெல்லாம் பெருந் துணையாய் நின்று பேணி வந்த அச்சோழ மன்னர் அறிவும் வீரமும், அன்பும் ஆற்றலும் உடையராய் முறை செய்து வந்தனர். தெய்வத் திருக்கோயில்களும் அறநிலையங்களும் அவ்வேந்தர் நிலைபெறச் செய்

தனர். அவர்களது ஆட்சித் திறத்தினால் அந்நாடு மிக்க மாட்சியுற்று விளங்கிற்று. குடிமக்கள் யாதொரு கலக்கமுமின்றி, மன அமைதியுடன் வாழ்ந்து வரலாயினர். நிலையான வளம் உடைய நாடே எவற்றினும் தலையாக நிற்கும் அன்றோ?

திரிசிராப்பள்ளியும், தஞ்சையும் சோழநாட்டில் அடங்கும். தென் இந்தியாவின் நெல் களஞ்சியம் என்று தஞ்சையை மிகவும் சிறப்பாகச் செப்புவர். அங்கே காவிரி நதி பற்பல கிளைகளாகப் பிரிந்து கடலுடன் கூடு முன்னம், அத் தஞ்சையைச் செழிக்கவைக்கும். நெல் விளைவுக்கு உறைவிடம் அது.

> "தள்ளா விளையுளும் தக்காரும் தாழ்விலாச்
> செல்வரும் சேர்வது நாடு."

என்று திருவள்ளுவர் கூறுவார். நிலவளப்பத்தோடு அறிவுடையாரும் திருவுடையாரும் தன்னிடம் அமையப் பெற்றதே நாடாம் என்பது அக்குறளின் பொருளாம். அக்குறளினுக்கு ஓர் இலக்காக இலங்கும் அத்தஞ்சைச் சீமை.

தணியாச் சிறப்புடைய தஞ்சைச் சீமையில், செல்வரையும் சீரியரையும் இன்றும் காணலாம். சோழவேந்தருக்குப் பின்வந்த அரசர் அச் சீமையை ஒரு கலைக்கோயில்போல் ஆக்கினர்.

நான் மறையும் ஆறங்கமும் வல்ல வேதியர் அங்கே நிரம்ப உள்ளனர். அதிகாலையிலே சிடர்கள் வேதசந்தை சொல்லுதல் இன்றும் நடைபெற்று வரும். நுண்கலைகளான கானம், நடனம் இவை பயில்வோரின் நாதகீதமும் நம்மைப் பரவசப் படுத்தும்.

அத்தகைய தஞ்சையிலே மாத்து என ஓர் ஊர் உண்டு. அது காவிரி நதியின் கரையில் உள்ளது. பெருமை மிக்க பூசுரர் பலர் முன்னம் அங்கே மிகுதியாக வாழ்ந்து வந்தனர். இன்று அது ஒரு சிறிய கிராமமாகவே தோன்றும்.

சிறிது காலத்திற்கு முன்போ அங்கே அழகிய மாடங்களும் விழுமிய மண்டபங்களும் நிறைந்து இருந்தன. ஏழு அடுக்கு வாய்ந்த மாடங்களும் கூடங்களும் மேகமண்டலத்தை முட்டி நின்றன என்று ஒரு புலவர் வர்ணிக்கிறார்.

வெண்மையான சுண்ணம் தீட்டப்பெற்று, மேல் நோக்கி உயர்ந்த மாளிகைகள் இரவிலே வெண்ணிலாப்போல் ஒளி வீசும். வான வீதியிலே முழுமதி தோன்றியதும், வெண்முத்தினால் சமைத்த சிறு குன்றுகளேபோல் அம்மாடங்கள் துலங்கும்.

அந்த நகரைச் சுற்றிலும் இளவாழைத் தோட்டங்கள் நிறைந்திருக்கும். கன்னித் தெங்குகள் செறிந்த சோலைகளும் சிறந்து தோன்றும். குலைகள் நிரம்பிய கமுகு மரங்களும் ஆங்காங்கே நெருங்கி நிற்கும்.

மேலும் நீண்ட கதிர்க் கற்றைகளையுடைய செந்நெல் வயல்களும், காட்சிக்கினிய கரும்புத் தோட்டங்களும், பல பல வகையான பழ மரங்கள் நிறைந்த தோப்புக்களும், பிறவும் அந்நகரின் வளமையை எடுத்துக் காட்டுவனவாயிருந்தன.

இனி, அந்நகரிலே வேதவித்தும், வேதாந்த தீபமும், அர்த்த சாஸ்திர ஜோதியுமான பெருமாள் ஐயன் என்னும் பெருமான் ஒருவர் இருந்து வந்தார். தஞ்சைச் சீமையின் மன்னர் சபைக்கு அவர் ஓர் அணிகலம் ஆவார்.

வேதப் பொருளிலோ, தர்மநெறியிலோ, அரசியல் விதிமுறைகளிலோ, ஐயம்திரிபு எழுந்தால் அந்த அய்யனை அடைந்து உண்மைப் பொருளை உணரும் வண்ணம் உயர் அதிகாரிகள் அனைவரும் காத்து நிற்பர்.

அவரை அனைவரும் பெயர் சொல்லி அழையாமல், ஐயன் என்றே அன்புடன் அருமையாக அழைத்து வருவர். குல ஒழுக்கத்திலே அவர் சிறிதும் குன்றியது கிடையாது. குணசீலம் என்பது அவரையே புகலிடமாகக் கொண்டது எனல் வேண்டும். அழியாச் செல்வமான கல்விப் பொருளை வாரிவாரி வழங்கி வந்த அப்பெருமாள் ஐயனுக்கு நன்மகன் ஒருவன் தோன்றினன். அவனைத் திருவேங்கடநாதையன் என்பர்.

"தம்மின் தம்மக்கள் அறிவுடைமை மாநிலத்து
மன்உயிர்க்கு எல்லாம் இனிது"

என்னும் வாக்கினைக் கடைப் பிடித்து அந்நன் மகனை அரிய கல்விமானாக ஆக்கினார் அப்பெருமாள் ஐயன். அம்மகனே அவரது பொருள் ஆயினன். மலரின் மணம் நெடுந்தூரம் கமழும் அன்றோ?

அந்நாளில் மதுரையிலிருந்து அரசு செலுத்தி வந்த நாயக்க வேந்தர் என்போர் அத்திருவேங்கட நாத ஐயனை அழைத்து வந்து, அரசியல் ஆலோசகராக அமர்த்திக் கொண்டனர். மதுரை அரசை அத்திருவேங்கடன் திறம்பட வகுத்தும் தொகுத்தும் வரிசைபெறச் செய்தான்.

மதுரைமா நகரிலே மண்டபங்கள் சமைத்த மகிமை எய்திய திருமலை நாயக்கன் என்பான் அத்திருவேங்கடநாத ஐயனை மதுரை அரசின் கவர்னர்

ஜெனரலாகவும் தலைமை அரசுப் பிரதிநிதியாகவும் கொண்டு மகிழ்ந்தனன்.

மதுரை அரசின் பற்பல மாகாண கவர்னர்களும் அத் திருவேங்கடநாத ஐயனது சொற் கேட்டு மிக்கத் திறமையுடன் ஆட்சியை நடத்தி வந்தனர். அதனல் அந்த அரசின் பெயரும் புகழும் எங்கும் பரவின. விளைவுகளும் நிரம்பின.

கொங்கு மண்டலத்திலே சத்திய மங்கலம் முதல், பாண்டிய நாட்டிலே தூத்துக்குடி வரையில், சட்டமும் திட்டமும், நீதியும் நெறியும் ஒரு சீராக அமைந்தன. நிலவரி வசூலும் அரசின் செலவும் ஓர் ஒழுங்கு கொண்டன.

திருமலை நாயக்கனே முடி மன்னவனுக விளங்கினுலும் திருவேங்கடநாத ஐயனே உண்மையில் அரசனுக இருந்து பரிபாலனத்தைப் பண்படுத்தி வந்தனன். அவ் விறைவன் அழகு மிக்க மாளிகைகள் சமைத்தனன் என்ருல், அவற்றின் அமைப்பினுக்கும் நேர்த்தியினுக்கும் அந்த ஐயனே காரணம்.

VOORHEES COLLEGE VELLORE HIGH SCHOOL

13. உயர் குடும்பம்

அத் திருவேங்கடநாத ஐயனுக்குப் புதல்வர் அறுவர். சபையிலே தன் மைந்தரைச் சிறக்கச் செய்தல் தந்தையின் கடனும். அது பற்றி அந்த ஐயன் தனது மைந்தர் அறுவரையும் நல் ஆசிரியரிடம் ஒப்படைத்துக் கல்வியிலும் கேள்வியிலும் மேம்படச் செய்தனன்.

இவர்களின் தந்தை என்ன தவஞ் செய்தான் என்று, உலகோர் போற்றும் வண்ணம் மைந்தர்

அறுவரும் அறிவாற்றல்களில் உயர்ந்து ஓங்கினர். தக்க தமிழாசிரியரை அடைந்து தமிழ்மொழியிலும் தேர்ச்சி மிக எய்தினர். தமிழ் மகார் தமிழை விரும்பிக் கற்றல் கடமை அல்லவா?

"தந்தை எவ்வழி அவ்வழி தநயர்" என்னும் வண்ணம், அந்த அறுவரும் அரசியல் நூல்களை ஆர்வமுடன் கற்று, அரசின் அங்கங்கள் அனைத்திலும் வல்லவர் ஆயினர். கௌடில்யரின் அர்த்த சாஸ்திரமும், சுக்கிர நீதியும் அவர்களுக்குக் கரதல பாடம் ஆயின.

அந்த அறுவரில் முதல்வன் சுவர்ண கிருஷ்ணன் எனப்படுவான். அமைச்சுத் தொழிலில் இவன் அதிசமர்த்தன். ஆதலின், மதுரை அரசிலே பிரதானியாக அமர்ந்து பெருமை எல்லாம் எய்த நின்றனன். இரண்டாவது மைந்தனை வேங்கடேசன் என்பர். வேங்கடேச மகிபாலன் என்றும் புலவர்கள் பரிந்து அழைப்பர்.

அவ் வேங்கடேசனே திருநெல்வேலியின் அரசப் பிரதிநிதியாக இருந்து, ஆண்மையும் திண்மையும் கொண்டு, ஆட்சி நடத்தி வந்தான். அவ் வேங்கடேசனது தம்பியரில் ஒருவன், இராஜ கோபாலய்யன் எனப்படுவான். இவனும் ஒரு சீமையின் அரசப் பிரதிநிதியாக விளங்கி, அரும் புகழ் தேடிக் கொண்டவன்.

அப் புதல்வரிலே ஏனைய மூவரில் இருவர் மந்திரிகளாகவும் தந்திரிகளாகவும் திகழ்ந்தோர் ஆவர். இவர்களும் தமது உத்தியோகத்திலே புகழ்க் கம்பம் நாட்டியவர்கள். இவர்கள் முறையே மணிவண்ணப் பெருமாள், கனக சபாபதி என்று பெயர் பெறுவர். ஆறுமவன் வேங்கடராமன் என்பவன். இவனும் ஒரு சீமைக்கு அதிபதியாவான்.

நிறைக்கொலுவாய்த் தான் இருந்து நீதி மனுவாகி
எங்கும்
திறைக் கொணர்ந்த வேந்தர் தினமும்—முறை
முறையே
தெண்டெனி இடும் வாசல் திருவேங்கட நாத
மண்டலிகன் பெற்ற வரபாலன்—பண்டை நாள்
ஆதி சுப்ரமண்யர் அமரர் சிறை மீட்க வந்தச்
சோதிமய வடிவாய்த் தோன்றியபின்—நீதி திகழ்
ஆறுமுகம் வெவ்வேறு அவதாரம் ஆகி, இன்னாள்
வீறுபுவி காக்கவந்த மேன்மை போல்—பேறுமிகத்
தன்னுடனே ஐவர் சகோதரரும் தானும் எழில்
மன்னவர் சிகாமணியாய் வந்தபிரான்—பின்னும்
மருக்குங்கு மமார்பன் மார்க்கண்ட வாழ்வாய்
இருக்கும் துரை வெங்கடேசன்—பெருக்கமுள்ள
தேசப்பிரா தன மென்னும் தென்மதுரை வீட்டுக்கு
வாசல் பிரதானி மகாராசன்—ராஜரிகக்
கிம்புரிமால்யானை சொர்ணக்கிர்ஷ்ண பூபாலனுக்குத்
தம்பி என வந்த தயாளுவாய்—அம்புவியில்
எண் எண் கலா ஞானம் எல்லாம் தெளிந்தமணி
வண்ணப்பெருமான் மகிபதியும்—தண்ணளியால்
தேசம் ஓர் ஆணைகொண்டு செங்கோன்மை செய்ய
வந்த
ராஜகோபால நராதிபனும்—நேசமிகு
துங்கன் அகளங்கன் துலங்குகன காவியப்ர
சங்கன் கனக சபாபதியும்—இங்கிதம் சேர்
திங்கள் திருமுகத்தில் செங்கமலை கூத்தாடும்
வெங்கடராம விதரணனும்—இங்கு இவர்கள்
பின் உதித்த நால்வர் பிராணபத தம்பியரா
முன் உதித்து வந்த மூகூர்த்தவான்—மன்னும் அர
விந்த மலரோன் ஈன்ற விப்ரகுல தீபம் என
வந்த வெங்கடேச மகிபாலன்—சந்ததமும்
தாய்த் துணைபோல் எங்கள் தமிழ்ப் பாண்டிநாடு
ஆள
வாய்த்த வெங்கடேச மகிபாலன்!

இவ்வாறு பணவிடு தூது என்னும் பிரபந்தம் அந்த உயர் குடும்பத்தைப் பற்றி வர்ணிக்கும். இராஜ சேவைக்கும் தேச சேவைக்குமே அக்குடும்பம் தோன்றியது போலும்! சரித்திரத்திலே அத்தகைய அருமைச் சோதரர் வாய்ந்த ஒரு குடும்பத்தைக் காண்பது அரிதாம்.

வேங்கடேசன் தனது பிள்ளைப் பிராயத்திலே வரன் முறையாக வடமொழி பயின்றமை ஒருபுறம் இருக்கட்டும். அரசியல் நூல்கள் அனைத்தையும் கற்றுத் தேர்ந்தமை ஒருபுறம் இருக்கட்டும். தமிழ் மொழியிலே தனித் தேர்ச்சிகொள்ள அவனுக்கு ஆவல் எழுந்தது.

ஆனதுபற்றி இலக்கண விளக்கம் என்னும் அரிய நூல் இயற்றிய திருவாரூர் வைத்தியநாத தேசிகர் என்பாரிடம் தமிழ் மாணவனாக அமர்ந்தான். இயல், இசை, நாடகம் என்னும் முத்தமிழையும் கற்றுணர்ந்தான். தொல்காப்பியத்தையும் தெளிவாக அறிந்து கொண்டான்.

இளவயதில் எல்லாவற்றையும் கசடறக் கற்க வேண்டும் என்னும் அவா விஞ்சியது. ஆதலின் தன் தந்தையான திருவேங்கடநாத ஐயனுடன் சென்று, மதுரை அத்தாணி மண்டபத்தில் அமர்ந்து, அரசியல் நுணுக்கங்களையும் உய்த்துணர்ந்து வந்தான்.

14. மதி அமைச்சன்

நமது உடம்பிலே கை கால் முதலிய உறுப்புக்கள் இருப்பினும், கண்ணே மிகவும் முக்கியமானது. அவ்வாறே அரசுக்கு அமைச்சர் என்போர் மிகவும் முக்கியம் ஆவர். அமைச்சனது இயல்புக்கு ஏற்ப அரசு விளங்கும்.

அத்தகைய அமைச்சுத் தொழிலில் நன்கு பயில அவ் வேங்கடேசன் முனைந்தார்; மதுரை அரசிலே மந்திரிமாராக இருந்தோரை அடுத்து, அவர்பால் கற்றுக்குட்டியாக அமர்ந்தார்; ஆட்சி முறை, அமைச்சு முறை இரண்டிலும் தெள்ளத் தேர்ந்தார்.

அத் தேர்ச்சி கண்டு மதுரை மந்திரிமாரும் மன்னவனும் அவரைப் பெரிதும் பாராட்டினர். கி. பி. 1659 முதல் 1682-ம் ஆண்டு வரையில் சொக்கநாத நாயக்கன் என்பான் மதுரை மன்னவனாக இருந்தனன். அவ் வேந்தனது கடைநாளிலே மதுரை அரசு மிகவும் சீர்குலைந்தது.

அச் சீர்க்குலைவைப் போக்கவல்ல மதி அமைச்சன் யாவன் என அச் சொக்கநாதன் சிந்தியா நின்றனன். வேங்கடேசனது மதி நுட்பத்தையும், நூல் அறிவையும் அன்பர் எடுத்துக் கூறினர். உடனே அம் மதிவல்லானை அரிய அமைச்சனாகக் கொண்டான் சொக்கநாதன்.

வேங்கடேசன் அப்பதவியில் அமர்ந்தபோது அன்னியரின் தொந்தரவினால் நாடு நலம் கெட்டுக் கிடந்தது. ஒரு விதத்திலும் அமைதி என்பது மருந்தினுக்கும் இல்லை. இராமேசுரத்துக்குப் போகும் வழியிலே துஷ்ட மிருகங்கள் திரிந்துநின்று, யாத்

திரிகருக்குத் தொல்லை இழைத்து வந்தன. அதனால் உயிர்ச்சேதம் பெருகிற்று.

அரசின் அவலநிலை கண்டு, ஆங்காங்கே பாதைகளில் கள்வர் நிரம்பி, வழிப்பறி செய்து வந்தனர். நாட்டு மக்களின் உடைமைக்கும் உயிருக்கும் ஆபத்தே தோன்றியது. உள்ள நிலையை ஒற்றர் மூலமும் நேரிலும் அமைச்சன் வேங்கடேசன் அறியவந்தார்.

முதன் முதலாக வேடுவரைத் திரட்டி, வன விலங்குகளின் மீது ஏவினர் அவர். சில சமயங்களில் தாமும் நேரில் சென்று, அவ் வேட்டையில் கலந்து கொண்டார். கொடிய விலங்குகளின் தொல்லை ஒருவாறு தீர்ந்தது அவ்வாறு.

கள்ளர் கூட்டத்தைக் கரு அறுக்க வேண்டும் அல்லவா? அதுபற்றிப் போர் வீரரையும் காவலாளரையும் பாதைகளிலே அவர் நிறுத்தி வைத்தார். கொள்ளையும் கொலையும் நடத்தும் கள்வருக்குக் கொடிய தண்டனைகள் விதித்தார். அவர்களது சொத்துக்களையும் பறிமுதல் செய்தார். அவர்களின் குடும்பத்தாரை வரவழைத்து அரிய புத்திமதிகள் கூறினர்.

அன்னியரின் படையெடுப்பினல் நேர்ந்த அதிகச் செலவை ஈடு செய்யவேண்டி, வீட்டு வரி விதித்திருந்தான் சொக்கநாத நாயக்கன்; நில வரியையும் மிகவும் உயர்த்தி இருந்தான். அவைகளை மக்கள் தாங்க முடியவில்லை. அத்துடன் தண்டல்காரர்களும் தோன்றி மிடுக்கு மிகக் காட்டி அவ்வரிகளை வசூல் செய்ய முயன்றனர்.

அது காரணமாக மக்களிலே பலரும் பெரிதும் துன்புற்றனர். அதனை அமைச்சன் வேங்க்டேசன்

அறியவந்ததுதான் தாமதம். வீட்டு வரி செலுத்த வேண்டாமென்று ஆணை பிறந்தது. நிலவரி உயர்வும் குறைக்கப் பெற்றது. நாலைந்து தவணைகளில் நில வரியைக் கட்டலாமெனவும் அவர் கட்டளையிட்டுச் சலுகை காட்டினர்

பொக்கிஷம் வறண்டு கிடந்தமையால், முதலாவதாக வீண் செலவை அவர் அடியோடு நிறுத்தினர்; அரண்மனைச் செலவிலும், ஆடம்பரச் செலவிலும் சிக்கனம் செய்தார்; பெருந் தனிகரை வரவழைத்து, இனிமையாகப் பேசி, நன்கொடையாக மிகுந்த பணம் சேர்த்தார். அவ்விதம் வரவையும் செலவையும் அவர் சமன் செய்ததுகண்டு, அதிகாரிகளும் பிறரும் ஆறுதல் அடைந்தனர்.

அச் சமயம் பாண்டி நாட்டினுக்கு வந்துபோன போர்த்துகல் தேச வர்த்தகரும், உரோமாபுரிப் பாதிரிமாரும் அம் மதி அமைச்சரது நிர்வாக நேர்மையை உய்த்து உணர்ந்தனர். சிறிது காலத்தினுக்குள் அரசின் செல்வ நிலை சீராயினமை கண்டு, அழகு அழகு என்று அவர்கள் புகழ்ந்து வரைந்து வைத்துளர்.

திருநெல்வேலிச் சீமையின் பாளையக்காரர் பலரும் பெருமிதம் படைத்தவர்கள். மதுரை அரசின் சீர்குலைவு கண்டு அச்சம் விடுத்து, அன்னர் தருக்கு மிகுந்து, செலுத்தவேண்டிய காணிக்கையை அனுப்பாமல் அட்டகாசம் செய்து வந்தனர்.

அத்தறுவாயில் அரங்க கிருஷ்ண முத்து வீரப்பன் என்பான் மதுரையிலே பட்டமேறினன். அப்போது அவனுக்கு வயது ஏறக்குறைய பதினறு இருக்கும். காளைப் பருவத்தினனான கொற்றவனைக் கண்டு அப்பாளையக்காரருக்கு அலட்சியம் மிகுந்

தது. தான்தோன்றிகளாக வாழவே அன்னார் தலைப்பட்டனர்.

ஆண்டிலே அவன் இளையவனாயினும், அறிவிலே மிகவும் முதிர்ந்தவன். ஆதலின் அருந்திறல் படைத்த அறிவாளி ஒருவனை அச்சீமையின் அதிபனாக்க அவன் கருதி நின்றனன். அமைச்சன் வேங்கடேசனே ஏற்ற புருஷனென அவனுக்குத் தோன்றியது.

பணவிடுதூது என்னும் பிரபந்தம் அந்த அமைச்சனைக் குறித்து உரைப்பது இது:—

—ராசரிக

முத்ரை பெற்ற ரங்க கிருஷ்ண முத்து வீரேந்திரன்
அருள்
வைத்த கொற்ற வாசலுக்கு ஓர் மந்திரியாய்—
மொத்தக்
கணக்கை வகை கண்டு கற்பித்த பொக்கிஷப்
பணக்குறை வாராமல் பணித்து—வணக்கம் இலாக்
கூடலூர் கம்பை முதற் கொண்டு மலையாள
நாடளவும் ஆணை நடத்துவித்துப்—போடுகின்ற
வீட்டுவரி எப்பொழுதும் வேண்டாம் என நிறுத்திக்
காட்டுவழி செல்வோரைக் காப்பாற்றி—
ஆட்டு புனல்
கங்கை நதி முதலாக் கன்னித்துறை வரைக்கும்
எங்கணும் இன்னான் என்று இலக்கு ஆக்கி!

அங்ஙனம் மதி அமைச்சனாக அவ் வேங்கடேசன் மகிமை பெற்றமை கண்டே, தனிவளம் படைத்துத் தருக்கு மிகுந்த தென் பாண்டி நாட்டினுக்கு அரசப் பிரதிநிதியாக நியமித்தான் அரங்க கிருஷ்ணன்.

15. மனநலம்

திருநெல்வேலிச் சீமையின் பிரதிநிதி என்று வேங்கடேசனை அரங்க கிருஷ்ணன் அன்புடன் அமர்த்தினன். அமர்த்தும்போதே, சர்வாதிகாரமும் அவருக்கு அளித்திருந்தான். அதற்கு ஏற்ப, ஒப்பற்ற தனி அரசராகவே அவர் நடந்து வந்தார்.

"குதிரை இருப்பு அறியும், கொண்டவள் குணம் அறிவாள்" என்று ஒரு பழமொழி உண்டு. தன் மீது ஏறி அமர்வோனது தன்மையை அமரும் பான்மை கண்டே அசுவம் உணர்ந்துகொள்ளும். தவிர, கடிவாளம் பிடிக்கும் நேர்மை கண்டும், பாய்மா பணிவு காட்டும்; பக்தி விசுவாசத்துடனும் பணிபுரியும்.

தென்பாண்டி நாட்டாரும் வேங்கடேசனது தோற்றமும் ஏற்றமும் கண்டு, ஆற்றவும் அடங்கி வாழ எண்ணம் கொண்டனர். இன் சொல்லும் ஈகையும் காக்கும் திறமும் உடையவனை நிலம் முழுதும் தானே வந்தடையும்; அல்லது நிலம் முழுதையும் அவன் அடைவான்;

> இன்சொலால் ஈத்து அளிக்க வல்லார்க்குத் தன்
> சொலால்
> தான் கண்டு அனைத்து இவ்வுலகு.

அத் திருக்குறளைப் பின்பற்றி அவர் இனிதாக ஆட்சி நடத்தி வந்தார். அன்பர், அயலார் என்று நோக்காமல் நடுத்திட்டமாகவே அவர் அனைவருக்கும் நீதி வழங்கி வந்தார். அவரது தளரா மன வலியும் குறையாப் புயவலியும் கண்டு பலரும் மகிழ்ந்து நின்றனர்.

நீராழம் கண்டாலும் நெஞ்சாழம் காண முடியாது என்பர் பெரியோர். அகத்தின் அழகு முகத்தில் தெரியும் என்பது உண்மையே. ஆயினும் முகத்தின் மூலம் அகத்தைக் கூர்ந்து உணர வல்லார் ஒரு சிலரேயாம்.

உள்ளத்திலே உள்ளதை ஒளித்து வெளிக்கு மிக நல்லவர் போல் நடிக்கும் சக்தி வாய்ந்தோர் சிலர் உண்டு. அவ் வெளித்தோற்றம் கண்டு பலரும் மோசம் போவர். அனைவரின் உள்ளத்தையும் அறிய வல்லவன் ஆண்டவன் ஒருவனேயாம் என்றாலும் அறிவு மிகப் படைத்தோர் பிறரது உள்ளத்தை எளிதில் உணரக்கூடும்.

எத்தகையராயினும் சரி, தன் முன்னே வந்து நிற்போரின் உள்ளக்கிடக்கையை உள்ளவாறே உணர வல்லவர் அவ் வேங்கடேச வேந்தர். கயத்தாறு என்னும் நகரிலே ஒரு நாள் அவர் கொலுவிருந்தார். பாளையக்காரரும் பெருமக்களும் அங்கே கூடி இருந்தனர்.

அப்போது ஆள் அழகன் ஒருவன் அங்கே தோன்றினான். அவனது சரீர அமைப்பைக் கண்டு அனைவரும் மயங்கினர். அம் மனிதனை நோக்கிய அளவில், அவர் புன்னகை பூத்தார். அரசரும் மகிழ்கிறார் என்றே எல்லாரும் எண்ணி இருந்தனர். மறுபடியும் அவரிடம் குறு நகை தோன்றியது.

வந்த மனிதன் அது கண்டு களித்து, "அடியேன் தக்ஷிண தேசத்து மல்லன்; தோள் வரிசை காட்டி எங்கும் பரிசு பெற்றுள்ளேன்; இச் சமூகமும் வந்து சேர்ந்தேன் வரிசை பெற," என்று வினயத்துடன் விளம்பினான். "அப்படியா?

நல்லது,'' என்று இயம்புவது போல் அவர் சிரக்கமபம் செய்தார்.

பின்பு, அவர் தமது அருகே நின்ற மெய்காப்பாளனை மறவகுல வீரனை நோக்கினர். அவ்வளவில் அவ்வீரன் தனது உடையையும், உடைவாளையும் கழற்றி வைத்தான்; ஒட்டுச் சல்லடத்துடன் அச் சபையிலே குதித்தான்; தோள் தட்டி ஆர்த்தான்.

அப்பால், "தக்ஷிண தேசமல்ல! வந்தனம் தந்தேன். இச் சபை முன்னே நாம் இருவரும் மல்யுத்தம் புரிவோம்; எல்லாரும் கண்டு களிக்கட்டும்,'' என்று அம் மறவன் மீண்டும் தோள் தட்டி, அச் சபைக்கு வணக்கம் புரிந்தான். சபையோரும் சிந்தை மகிழ்ந்தனர்.

மறவகுல வீரனது ஆர்ப்பைக் கண்டதும், தக்ஷிணதேச மல்லன் தயக்கமே கொண்டனன். மல் போரில் மனம் வைக்கவில்லை. நெஞ்சில் உள்ள கரவு அவனை வாட்டா நின்றது. சரீர அமைப்பினுக்கு ஏற்ற தைரியமும் துணிவும் காணேமே என்று அச் சபையிலுள்ளார் சிந்தியா நின்றனர்.

அவ்வேளை, "தக்ஷிண தேசமல்ல! மனப்பால் குடிக்க வேண்டாம், உங்கள் சுல்தான்! அச் சுல்தானது சேனையை வெல்ல வல்ல மறவரும் சேர்வைகாரரும் இங்கே இருக்கின்றனர். பரீட்சை பார்க்க மனம் இருந்தால், உங்கள் சுல்தானைக் கூட்டிவா; உளவு பார்க்க வந்தவன் அன்றோ! நீ?'' என்றார் வேங்கடேச வேந்தர்.

அம் மல்லனே, மனமும் உடம்பும் ஒருங்கே நடுங்கி, "மன்னவ! என்னை மன்னித்தல் வேண்டும்.

மதுரையிலே எனது மனக்கோளை உணரவல்லார் ஒருவரையும் கண்டேன் இல்லை. இச் சமூகத்தி லும் அப்படியே இருக்கும் என்று எண்ணி வந்தேன். இங்கே எனது சூழ்ச்சி வெட்ட வெளிச்ச மாயிற்று," என்று கை கூப்பிக் கூறினன்.

"ஒற்ருட வந்தோரைச் சிதைத்தல் தகாது," என்று நீதி நூல்கள் சாற்றும். அன்றியும், அந்த வேவுகாரனே, தக்காண தேசத்திலுள்ள பீஜப் பூர் சுல்தானது மரபில் வந்தவன் என்பதை அவர் அறிந்து கொண்டார். ஆதலின், அவனை மிகவும் பத்திரமாக இச் சீமைக்கு அப்பால் விட்டு வரும் வண்ணம், தனது மெய்காப்பாளனுக்கு அவர் ஆணை தந்தார்.

"என் பெற்ருேர் பண்ணிய புண்ணியம் நான் இப்போது பிழைத்தேன். உயிரளித்த உத்தம! உமக்கு வந்தனம்," என்று அவன் கூறி, நிலத்தில் விழுந்து வணங்கி விடைபெற்றுச் சென்றனன்.

"பார்ப்பான் ஒருவன் பார்த்திபனுக வந்துள் ளான். அவனது வாள் வரிசையும் தோள் வரிசை யும் பார்ப்போம்" என்று ஒற்றனை அனுப்பிய அச் சுல்தான் தனது மதிப் பிசகை உணர்ந்து, நல்லறிவு கொண்டனன்.

எண்ணிய எண்ணியாங்கு எய்துப, எண்ணியார்
திண்ணியர் ஆகப் பெறின்.

எண்ணிய பொருள்கள் யாவும் ஒருவன் எண் ணியபடியே எய்த வேண்டுமானல், அவன் மன உறுதி உடையவனுய் இருத்தல் வேண்டும். அந்த உறுதியுடன் கருமம் புரிதலும் வேண்டும். அவ்வித மாயின் கருதியன வெல்லாம் எளிதில் கைகூடும்.

மல்லன் வந்துபோன செய்தி, மதுரைக்கு எட்டியது. மன்னவன் அரங்க கிருஷ்ணன் அதனை அறிந்து, பல்லக்கும் பட்டாடையும் பரிசாக அனுப்பி, வேங்கடேசனைப் பாராட்டினன். மதுரை மாந்தரும் அகமகிழ்ந்து, திருநெல்வேலி அதிபனை வாழ்த்தினர்.

16. இரவில் பவனி

அன்பு நார் பூட்டி நாட்டு மக்களை அணைத்து ஆதரித்து அரசாளுவதே அதிகச் சிறப்புடைய தாம். ஆனாலும், அரசு என்றால் மக்களுக்கு ஒரு மதிப்பும் பிறருக்கு ஓர் உதைப்பும் உண்டாதல் வேண்டும். ஆனது பற்றியே குடை, கொடி, சாமரம் முதலிய ஆடம்பரச் சின்னங்கள் அவசியம் ஆகும்.

அல்லாமலும் சேனை, காவல் படை, நீதி மன்றம், சிறைக் கூடம் முதலியனவும் அரசுக்குத் தேவையாம். சேனை, நீதி மன்றம் முதலியன கண்டு பகைவரும், துஷ்டரும் அடங்கி ஒடுங்கி நிற்க நேரும். எனவே, ஆடம்பரமும் அச்சக்குறிகளும், அமைத்து வைத்தனர் நமது முன்னோர். அரசன் பவனி வருதலும் அந்த உபாயங்களுள் ஒன்றாம்.

திருமலை நாயக்கன் காலத்தில் வேற்றரசரின் படை எடுப்பு அடிக்கடி நிகழ்ந்து வந்தது. அவனுக்குப் பின்வந்த சொக்கநாத நாயக்கன் காலத்திலும் அப்படித்தான். அதனால் தேச மக்கள் அல்லல் உற்றுக் கிடந்தனர். அவர்களுக்கு அரசின் மீதிருந்த மதிப்பும் உதைப்பும் குன்றி வரலாயின.

அரங்க கிருஷ்ண முத்து வீரேந்திரன் அரசனாக வந்ததும், அரசின் மதிப்பையும் நலத்தையும்

பெருக்க முனைந்தனன். அதனை வேங்கடேசன் மனத்துட் கொண்டு, ஆடம்பரமும் படாடோபமும் புலப்படும் வண்ணம் திருநெல்வேலி நகரிலே தினம் இரவில் பவனி வருதல் வழக்கமாயிற்று.

அதற்காக நாள்தோறும் ஒரு நூறு வராகன் செலவு பிடிக்கும். மதுரை வேந்தனது பிரதிநிதி வேங்கடேச மகிபாலன் பவனி வருகிறார் என்று கூறிக்கொண்டு, கட்டியக்காரர் முன்னே செல்வர். யானையின் மீது பேரிகைகள் முழங்கும்; டமாரங் களும் சப்திக்கும்.

பதினெட்டு வகையான வாத்தியங்களும் ஒலியா நிற்கும். நடன நூலில் கைவந்த நட்டுவர் தாளம் சிறிதும் தவறாமல், இசை பாடிச் செல்வர். தங்கம் வைத்து இழைத்த ஆடைகளுடன் குதிரைகள் நாட்டியம் ஆடிக்கொண்டு நடக்கும். நடன மாதரும் உடன் செல்லுவர்.

பகலேபோல் வெளிச்சம் தரும் தீவட்டிகள் கணக்கின்றி முன்னும் பின்னும் ஒளி வீசி வரும். பலவகையான மத்தாப்புக்களும் பிரகாசம் வீசும். இரு பக்கமும் சிலர் சாமரைகள் வீசிவர, வேறு சிலர் காளாஞ்சி யேந்த, வில், வாள் இவை தாங்கிய வீரர் பக்கத்திலே பாங்காக நடந்து செல்ல, கனக தண்டிகை மீது வேங்கடேசன் பவனி வருவார்.

அவர் பவனி வரும் படாடோபத்தைப் பார்த் தால், அளகாபுரியின் வேந்தன் பவனி வருவதே போல் இருக்கும். அரங்க விலாஸம் என்னும் மாளிகையிலிருந்து பவனி துவங்கி, வீதி நெடுகச் சென்று மீண்டும் மாளிகை சேரும் காட்சியை எண்ணிறந்த மக்கள் வரிசை வரிசையாக நின்று பார்த்து, இன்பம் எய்துவர்.

கட்டியங்கள் ஆர்ப்பக் கரட மதயானையின்மேல்
—நாலு திக்கும்
கொட்டிய டமாரங்கள் கோஷிப்ப—எட்டிப்
பேரி முழங்கப் பெரிய பதினெட்டு வகை
மூரி நெடு வாத்தியங்கள் முன் அதிர—நேரே
நட நாடகசாலை நட்டுவன்மார் தாளத்
துடனே சங்கீதம் ஒலிக்கப்—புடையே
அருவி வல்லையத்தில் அழுந்து பசுந்தங்கம்
இருபுறமும் முன்னிட்டு எரிப்பத்—தெருநிறையக்
கொஞ்சிவரும் மச்சிக் குதிரைகள் நர்த்தம்புரியக்
சஞ்சுப வர்க்கம் தன தன என—மிஞ்சும்
இருள் அறு தீவட்டிகள் எண்ணில முன் செல்ல
மருவு பல தீ வேட்டு வர்க்கம்—பொருவில்
பகல் வர்த்தி இத்தனையும் பக்கம் நெருங்கி
இகல் இட்டு இரவு பகல் ஏய்ப்பத்—தரும் உபய
சாமரைகள் வீசத்தமனியப் பொன் பாவாடை
காமரு பொன் காளாஞ்சி கைக்கொண்டு—கோமள
மாச்
செல்வார் வரிசை கொடு செம்பொன் பணிஇலங்க
வில்வாள்பரிசையோடு வேண்டுவன—பல்வகையாம்
ஆயுதக்காரர் அளவிலர் முன்னே நடக்கத்
தூயபல தண்டிகைகள் சூழ்ந்துவர—நாயகமாய்த்
தங்கமும் முத்தும் தனிப்பவளராசியுமே
எங்கும் ஒளிவிட்டு எறிப்பதாய்—ரங்கக் கிருஷ்ணன்
முத்து வீரேந்திரன் முழுவரிசை தந்து அனுப்பும்
தொத்து மணித் தண்டிகை மேல் கொண்டேறிச்—
சித்தம்
விரும்பி அளகேசன்போல் வீதிவலம் வந்துத்
திரும்பி அரமனைக்குள் சென்று—பெரும்பார்க்கு
இறையவன் எம் கோமான் இரங்க விலாஸத்தே
நிறை கொலுவாய் வீற்றிருக்கும் நேரப்—நறை
மலர்ப்பூங்கா
கொத்து அலர்தார்மார்பன் கொலு இருக்கும்
சிங்காரம்
அத்தனையும் கண்டேன் அகம் குளிர்ந்தேன்.

என்று இவ்விதம் பணவிடுதூது என்னும் பிரபந்தம் அவ்வேங்கடேசனது பவனியை வர்ணிக்கும். அரசினிடம் பயபக்தி விசுவாசம் ஊட்டுவதற்கு அவர் பவனி வருவதைப் பொருத சிலர் அம்மதுரை வேந்தன் அரங்க கிருஷ்ணனிடம் சென்று, பெரும் புகார் கூறி நின்றனர்.

அரங்க கிருஷ்ணன் அதுகேட்டு உண்மையை உணர வேண்டி, ஒருவரும் அறியாவண்ணம் மாறு வேடத்திலே ஒரு நாள் இரவு திருநெல்வேலி சேர்ந்தான். வீதியிலே மக்களுடன் கலந்து நின்று அக்காட்சியினைக் கண்டு களித்தான். ஆடம்பரத்திலும் நன்மையுண்டு என்று தேர்ந்தான்.

பவனிதீர்ந்து அரங்க விலாசம் என்னும் மாளிகையில் அவ்வேங்கடேசன் கொலு இருந்த சமயம், அரங்க கிருஷ்னன் அரச கோலத்துடன் அக்கொலுவிலே தோன்றினன். மன்னவனது வருகையைக் கண்டதும், வேங்கடேசன் விரைந்தெழுந்து, எதிர்கொண்டு அரியாசனத்தில் அமர்த்தி அருகே வீற்றிருக்கலானர்.

பின்பு நடனமாதர் தோன்றி நாட்டியத்தின் நுட்பங்கள் புலப்பட ஆடிக்காட்டினர். சங்கீத வித்துவான்கள் இசையும் தாளமும் தவருமல் அந்த அருங்கலையின் அற்புதத்தை உணர்த்தி, அரசனுக்குப் பரவசம் ஊட்டினர். அனைத்தையும் கண்டு களிப்பெய்திய மதுரைக் கொற்றவன் அப்பிரதிநிதியைப் பாராட்டி விடைகொண்டான். அவரும் தக்க மரியாதை காட்டி மன்னவனை வழியனுப்பினர்.

17. அணி வகுப்பு

திருநெல்வேலி எல்லையில் முப்பத்திரண்டு பாளையக்காரர் உண்டு. அவர்கள் அனைவரும் மதுரை அரசுக்கு உட்பட்டவர்கள். அந்த அரசு வேண்டும் பொழுது, தத்தம் படை வகுப்புக்களுடன் அவர்கள் சென்று, போர்ச் சேவகம் புரிதல் வேண்டும்.

அந்த அரசின் பிரதிநிதியான வேங்கடேச மகிபாலனுக்கும் அப்பாளையக்காரர் கட்டுப்பட்டவர்களே. அரசுக்குச் செலுத்தவேண்டிய கப்பத் தொகையை அப் பிரதிநிதியிடமே அவர்கள் சேர்ப்பிக்க வேண்டும். கணக்கு வழக்கும் கூறவேண்டும்.

அச்சீமையிலே பாளையக்காரருக்கு உரிமையான கிராமங்களையும் நிலங்களையும் தவிர வேறு கிராமங்களும், நிலங்களும் உண்டு. இவை அந்த அரசுக்கு உரியன. சொக்கநாத நாயக்கன் காலத்திலே அரசு அவதியுற்றது கண்டு அப்பாளையக்காரரில் பலர் பதட்டம் மிகுந்து படபடப்புக் கொண்டனர்.

கொள்ளவே, அரசுக் குரிய நிலங்கள் பலவற்றையும் அவர்கள் கட்டிக் கொண்டார்கள்; மக்களிடமிருந்து வரம்புமீறி வரி வாங்கினார்கள். நீதியும் நெறியும் இல்லாமல் தனிக்காட்டு இராஜாக்களாகவே திகழத் தலைப்பட்டார்கள்.

அதனால் சீமையிலே அமைதி குன்றியது. மக்களின் உடலுக்கும் உடைமைக்கும் ஆபத்து நேர்ந்தது. பயந்தும் பதுங்கியுமே அம்மக்கள் வாழ்ந்து வரலாயினர். பாளையக்காரருக்குச் சொந்தமான கிராமங்களிலோ மக்களின் நிலைமை இன்னும் மோசமாகவே இருந்தது. சாந்தி என்பதே மருந்தினுக்கும் இல்லை.

கட்டுக்கு அடங்காமல் திரியும் பாளையக்காரரை மடக்கினல் அல்லாமல், மக்களுக்கு நிம்மதி இராது. அவர்களை மடக்குவதில் முதலிலே சாமோபாயத்தை மேற்கொள்ள அப்பிரதிநிதி கருதினர்; தர்பார் நடத்தப்போவதாக அறிவித்து, அவர்கள் அனைவரும் தமது படை வகுப்புடன் வரும் வண்ணம் ஓலை போக்கினர்; அணிவகுப்பு நடத்தவும் ஆயத்தம் செய்தார்.

குறித்த நாளிலே பாளையக்காரர் அனைவரும் வந்து சேர்ந்தனர் போர்க்கோலத்துடன். நெல்லையப்பரின் ஆலயத்தை அடுத்த மைதானத்திலே அவர்கள் அனைவரும் தனித்தனி தமது படைவீரருடன் பாங்காக நின்றிருந்தனர்.

வேங்கடேச மகிபாலன் வருவதற்குச் சிறிது கால தாமதம் ஏற்பட்டது. விதியின்றி வந்து சேர்ந்த பாளையக்காரரிலே பலர் அது கண்டு முணுமுணுத்தனர். அவ்வேளை குடை கொடி சாமரம் முதலியன குலவ, முரசங்கள் மேகமேபோல் சப்திக்க, முன்னும் பின்னும் போர் வீரர் அணி வகுத்துச் செல்ல, தளவாய்க்கு உரிய உடையுடன் அப்பிரதிநிதி தோன்றினர். பாளையங்களின் நடுவே பட்டத்துக் குதிரையின் மீது அவர் நின்ற கோலம் பார்த்தனர் அனைவரும்.

அந்தணர் குலத்தில் வந்து பிறந்தும், பண்பட்ட தளவாயே போல் அவர் தோன்றிய காட்சியைக் கண்டதும், முணு முணுப்புக் கொண்ட பாளையக்காரருக்கு அச்சமும் திகிலும் ஒருங்கே மூண்டன. அவரது ஏற்றமும் மாற்றமும் பிரமிப்பே ஊட்டின.

ஒவ்வொரு பாளையக்காரனும் அவர் முன்னே வந்து, வீர வணக்கம் புரிய, அன்னரது படை வீரர்

பின் தொடர்ந்து வந்து, பெருமிதமாக நடைபோட்டுச் சென்று, உரிய வீந்தனை செலுத்தினர். அவ்விதம் பாளையங்களின் அணிவகுப்பை அவர் பார்வையிட்டார். பின்பு, அவர் தமது கொலுக் கூடம் சேர்ந்தார்.

பாளையக்காரரும் தமது வீரர்களை வெளியே நிறுத்தி விட்டு, அக் கொலுக் கூடத்திலே உரிய ஆசனங்களில் அமர்ந்தனர். அமர்ந்ததும் இராயசக் காரன் ஒவ்வொரு பாளையத்தின் பெயரைச் சொல்லி அழைத்தனன்; பாளையங்களின் நிலுவை யையும் நவின்றனன். நவின்றதுதான் தாமதம்.

ஒவ்வொரு பாளையக்காரனும் அப் பிரதிநிதி யின் முன்னே சென்று நின்று தனது பாளையத் தின் கணக்கு வழக்கை உரைத்து நிலுவைக்கு உரிய முகாந்திரமும் சொல்ல நேர்ந்தது. அப்போது பாளையங்களின் நிலையும் நெறியும் எல்லாருக்கும் தெரிய வந்தன.

"மன்னுயிர்களின் நலபலங் கருதியே பாளை யங்கள் அமைந்தன. ஆதலின் பாளையக்காரர் தமது பொறுப்பை உணர்ந்து, நெஞ்சமே சாட்சியாகக் கொண்டு, நேர்மையாக நடப்பின் மக்களின் மனக் கோயிலிலே குடியிருக்கலாம். தவறி நடந்தால் தாழ்வும் அழிவும் மக்களாலேயே நேர்தல் திண் ணம்," என்று அப் பிரதிநிதி போதம் புகட்டினர்.

அப்பால் அவர்கள் அனைவருக்கும் மிக ஆடம் பரமான விருந்து நடைபெற்றது. அப்போது மலர்ந்த முகமும் கனிந்த உரையும் கூறி அவர்கள் அனைவரையும் வேங்கடேசன் உபசரித்தார். உப சரிப்பின் பான்மை கண்டு பலரும் களிப்புற்றனர்.

அன்று மாலையிலே நெல்லையப்பருக்கும், காந்திமதி அம்மைக்கும் அரிய பூசனை நடை பெற்றது. அம்மையப்பரின் படைப்பான உயிர் களனைத்தையும் இனிது காத்தலே நமது கடமை என்று அச்சீமைக்கு அதிபன் செப்ப, அவ்வாறே கடமையை ஆற்றிக் கடவுளின் கருணைக்குப் பாத் திரம் ஆவதாக அப்பாளையக்காரர் அனைவரும் தமது மனதார மொழிந்தனர்.

ஆண்டவனது சந்நிதியில் உரை பகர்ந்ததை வேங்கடேசன் வற்புறுத்தவே, அனைவரும் அதன் உட் கருத்தை உணர்ந்து உள்ளம் சிலிர்த்தனர். சுருங்கச் சொன்னால், அது முதல் பாளையக்காரர் நெறியும் நேர்மையும் கொண்டு நடந்துவரத் தலைப் பட்டனர். மக்களுக்கும் நிம்மதி பிறந்தது.

இனி, பணம் பத்தும் செய்யும் என்பது ஒரு பழமொழி. செல்வச் சீமான்களில் சிலர் செருக்கு மிகுந்து ஏழை எளியவருக்கு இன்னல் விளைத்து வந்தனர். நெல்லையதிபர் அதனை உணர்ந்ததும் அச் செல்வர்களை வரவழைத்து விருந்து நடத்தினர்.

அவ்விருந்தின் இடையே, "பிறக்கும்பொழுது நாம் என்ன கொண்டு வந்தோம்? இறக்கும் பொழுது எதனை எடுத்துச் செல்ல இயலும்? இடை யிலே நமக்குக் கிடைத்த செல்வம் சிவன் தந்த தாகும். அது கொண்டு அறங்கள் பல செய்து நல்லவன் என்று பெயர் எடுப்பதே மேலாம். நாம் கண் மூடும் காலையில் பாவ புண்ணியங்களே நம் மைத் தொடர்ந்து வரும்," என்று அவர் போதம் புகட்டினர்.

பாவங் கண்டு அஞ்சும் காலம் அது. பரமன் என்று கேட்டுப் பயப்படும் காலமுமாம். ஆதலின்

பாவ மூட்டையுடன் மறு பிறப்பு எடுக்க மனமில்லை என்று பலரும் கூறினர். மதர்த்துத் திரிந்த பாளை யக்காரர் அடங்கி வாழத் தலைப்பட்டதையும், பெட் டிப் பாம்பு போல் அன்னர் ஒடுங்கிக் கிடப்பதையும், ஒரு பெருமகன் எடுத்துக் காட்டினன். பலரும் அதன்மேல் நல்லறிவு கொண்டு நடந்து வர லாயினர்.

நகை, ஈகை, இன்சொல், இகழாமை நான்கும்
வகை யென்ப வாய்மைக் குடிக்கு.

உயர் குடியில் வந்த வேங்கடேசன் நகை முக மும், இன் சொல்லும், ஈகைத் திறனும் மேற் கொண்டு, பலரையும் அவ்வாறு பண்படுத்தி, அரசு ஆண்டமை குறித்து, அரங்கக்கிருஷ்ணன் ஆனந்தம் மிகுந்தான். நாட்டு மக்களும் நல்லெண்ணம் நிரம்பி, அப் பிரதிநிதியைப் போற்றி இன்புற்றனர்.

18. ஞான தீபம்

திருநெல்வேலி வேந்தனும் அவ் வேங்கடேசன் அரசுக்குரிய அருங்கலைகள் பலவும் பழுதறக் கற்றவர் என்பதோடு பண்பெல்லாம் நிறைந்தவரு மல்லவா? வட மொழி, தென்மொழி இரண்டிலும் மஹா பண்டிதர் என்பதற்குச் சான்று வேண்டுமே.

அரசின் அலுவல்களை எல்லாம் கூர்ந்து கவ னித்த பின்னர், ஓய்வு கிட்டும் நேரங்களிலே அவ் விரு மொழியிலும் உள்ள பார காவியங்களை எல் லாம் படித்து அவர் ஆனந்திப்பார்; அம் மொழி வல்லாருடன் அளவளாவி, நுண்ணிய பொருள் களை உணர்வதில் ஒப்பரிய உற்சாகம் காட்டுவார்.

அவரது ஞான குருவாக வாய்த்தவர் இராகவானந்தர் எனப்படுவார். தினம் தினம் இருவரும் ஞான மார்க்கத்தைக் குறித்து ஆராய்ந்து மோன வரம்பு எய்த முயலுவர். தாரமும் குருவும் அவரவரின் விதிக்கு ஏற்ப அமைதலே இயற்கை.

சற்குரு வாய்த்ததாக வேங்கடேசனும், உண்மைச் சீடன் கிட்டியதாக இராகவானந்தரும் அகமிக மகிழ்ந்திருந்த சமயம், இருவரின் பெயரும் புகழும் விளங்க விழுமிய நூலொன்று கிளம்புதல் வேண்டும் என அக்குருநாதருக்கு மிக்க ஆவல் பிறந்தது.

அவர் தமது சீடனை நோக்கி, "அன்ப! இச் சீமை மக்களுக்கு எல்லா இன்பமும் செல்வப் பொருளும் பெருகும் வண்ணம் வழி தேடி வைத்துள்ளாய். அவர்களுக்கு ஞானப் பொருளும் இலகுவில் கிடைக்குமாறு நீ வகை செய்தல் வேண்டும். தேனினும் இனிய தமிழ் மொழியும் சிறத்தல் வேண்டும்," என்று கூறினர்.

பதின்மூன்ரும் நூற்ருண்டிலே அந்தணர் குல திலகரான கிருஷ்ண மிசிரர் என்பார் பண்டித சிரோன்மணியாக விளக்கமுற்று இருந்தார். வேதாந்த சித்தாந்தத்தை மாந்தர் கடைப்பிடித்து நடப்பதற்கு, மனம், அகங்காரம், காமம், கோபம், மதம், மானம் முதலியன பெருந்தடையாக நிற்கும்.

ஆதலின், விவேகம், பொறுமை, சந்தோஷம், சமம், தமம், சுசீலம், தவம் இவற்றை வளர்த்துக் கொண்டால், அவ் வேதாந்த சித்தாந்தத்தை எவரும் எளிதில் உணரலாம். அது பற்றி, நாடக வடிவிலே பிரபோத சந்திரோதயம் என்னும் ஓர் அரிய நூலை அம்மிசிரர் வடமொழியில் இயற்றிச் சென்ருர்.

அந்த ஆரிய மொழியை உணராத தமிழ்ப் பண்டிதரும் பிறரும் எளிதில் உணர்ந்து கொள்ளுமாறு மெய்ஞ்ஞான விளக்கம் என்று பெயரிட்டு, இனிய தமிழ் மொழியிலே செய்யுள் வடிவில் பாடலானார் வேங்கடேச மகிபாலர்.

பிரபோத சந்திரோதயத்தின் வழி நூலான மெய்ஞ்ஞான விளக்கம் என்பதின் சொல் நோக்கும், பொருள் நோக்கும், தொடை நோக்கும் நன்ருகப் பொருந்தி இருந்தமை கண்டு புலவர் பலரும் அதனைப் பாராட்டிப் பேசினர்; பாமாலையும் சூட்டி மகிழ்ந்தனர்.

அந் நூலை வாசிப்பதால் மாயை, மனம், மோகம், அகங்காரம் முதலியவற்றின் இயல்பு புலனாகும். காமம், குரோதம் முதலியன உதிக்கும் போது தோன்றும் மெய்ப் பாடுகளின் தன்மையும் புலப்படும். இன்னின்ன குணங்களுக்கு இன்னின்ன குணங்கள் மாறுபட்டவை என்னும் விவரமும் வெளியாகும்.

துக்க நிவர்த்தியும், ஆனந்தப் பிராப்தியுமான மோட்சத்தை மக்கள் அடைவதற்கு, வேதாந்தம், சித்தாந்தம் முக்கிய சாதனமாகும் என்பதை அந் நூல் தெளிவு படுத்தும். வைதிக மதத்தின் விழுப்பத்தையும் புலப்படுத்தும். அந்நூலின் அருமை பெருமை கண்டு அக் குருநாதர் ஆச்சர்யம் எய்தினர்.

பிரான்ஸ் தேசத்தின் பெரு வீரனை நெப்போலியன் என்பான் சண்டை சமயத்திலே சிந்தனையில் ஆழ்ந்து, விள்ளாத விஷயங்களை விண்டு கொள்வான் என்று அந்நாட்டுச் சரித்திரம் சொல்லும். மிகவும் நெருக்கடியான சமயத்திலே சீமை

யின் அதிபனாக அமர்ந்து, சிக்கலான அரசியலைச் சீர் செய்து வரும் வேளையிலே அவகாசம் கிடைத்த போதெல்லாம் அவ்வரிய செய்யுள் நூலைப் பாடிய வேங்கடேசனைப் போற்றல் வேண்டும் அன்றோ?

அன்றியும் வேதாந்த சித்தாந்த விஷயங்களை யாவரும் உணரும் வண்ணம் இனிய செய்யுள் நடையில் இயற்றுதல் மிக்க புலமை உடையாருக்கே இயலும் என்று கருதி ஆரியம் செந்தமிழ் ஆகிய இரு மொழிகளின் பண்டிதரும் அவ் வேங்கடேசனைப் போற்றினர்.

வைத்தியநாத தேசிகரே அவ்வேங்கடேசனது தமிழாசிரியர். தமது சீடன்மீது பெரும் பரிவு கொண்டு தாமே அந் நூலைப் பாடிச் சீடனே பாடியதாகச் சிறப்புப் பாயிரம் தந்துதவினர் என்பாரும் உண்டு. இனி தேசிகரும் வேங்கடேசனுமாகச் சேர்ந்து பாடினர் என்று கூறுவாரும் உளர்.

வேங்கடேச மகிபாலனது தந்தையான திரு வேங்கட நாதையனே அந் நூலை இயற்றியவராம் என்பது ஒரு சாராரின் கொள்கை. இருவரும் தந்தை தநயர் என்பது வாசகருக்குத் தெரியும். இந்த இருவரும் சேர்ந்தே அந்நூலை ஆக்கிய தாகவும் ஒரு செய்தி உண்டு. இருவரின் பெயரும் அநேகமாக ஒத்திருத்தலால், இருவரும் ஒருவரே என்றும், அன்று இருவரும் வெவ்வேறு நபர்கள் என்றும் புலவர் மயங்குவதற்கு இடமுண்டாயிற்று.

இனி, வேங்கடேசன் தமது தந்தையின் பால் பக்தி விசுவாசம் மிகுந்தவர்; தந்தையின் பெயர் இன்னும் பிரபலம் ஆதல் வேண்டும் என்றும் பேரவாவும் படைத்தவர். ஆதலின், தாம் இயற்றிய நூலுக்குத் தமது தந்தையின் பெயரைச் சூட்டினர்

என்று கன்ன பரம்பரை கூறும். திருவேங்கட நாதையனே இயற்றித் தமது புதல்வனது பெயரைச் சூட்டினர் என்றும் சிலர் சாற்றுவர்.

மெய்ஞ்ஞான விளக்கம் என்னும் நூல் இலக்கண இலக்கிய உணர்வு உடையாருக்கே பயன்படுமாதலின், எல்லாரும் அதனை அறிந்து கொள்ள வேண்டி, இராம யோகி என்பார் பின்னளில் அதனை உரை நடையில் ஆக்கி வைத்துள்ளார்.

மெய்ஞ்ஞான விளக்கம் என்பது ஞான தீபமே யாகும் என்பதே பலரது துணிபாம்.

19. இலக்கண விளக்கம்

பிரபோத சந்திரோதயம் என்னும் அரிய நூல் தாம் செய்ததோடு தமது தமிழாசிரியரைக் கொண்டு இலக்கண விளக்கம் என்னும் சீரிய நூலொன்றும் அவ் வேங்கடேசன் செய்வித்தார். தமிழ் மொழியில் ஆதியிலே அகத்தியம் என்னும் இலக்கண நூல் இப் பார்மிசை மிகவும் சிறப்புற்றிருந்தது.

அந் நூல் இறந்து படவே, அதன் வழி வந்த தொல்காப்பியம் என்னும் இலக்கணமே சென்ற ஐயாயிரம் ஆண்டுகளாக வழக்கில் இருந்து வருகின்றது. அத் தொல்காப்பியமோ மிக மிகப் பெரியது. கற்று வல்லோரே அல்லாமல் மற்றையோர் அதனை அறிதல் அரிதாம்.

ஆதலின் பலரும் இலகுவில் பயிலுவதற்கு உபயோகமாக "நன்னூல்" என்பது பின்னளில் எழுந்தது. அந் நன்னூலில் எழுத்தும் சொல்லுமே விரிவாகக் கூறப்பட்டுள. பொருள், யாப்பு, அணி

என்பன நன்கு உரைக்கப்படவில்லை. அக் குறை நீங்க வேண்டும் அல்லவா ?

எழுத்து, சொல், பொருள் என்னும் மூன்றையும் வகுத்தும் தொகுத்தும் இனிதாக உரைக்குமாறு தமது தமிழாசிரியரான வைத்தியநாத தேசிகர் என்பாரை அவர் வேண்டிக் கொண்டார். அத் தேசிகர் திருவாரூரைச் சேர்ந்தவர்.

ஆசிரியரின் வம்சம் முன்னும் பின்னும் பல தலைமுறையாகப் பேர் பெற்ற வித்துவான்களால் சிறப்புற்ற வம்சமேயாம். தேசிகரின் தந்தை தமது பாவன்மையால் பரிசு பெற்ற மானியத்தை அவர் சந்ததியார் இன்றும் அநுபவித்து வருகின்றனர்.

கவி வீரராகவ முதலியார், படிக்காசுப் புலவர் முதலியோர் அத்தேசிகர் மீது பாமாலை பாடியுள்ளனர். தேசிகரின் வழிவந்தோரும், தமிழ்ப் புலமையில் சாலச் சிறந்தவர்கள். நன்னூலை விஞ்சும் நூலொன்று இயற்ற நம் தேசிகருக்கு ஆசை பிறந்தது. வேங்கடேசனும் தூண்டி நின்றார்.

உடனே, மூலமும் உரையுமாக இலக்கண விளக்கம் என்னும் நூலை இயற்றினர் வைத்தியநாத தேசிகர். அதன் அருமை பெருமைகளை மதித்தே குட்டித் தொல்காப்பியம் என்று பலரும் அதனை அழைத்து வருகின்றனர். அந்த ஆசிரியர் ஏறக்குறைய முன்னூறு ஆண்டுகளுக்கு முன்னம் இருந்தவர்.

அந் நூலின் சிறப்புப் பாயிரத்தில் பின் வரும் அடிகள் காணப்படுகின்றன :

கடல் விளிம்பு உடுத்த கண் அகன் ஞாலத்து
அடரும் வல் இருள் துறந்து அனைத்தையும் விளக்கும்

பல்கதிர்ப் பரிதியின் பரம்பரன் அருளால்
உள் அகத்து இருள் கடந்து உறு பொருள்
எவற்றையும்
பால்படத் தொகுத்த பதினெண் மொழியிலும்
மேல் கடல் கீழ் கடல் வேங்கடம் குமரி
ஆகிய எல்லையுள் அருந்தமிழ் பவ்வத்து
எழுத்து முதல் மூன்றையும் யாவரும் தெரியத்
தொகை வகை விரியின் பகருக என்று
வேதியர் திலகன் விரவலர் கோளரி
மாதையர் அதிபன் வரகுணமேரு
கல்விக்கு எல்லை, கருணைக்கு ஆகரம்
பெருமாள் மெய்த்தவப் பேறெனத் தோன்றிய
திருமால் உலகம் செவ்விதின் புரக்கும்
மேதகு புகழ் திருவேங்கடநாதன்
ஓதினன் ஆக.

அந்த அடிகளின் கருத்து இது :—“ கடல் சூழ்ந்த விரிந்த உலகத்திலே அடர்ந்த இருளை ஓட்டி எல்லாப் பொருளையும் விளக்கும் பல கிரணங்கள் கொண்ட சூரியன் போல எல்லாம் வல்ல இறைவனது அருளினால் மாந்தரின் மனத்துள்ள மாசை அகற்றி உறுதி பயக்கும் அறம் முதலிய பொருளை எல்லாம் விளக்கும் பதினெட்டு விதமான மொழிகளிலே,

“மேல் கடலும் கீழ் கடலும் வட வேங்கடமும் தென் குமரியுமாகிய இந்த நான்கு எல்லைக்குள் வழங்கும் அரிய தமிழாம் கடலிடத்து எழுத்தும் சொல்லும் பொருளுமாகிய மூன்றினையும் எல்லாரும் அறியும் வண்ணம் தொகையானும் வகையானும், விரியானும் கூறுவாராக என்று.

“அந்தணருள் திலகம் போல் சிறந்தவனும், எதிரிகளுக்கு ஓர் ஆண் சிங்கம் போன்றவனும்,

மாதை என்னும் மாநகரத்தாரின் தலைவனும், நற்குணங்களெல்லாம் திரண்ட மேருமலை போன்றவனும், கல்விக் கடலைக் கரை கண்டவனும், கருணைக்குப் பிறப்பிடம் ஆனவனும், பெருமாள் என்னும் வேதியனது தவத்தினால் வந்தவனும் உலகத்தை எல்லாம் திருமால் காப்பதுபோல் நன்கு காப்பவனும் ஆகிய திருவேங்கட நாதன் என்னும் பெயரையுடையவனை அருளிச்செய்யவே.''

அந்த இலக்கண விளக்கம் முற்றுப்பெற்றவுடனே நெல்லை நகரில் பெருஞ் சபை ஒன்று வேங்கடேசன் கூட்டுவித்தார். தமிழகத்தின் பற்பல பாகங்களிலும் உள்ள புலவர் பலரும் அச் சபையில் வீற்றிருந்தனர். புவிக்கும் கவிக்கும் அரசனாகிய வேங்கடேசனே தலைமை பூண்டார். தேசிகர் சூத்திரம் சூத்திரமாக உரைத்து வந்தார்.

அனைவரும் அதனை விரும்பிக் கேட்டனர்; சிந்தைக்கும் செவிக்கும் அமுதெனக் கொண்டனர்; அழகு அழகு என்று மகிழ்ந்து கூறினர். அவ்விதம் அந்நூல் அரங்கு ஏறியது. அச் சபையில் வீற்றிருந்த வீரராகவ முதலியார் என்பார் சூட்டிய பாமாலை பின்வருமாறு :—

> ஐம்பதின்மர் சங்கத்தார் ஆகிவிடாரோ ? நாற்பத்து
> ஒன்பதின்மர் என்றே உரைப்பாரோ ?-இம்பர் புகழ்
> வன்மீகநாதன் அருள் வைத்தியநாதன் புடவி
> தன்மீது அன்னாள் சரித்தக்கால்.

மதுரையிலிருந்த கடைச் சங்கத்தில் நாற்பத்து ஒன்பது பேர் நல்லிசைப் புலவர்கள் இருந்தனர் என்று தமிழ் நூல்கள் கூறும். இந்த உலகம் புகழும் வன்மீகநாதனது மைந்தன் வைத்திய நாதன் அன்று இருந்திருந்தால், கடைச் சங்கப்

புலவர்கள் ஐம்பது பேராகி விடுவர். இதுவே அப் பாவின் கருத்தாம்.

அந்நூல் தோன்றியதும் நன்னூல் முதலியவற் றின் பயிற்சி குன்றியது. இதுவே தலை எடுத்து வந்தது. சென்னை, காஞ்சி, புதுவை, தஞ்சை, மதுரை, திருநெல்வேலி, யாழ்ப்பாணம் என்னும் இடங்களில் எல்லாம் இலக்கண விளக்கத்தையே அனைவரும் ஓதி வந்தனர்.

அதனை ஆக்குவித்த வேங்கடேச மகிபாலனை யும் வாழ்த்தி வந்தனர் என்பது மிகையாகாது.

20. புகழ் மாலை

இன்றளவும் இம் மண்ணிலே பிறந்து இறந்தோ ரின் தொகை ஒரு கணக்கில் அடங்குமோ? கடல்மணலை எண்ணிக் கணக்கிட்டாலும், பிறந்து இறந்தோரின் தொகையைக் கண்டுபிடிக்கலாகாது.

இம் மண்ணிலே பிறந்தோரில் பலரும் இறந்த பின்பு அன்னாரின் பெயர் மறைந்தே போகின்றது. ஆயினும் ஒரு சிலர் இறந்து பட்டாலும், இன்னவ ரின் பெயர் மறைந்து போவதில்லை. இன்னவரை இறந்தும் இறவாதார் என்பர் கவிஞரும் பெரி யாரும்.

இறந்தும் இறவாத புகழ் படைத்தவர் வேங்க டேச மகிபாலர். அக்காலத்தே இருந்த புலவர் பலரும் அந்த ஐயனைக் குறித்துக் கூறியிருப்பன எத்துணையோ உண்டு. அவற்றில் சில பின்வருவன.

"உலகிலே எல்லாருடைய எண்ணங்களையும் எளிதில் உணர்ந்து, தன்னிடத்தே கொண்டு

காட்டும் தன்மையினால், கண்ணாடியே போன்றவன் அக் கோமான்.

"அரசிலே மிகவும் சிக்கலான அலுவல்களை மேற்கொண்ட காலத்தும், பெருங் குடும்பத்தின் பாரத்தை ஏற்று நின்ற சமயத்தும், அவற்றில் சிறிதும் பற்று இல்லாமல் தாமரை இலையின் நீர் போல் தோய்ந்தும் தோயாதிருப்பவன் அத் தோன்றல்.

"பெருஞ் செல்வத்தோடு பொருந்தி இருந்தும், பற்பல உறவினரோடு அளவளாவியும், அதி நேர்மையாக அரசியலை நடத்தியும், நின்றபோ தெல்லாம் மெய்ஞ்ஞான நிலையை எய்திருந்த ஜனக மகாராஜனை ஒத்தவன் அக் கொற்றவன்.

"பதினேழாம் நூற்றாண்டின் பிற் பகுதியில் வாழ்ந்து வந்தார் அம் மகிபாலன். மதுரை நாயக்க அரசு நானிலமெங்கும் நற்பெயர் எய்தியதற்கும், அருங் கலைகள் பலவும் அவ்வரசிலே வளர்ந்து ஓங்கியதற்கும் மாதை மன்னன் வேங்கடேசன் மூல புருஷராம்."

தமிழ் நூல்களிலே மாதையர் அதிபன், மாதைக்கு மன்னன், மானாபரணன், நானா கலை தெரிந்த நாகரிகன், கல்விக் கடவனையான், கண்டோர் பசி தீர்க்கும் கருணை முகத்தான், உண்மையே உரைக்கும் நாவான், நடுத்திட்டமாக நீதி வழங்கும் நேர்மையாளன் என்று அவ் வேங்கடேசன் புகழப் பெறுவார். மேலும்,

— உலகு உய்யத்

தோற்றினான், தண் அளியால் சொற்பாவலர்கலி
வெப்பு
ஆற்றினான், காவிரி ஆற்றினான், — நால் திசைக்கும்

காட்டினான் தன் புகழைக் கற்றோர் குடும்ப நிலை
நாட்டினான் சோழவள நாட்டினான் — ஈட்டும்
நிதியால் மிகுத்த நிறைவாழ்வு அளகைப்
பதியாம் தென்மாதைப் பதியான்—அதிர் திரைப்பால்
வேலையான் போல் கருணைமேன்மையான் நாவலர்பா
மாலையான் தாமரைப்பூ மாலையான்—

என்று ஒரு பிரபந்தம் பேசும். தென் ஆர்க் காட்டிலே திரு ஆமாத்தூர் என ஓர் ஊர் உண்டு. அதற்கும் தஞ்சையிலுள்ள மாத்தூருக்கும் வேற்றுமை தெரியவேண்டியே, தென்மாதைப்பதி என்றனர் புலவர். செய்யுளின் அமைப்பு நோக்கி மாத்தூர் என்பது மாதை என மருவியது.

பிரபோத சந்திரோதயம் என்னும் தமிழ் நூலில் அந்த ஐயனைக் குறித்துக் காணப்படும் இரண்டு செய்யுட்கள் இவையாம்.

பொன்னிமாநதி புடைபரந்து
ஓங்கலின் புதுப்பூங்
கன்னி வாழையும் தாழையும்
காய்குலைக் கமுகும்
பின்னி நீள் கதிர்ச் செந்நெலும்
கன்னலும் பிறவும்
மன்னிநீடிய வளவர் சோழ
நாட்டொரு வள்ளல்!
குழைக்கும் அம்பொனிற்குயற்றிய
பன்மணிக் குன்றும்
தழைக்கும் வெண்ணிலா அரமியத்
தலங்களும் தரளத்து
இழைக்கும் ஏழ் நிலை மாடமும்
கூடமும் எங்கும்
மழைக்குலந் தவழ்நெடு மதில்
மாதைக்கு மன்னன்!

அப்பாடல்களின் பொருள்:— "பெருமை பொருந்திய பொன்னி நதி எனப்படும் காவேரியாறு நான்கு பக்கங்களிலும் பரவிப் பாய்தலால், புதுமையான அழகிய இளவாழைத் தோட்டங்களும், தாழம் பூ பூக்கும் தாழைப்புதர்களும், குலை தள்ளும் கமுகு, மாந்தோப்புக்களும், நெருங்கி நீண்ட கதிர்க்கற்றைகள் தாங்கிய செந்நெல் வயல்களும், கரும்புத்தோட்டங்களும் இவை போல்வனவாகிய பிறசோலைகளும் பொருந்தி, வேளாண்மையில் சிறந்த வளவர் வாழும் சோழவள நாட்டிலே ஒரு வள்ளல் இருந்தார். அவர் யாரெனில்,

"ஒளி வீசும் பொன்னின்மீது நவரத்தினங்கள் பதிக்கப் பெற்ற செய் குன்றுகளும், மிக்க வெண்மையான பிரகாசம் வீசும் மேல் முற்றங்களும், முத்தேபோல் காந்தி பரப்பும் ஏழடுக்கு உடைய மாடங்களும் கூடங்களும் எவ்விடத்திலும் மேகமண்டலங்கள் தவழ்வதற்கு ஏற்ற உயர்ந்த மதில்களும் செறிந்துள்ள மாதை என்னும் பதியில் அவதரித்த அரசனுவான்!"

சரித்திர ஆராய்ச்சியாளரோ அவரை "மிகவும் பிரசித்தி பெற்ற பிராமண ராஜப் பிரதிநிதி" என்று கூறுவர். கன்ன பரம்பரையிலும் நாட்டுப் பாடலிலும் தமிழ் நூல்களிலும் இலை மறை காய் போல அக்கொற்றவன் காணப்படுவார். அவரைப் பற்றி இன்னும் ஆராய்ச்சி நடந்து வருகின்றது. இனி,

—மெத்த மெத்த

போஜன் சமுகம் பொலிவு என்பார், மாதை வெங்க
டேசன் சமுகத்துக்கு ஈடு ஆமோ?—ராசர் பலர்
கூடும் சமுகம், குறையாது லட்சுமி கூத்
தாடும் சமுகம் அது அன்றோ?—தேடுகின்ற

வாக்கில் வியாழம் இங்கு வந்ததென்று லோக
மெல்லாம்
காக்கும் எசமான் எதிர்போய்க் கையெடுத்தேன்—
பாக்கிய
துரந்தரா! அன்ன சத்ரசோமா! புவன
புரந்தரா! மெய்ஞ்ஞானபோதா!—நிரம்பு கொடைக்
கன்ன! கவிக்குக் கனகாபிஷேகம் செய்
மன்ன! சவுந்தரிய மன்மதா!—பொன்னாரம்
பூட்டிய மார்பா! புசபெல வீமா! விசயா!
தீட்டிய வேல் கைச் செயதுங்கா— நாட்டியதோர்
யாகாதி கர்மம் இயற்றி, இமையோர்க்கும்
ஆகாரம் நல்கும் அபிராமா!—யோக மனோ
தீரா! ரணதுங்கா! செந்தமிழோர் துன்ப பரி
காரா! அனவரத கல்யாண!—பாராளும் மானபரா!
என்று மகாராசன் கீர்த்தி என்னால்
ஆனது மாத்திரம் கொண்டாடினேன்

என்று ஒரு புலவர் பாடியுள்ளார். பாடப் பெற்றுப் பலர் மெச்ச வாழவேண்டும் என்பாள் ஔவைப்பிராட்டி.

21. முடிவுரை

தளபதி வடமலையப்ப பிள்ளையனும் மாதை மன்னன் வேங்கடேச ஐயனும் பதினேழாம் நூற்றாண்டின் முற்பகுதியிலும் பிற்பகுதியிலும் மொய்ம்புடன் விளங்கி மேன்மை யுற்றோராவர். அந்த இருவரும் தமது அறிவினாலும் திறலினாலும் ஐயன் என்னும் பட்டம் எய்தினர்.

ஆதி நாளிலே ஏனாதி என்னும் பட்டம் பெருமக்களுக்கு வழங்கப்படும். மதுரை நாயக்க மன்னவரின் காலத்திலே ஐயன் என்னும் பட்டம் சூட்டுதல் வழக்கம். ஐயன் என்றால் தலைவன், அழகன்,

அறிஞன் என்றெல்லாம் பொருள் உண்டு. அப் பொருளுக்கெல்லாம் இருவரும் பாத்திரமாகவே இருந்தனர்.

அந்த இருவரையும் குறித்த அதிசய விவரங்கள் சிறு தமிழ் நூல்களிலே சிதறிக் கிடக்கின்றன. நாட்டுப் பாடல்களிலும் கன்ன பரம்பரையிலும் அவர்களைப் பற்றிய பற்பல செய்திகள் மலிந்து தோன்றும். அவற்றை யெல்லாம் ஆராய்ந்து பார்த்து, ஊன்றி உணர்ந்தால் அன்னவரின் குண நலங்கள் பரவசம் ஊட்டும்.

அப் பதினேழாம் நூற்றாண்டிலே தமிழகத்தில் அரசியல் கொந்தளிப்பு விஞ்சிக் கிடந்தது. அக் கொந்தளிப்பை இருவரும் ஒருவாறு சாந்தி செய்து நாட்டை நன்னிலைப்படுத்திய பெருமையே பெருமை.

பண்புடையார்ப் பட்டுண்டு உலகம், அது இன்றேல்
மண்புக்கு மாய்வது மன்

என்று திருக்குறள் கூறும்.

பண்பெல்லாம் வடிவெடுத்தது போன்ற அவ் விருவரும் தமிழகத்தினுக்கு அழிவு நேராமல், ஆன்ற சிறப்பே தேடி வைத்து மக்களுக்கும் நலம் பல அமைத்து வைத்தனர். மேலைநாட்டிலிருந்து தமிழகத்தினுக்கு வந்துபோன பாதிரிமாரும் பிரயாணிகளும் அவ்விருவரின் அரசியல் நேர்மை கண்டு ஆச்சரியமே எய்த நேர்ந்தது.

இனி, அந்நாளில் நேர்ந்த அரசியல் குழப்பங் களினால் நாட்டு மக்களில் பலரும் அச் சிறு நூல்களை நன்கு சேமித்து வைப்பதில் கவனம் செலுத்த வில்லை. என்றாலும், அந் நூல்கள் அடியோடு

மறைந்து விடாமல் பதுங்கியேனும் கிடந்தமை நமது பாக்கியமே யாம்.

வடமலையும் வேங்கடேசனும் தமிழகத்தின் தவப் புதல்வரேயாம். தமிழகத்தின் பெருமையை அவர்கள் காத்ததுடன், தமிழ் மொழிக்கும் பேருழியம் புரிந்துளர்; புலவர் பலரையும் இருவரும் ஆதரித்து வந்தமையால், எண்ணிறந்த சிறு நூல்கள் தமிழன்னையின் சிற்றணிகளாகத் துலங்கலாயின.

இருவரும் ஆண்மையில் மிகுந்து, அரசு புரிந்து, அறிவாற்றல்களை வெளியிட்டு, நமக்கெல்லாம் தனிப் பெருமை தந்தோராவர். குடியரசு கொண்டு குல்வும் நாம் அவர்களின் ஆட்சித் திறன் கண்டு ஆனந்தம் அடையலாம்; அன்னவரைப் பின்பற்றி அரிய செயல்கள் ஆற்றலாம்.

தற்போதுள்ள இளைஞரே வருங்காலத்தில் மந்திரிகளாகவும், தந்திரிகளாகவும், தளவாய்களாகவும், தளகர்த்தராகவும் திகழவேண்டும். அத்தகைய இளைஞர் அனைவரும் அவ்விருவரே போன்ற பெருமக்கள் பலரைப்பற்றி அறிந்து கொள்ள இச் சிறு நூல் வழி காட்டும்.

ஒழுக்கமே உயர்வினுக்கு ஆதாரம். இருவரும் ஒழுக்கத்தில் உயர்ந்தோர், தெய்வபக்தியில் சிறந்தோர், தர்மத்திலே பற்றுடையோர்; பக்தியும் தர்மமும் நாட்டிலே நிரம்ப நிரம்ப, மக்களின் வாழ்வு சோபிக்கும் அல்லவா?

சுபம்!